[illegible]

[illegible] 23 [illegible]

17 Sep 1937

X

[illegible]211, N15AD

N137.23.3

182532

16

Regd. No. M. 1190. 1937 Sept. ஈசுவர புரட்டாசி

ஆனந்தபோதினி

REGD. NO. M. 1190.

ANANDA BODHINI

Vol. 23. பொருளடக்கம். No. 3.

8-OCT 1937

	பக்கம்
1. கடவுள் வணக்கம்	
2. ஹிந்தி கட்டாயப் பாடப் பிரச்சினை, தமிழர் கடமை	163, 167
3. உலக சமாதானம் சா...	169
4. பாரதியின் பாட்டோவியம்	172
5. "வாழ்க்கை இன்பம்." ...	177
6. பிரதிக்ஞை, ஔவையார்	183, 187
7. வைத்தியம் ...	193
8. பழமையிற் புதுமை ...	197
9. உலகம்—ஒரு நாடக மேடை	200
10. சிறு வேதாந்தி ...	206
11. மாணவர் பகுதி ...	209
12. கணவன் பெயரைக் கூறலாமா?	213
13. தமிழ்நாட்டில் ஹி... பயிற்சி	215
14. பொருள் நூல், தோத்திரம்	218, 221
15. நமது வாணுளில் ...	223
16. விசித்திர விநோதம் ...	225
17. ஆசிரியர் குறிப்புக்கள் ...	229

“ ஆனந்தபோதினி ”

சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட	இந்தியா, ஸிலோன்	1—0—0
	பர்மா, பினங், ஸிங்கப்பூர் தென் ஆப்ரிக்கா, பசரா, மெசபொடேமியா முதலிய வெளி நாடுகளுக்கு	2—0—0
நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை		0—2—0
சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை விலை		0—3—0

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் **பூரணமாகப் பெயரை** எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தாத் தொகையை முன்னடிச் செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாஃ முதல்தான் கணக்கு வைக்கப் பட்டு ஆடிமாத சஞ்சிகை முதல், பத்திரிகை அனுப்பப்படும்.

☞ (3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 8-அணுவோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணு வாகையால்) அந்தக் கமிஷன் 2-அணு, வி. பி. க்குத் தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-5-6-அதாவது 6-அணு சேர்த்து ரூபா 1-6-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினல் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னடி மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம் மாதம் 15-ம் தேதி வரையில் பார்த்து அதற்குமேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரைய மனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில் லையாவது அனுப்பினாலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாக வும் எழுதவேண்டும்.

Life Subscription ஜீவிய சந்தா	இந்தியா, சிலோன்	ரூபா	15—0—0
	பர்மா, முதலிய வெளிநாடுகளுக்கு	,,	25—0—0

Telephone No. 3005. *Telegram* :—“ Ananda Bodhini ”, Madras.

விலாசம்:— நா. முனிசாமி முதலியார், “ஆனந்தபோதினி”

ப, லாயர் சின்னதம்பி முதலி தெரு, தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

ஸ்ரீமத்

விவேகானந்த சுவாமிகள்

விரிவான திவ்ய சரித்திரம்

(2-ம் பதிப்பு) **இதன் விலை ரூ. 4.**

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 3.

சுவாமிகளின் அதியற்புதமான சரித்திரமும், அரிய உபதேசங்களும் அனுபவசாரமான கடிதங்களும், மேலான பிரசங்கங்களும் இடையிடையே விளங்குகின்றன. சுவாமிகள் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய பிரதேசங் களில் பிரசாரம் செய்து வேதாந்த விஷயங்களை விரிவாக உபன்யசித்து ஹிந்து மதத்தை நிலைநாட்டியது இதில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு விரிவான சரித்திரம் இதுவரை ஏவராலும் வெளியிடப்பட வில்லை.

ஆனந்தபோதினி ஆபீஸ்,

தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஓர் சிறந்த தமிழ்நூல் வெளியீடு

நாலடியார் மூலமும்

விரிவான உரையும்.

செம்பூர் வித்வான்-வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்களைக்கொண்டு இந்நூல், மிகத் தெளிவாகவும், விரிவாகவும் பழைய உரைகளையும் தழுவிப் புதிதாக எழுதப்பட்ட சிறந்த உரையுடன் இப்போது வெளிவந்திருக்கிறது.

இந் நாலடியார் என்னும் நூலானது, ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் கடைச்சங்க காலத்தில், பாண்டியனிடம் வந்திருந்த ஜைன முனிவர் பலரால் தனித்தனி வெண்பாக்களாக இயற்றப்பட்டு பின்னர் அப்பாண்டியனால் தொகுக்கப்பட்டுப் பெயரிடப்பட்ட சிறந்த நீதி நூலாகும். உலகத்தில் பல தேசத்தாராலும், பல சமயத்தாராலும் கொண்டாடப்படும் திருக்குறளோடு ஒப்புமை யுடையது, உலகத்தார் பலருக்கும் பொதுவாகப் பற்பல நீதிகளை எடுத்துரைக்கக் கூடியது. உலகத்தில் மனிதர்க்குப் பயன்தரத் தக்க நூல்களில் இது சிறந்ததாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இது முதன்மை பெற்றதாகும். மனிதர் அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கினையும் அடைதற்கு இந்நூல் நல்ல வழிகாட்டி யாகும். மாணவர்களும், மற்றவர்களும் அவசியம் படிக்கத் தக்க நூலாகும்.

இதற்குப் பிற்காலத்தில், 'பதுமனார்' என்னும் சிறந்த புலவரொருவர், பால், இயல், அதிகாரம் என்னும் பாகுபாடுகளைச் செய்து சிறந்த உரையொன்றும் இயற்றி யிருக்கின்றார். வேறு சில சிறந்த புலவர்களும் சில உரைகள் எழுதியிருக்கின்றார்கள்.

இது, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையும், பதினொரு இயல்களையும், நாற்பது அதிகாரங்களையும், நானூறு செய்யுட்களையு முடையது.

இந்நூலுக்கு, முன் பதுமனார் முதலியவர்களால் இயற்றப்பட்ட சில உரைகள் இருப்பினும், அவ்வுரைகள் சிறந்த கல்வி யறிவுடையாரே படித்துணரத் தக்க பழந்தமிழ் நடையில் அமைந்திருப்பதாலும், ஆரம்பக் கல்வி யுடையாரும், சாமானியக் கல்வி யுடையாரும் தக்க ஆசிரியரிடம் பாடங்கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடியனவா யிருப்பதாலும் எவரும் தாமே படித்துணரத் தக்க விதத்தில் இக்காலத்திற்கேற்ப எளிய தமிழில் தெளிவான உரையொன்று எழுதி வெளியிட வேண்டுமென்று பலர் எம்மிடம் கேட்டுக்கொண்டதற்கிசைந்து, அவர்கள் விரும்பிய விதமாகவே இவ்வுரை எழுதி வெளியிடப் பெற்றிருக்கிறது. இதில் பதவுரையும், கருத்துரையும், விசேடவுரையும் எவர்க்கும் சந்தேக முண்டாகாதபடி பொருள்களை நன்கு விளக்கிக் காட்டி மிகத் தெளிவர்க எழுதப்பட்டிருக்கின்றன. பழைய உரைப் பகுதிகள் மிகத் தெளிவாக விரித்தெழுதப்பட்டிருக்கின்றன. நூல் அமைப்பிற்கு விரோத மாகவும், முன்னுக்குப்பின் முரணாகவும் பொருள்பட்டுச் சந்தேகங்களை விளைவித்துக் கொண்டிருந்த உரைப்பகுதிகளில் ஐயம் நீங்குமாறு பொருத்தமான பொருள்கள் விளக்கப்பட் டிருக்கின்றன, புதிய உரைகளும் அங்காங்கே விரித்தெழுதப்பட் டிருக்கின்றன, சில செய்யுட்களின் சரியான பொருள் விளங்காமல் மயக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த உரைகள், வேறு நூல்களின் ஆதாரங்களைக்கொண்டு சந்தேகம் நீங்கச் சரியான விதத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேறுநூல்களில் விளங்காதிருந்த பொருள் இந்நூற் செய்யுளின் ஆதாரத்தைக்கொண்டு விளக்கப்பட் டிருக்கின்றன. இதுவரை இந்நூலுரைகளிற் காட்டப்படாத பற்பல சிறந்த கருத்துக்கள் இவ் வுரையில் நூதனமாக எழுதப்பட் டிருக்கின்றன. இந்நூற் முதற்செய்யுளுரையில் ஜைனமதக் கோட்பாடுகள் மிகத் தெளிவாக எடுத்தெழுதப் பட்டிருக்கின்றன. பல கல்விமான்களும், ஜைனர்களும் நாளடைவில் இப்பாடல்களுக்குத் தெரிவித்துவந்த அரிய உரைகளும் இப்புதிய வுரையில்காட்டப்பட்டிருக்கின்றன. இலக்கணக் குறிப்புக்களும், இலக்கியக் குறிப்புக்களும், தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல் சூத்திரங்களின் உதாரணங்களாலும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், கலித்தொகை, நீலகேசி, சூடாமணி நிகண்டு, பழமொழி, அறநெறிச்சாரம், திருநூற்றந்தாதிமுதலிய இலக்கிய நூற் செய்யுட்களின் உதாரணங்களாலும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் இவ்வுரையில் செய்யப்பட்டிருக்கும் திருத்தமான வேலைகள் பல.

இதுவரை, நாலடியாருக்கு இத்தகைய தெளிவான உரை வெளிவந்ததில்லை என்பது இதைப் படித்துப் பார்ப்பவர்க்கு நன்கு விளங்கும். இது டபுள்கிரௌன் 16-பேஜ் அளவில் 51-பாரங்களுக்கு மேற்பட்டும் 820-பக்கமுள்ளதாகவும் அச்சிடப்பட் டிருக்கிறது. தமிழர் ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் படிக்கத்தக்கது.

இதன் விலை ரூபா 2—8—0.

சே. இராஜு செட்டியார், எம்.பி,. பி ஐ., அவர்கள் இயற்றியவை.

சந்திரசேகரி.

(இரண்டாம் பதிப்பு)

எளிய இனிய நடையில் எழுதப்பட்டது. உலகானுபவமும் இலக்கண அறிவும் விசேஷமாகக் கொண்டது; அன்பின் மகிமை, பொறுமையின் பெருமை, கேடு நினைப்போர் கெடுவர், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் முதலிய பல அரிய விஷயங்கள் இதில் விளக்கமாகவும் படிப்போர் மனதைக் கவரக்கூடியதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. அறிவை விருத்தி செய்யக் கூடியதும் இதுவே.

இதன் விலை ரூபா 1—1—0

காதலி? ஒரு இனிய அருமையான தமிழ் நாவல்.

இதில் நவீன நாகரிகம், காதலின் வெற்றி, 'அவனன்றி ஓரணுவும் அசையாது', 'விதியின் வலி' [illegible] நீதிகள் செல்வர்களின் ஆடம்பர வாழ்க்கை, சீர் [illegible] பல அரிய அறிவைப் புகட்டும் அதியற்புத [illegible] அடங்கியிருக்[illegible]

இதன் [illegible]லை ரூ. 1.

187532

ஆனந்தபோதினி [illegible] 167, மதராஸ்.

கைவல்ய நவநீத வசனம்

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும்பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூற்களை இயற்றியிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை செய்யுளாகவும் மிக்வும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம். விலை ரூபா 1–8–0.

தபால் கொள்ளைக்காரர்கள் அல்லது

அந்தரக் களவு. (2-ம் பதிப்பு)

(மிக்க அபூர்வமான துப்பறியும் நாவல்.)

இதில் கல்வியும் புத்தி சாமர்த்தியமுமுடைய ஒருவன் இரயில்வே தபால் இலாகாவில் இருந்துகொண்டு ஒருவரும் கண்டறியாதபடி கொள்ளையடிப்பது மிக்க வியப்பாக விருக்கும். துப்பறிபவன் அக்கொள்ளைக் கூட்டத்தாரிடம் சிக்கிக்கொண்டு தப்புவதும், கடைசியில் அவன் இக்கள்ளரைப் பிடிக்கக் காட்டும் சாமர்த்தியமும் பின்னும் வியப்பை யளிக்கும். இது காணயமான கடிதத்தில் அச்சிடப்பட்டது.

இதன் விலை அணா 14.

ஞானகாந்தி

செ. இராஜு செட்டியார், எம்.பி. பிஜ., அவர்கள் இயற்றியவை.

கற்பின் ஜோதியாக விளங்கும் ஞானகாந்தி என்னும் இக் கதா நாயகியின் பதிபக்தி, அறிவு, ஆற்றல், பொறுமை, தன்னடக்கம், பிறர் துயரம கண்டிரங்கல், பரோபகாரம் முதலியவை பல அத்தாட்சிகளோடு அனைவரும் படித்து ஆனந்திக்குமாறு வரையப்பட்டிருக்கின்றன. இதற்கு எல்லாவிதத்திலும் நேர்மாறான நடத்தையுள்ள அம்புஜம் என்னும் ஸ்திரீயின் போக்கு மிகவும் கேவலமாயிருந்தும், கடைசியில் நல்லுணர்வுபெற்று சீர்திருந்தி சாந்தமடைவது எல்லோருக்கும் சிறந்த நீதியைப் போதிக்கும்.

இதன் விலை ரூ. 1–6–0. ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு விலை ரூ. 1.

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஜீவப்பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யம்.



கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்வரர்

கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வர ரவர்களால் எழுதப்பெற்ற 10-ம் பதிப்பு "ஜீவப்பிரமைக்ய வேதந்த ரஹஸ்யம்" என்னும் நூலில் வேதங்களினுடையவும், ருஷிகளினுடையவும், அரும் பெரும் ரகஸ்யங்களை யெல்லாம் திரட்டி, வேதங்கள், உபநிடதங்கள், ஸ்ரீ பகவத்கீதை இன்னும் அரிய பெரிய கோளாய் எடுத்துக் காட்டி யாவரும் உணருமாறு மிக எளிய நடையில் எழுதியுள்ளார்; இதன்றியும் கடவுள் எப்படிப்பட்டவர்; அவர் எங்கு என்ன ரூபத்துடன் இருக்கின்றார்; அவரை அறிவது எப்படி என்பதையும் தெரிவித்திருப்பதுமே யல்லாமல், கோவில்களிலுள்ள மூல விக்கிரகங்களாகிய சுவாமிகளுக்கு தேங்காய்களை உடைத்துக் கற்பூரமேற்றி, என் கும்பிடவேண்டுமோ அதன் ரகஸ்யமும் இன்னும் அநேக ரகசியங்களையும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஷை யோகீஸ்வரர் அவர்களால் எழுதிய நூல்கள்.

	ரூ.	அ.
அனேக தேவ ரகஸ்யங்களும், அநேக படங்களும் அடங்கிய பத்தாம் பதிப்பு "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" உயர்ந்த காலிகோ பைண்டு	4	0
மேற்படி நூல் இங்கிலீஷ் முதற்பாகம்...	2	8
"ஜீவப் பிரம்மைக்ய ராஜயோக சாராம்ருதம்" தெலுங்கு 5-ம் பதிப்பு	4	4
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை நான்காம் பதிப்பு	2	4
மேற்படி தெலுங்கு பகவத்கீதை	2	4
ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம் மூன்றும் பதிப்பு	2	4
மேற்படி தெலுங்கு கபீர்தாஸ் சரித்திரம்	2	4
யோகாப்பியாசம் செய்ய வேண்டிய முறைகளை உபதேசிக்கும் நூல்	1	8
மாயையின் ரகஸ்யார்த்தம் வெளிப்படுத்தி மனதை நிறுத்தும் நூல்...	0	8
தத்துவ பரிசோதனை அன்னதான பலன் என்னும் நூல் 3-ம் பதிப்பு	0	6
சரீர தேவாலய ரஹஸ்யார்த்த பாரிஜாதம் இது மிகவும் சிரேஷ்டமான நூல்	0	8
மேற்படி தெலுங்கு சரீர தேவாலய பாரிஜாதம்	0	6
இந் நூலாசிரியரின் பூர்வ ஜன்ம இச் ஜன்ம சரித்திரம் 3-ம் பதிப்பு	0	6
மனோ ஓட்டத்தை நிறுத்திக் காட்டும் நூல்	0	4
மேற்படி மனோ ஓட்டத்தை நிறுத்திக் காட்டும் நூல் இங்கிலீஷ் ...	0	4
ஸ்ரீ சச்சிதானந்தர் தமிழ்ப் பாமாலை	0	4

ஆனந்தபோதினி ஆபீஸ்,

தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

அரும்பொருள் விளக்கம்

1. (இ-ள்.) திருவொற்றியூர் என்னும் திருப்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பெருமானே! அழுக்கடைந்த தேகத்தோடு உன்னுடைய திருவடிகளையே தஞ்சமாக வந்தடைந்தேன்; இவ்வித இழி நிலைமையையும் அடியேன் அநுபவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது; ஆயினும், மெய்ஞ்ஞான சொரூபனே! பால் கறப்பவர்கள், பால் கறக்கையில் பிழுக்கை விழுந்தால், அதை வாரியெறிந்துவிட்டு, பாலையெடுத்துக்கொள்வதுபோல, நான் உண்மையிலேயே தவறு செய்திருப்பவனாயினும், உன் திருவடியைப் பற்றுக்கோடாகக் கொள்வதில் எப்போதும் தவறமாட்டேன்; கால் வழுக்கித் தவறி விழுஞ் சமயத்திலும் உன்னுடைய திருப்பெயரை யுச்சரிப்பேனே யன்றி, வேறு ஒரு வார்த்தையுஞ் சொல்ல எனக்குத் தெரியாது; ஆகையால், (நான் செய்த தவறுகளைப் பெரிதாகக் கருதாது மன்னித்து) நீர் ஒழுகும் எனது அஞ்ஞானக் கண்களுக்கு (ஞானச் சுடராகிய உன்னைக் காண) ஒரு மருந்தைக் கூறுவாயாக. (எ-று.)

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களால் ஆக்கப்பட்டதாதலாலும், அப் பாச பந்தத்தால் பற்றப்பட்டு பாவகாரியங்களைச் செய்தற்குக் கருவியாயிருப்பதாலும் 'அழுக்கு மெய்' என்றார். 'இருக்கினும் நிற்கும்போதும் இரவுகண் துயிலும்போதும், பொருக்கென நடக்கும்போதும் பொருந்தியூண் துய்க்கும்போதும், முருக்கு இதழ் கனிவாயாரை முயங்கி நெஞ்சு அழியும்போதும், 'நமசிவாய' என்னும் இறைவன் திருப்பெயரை மறப்பதில்லை யென்பார், 'வழுக்கி வீழினும் திருப் பெயர் அல்லால் மற்று நான் அறியேன் மறுமாற்றம்' என்று அழுத்தமாகக் கூறினர். மற்றொரு சமயாசாரியாரும், "நற்றவா உன்னை நான் மறக்கினும் சொல்லும்நா நமசிவாயவே" என்று ஓதியிருப்பதும் இங்கு ஒப்பிட்டு கவனிக்கத்தக்கது.

2. (இ-ள்) சங்கும், கிளிஞ்சலும் நீரோடு நீராக உருள, வயிரம் பாய்ந்த கெட்டிமுத்தும் பொன்னும் நவமணியும் கலந்து புரள, கொந்தளிக்கும் பெருங்கடலின் அலைகள் ஒன்றோடொன்று மோதி உலவும் திருவொற்றியூர் என்னும் திருப்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பெருமானே! கங்காதேவி வீற்றிருக்கும் சடாபாரத்தை யுடைய தித்திக்கும் செங்கரும்பே! அக் கருப்பஞ் சாற்றில் செய்யப்பட்ட கற்கண்டே! உலகிலுள்ள ஆன்மாக்களுக் கெல்லாம் ஆதார புருஷனே! அழகிய கையிலிருக்கும் நெல்லிக் கனியைப் போல, அப் பழத்திலூறியிருக்கும் தெள்ளமுதமே! தலைவா! அடியேனது துயரை உன்னிடத்தன்றி வேறு யாரிடத்துப் போய் எடுத்துக் கூறுவேன். (எ-று.)

3. (இ-ள்) திருவொற்றியூர் என்னும் திருப்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பெருமானே! மானைப் போன்ற மருண்ட பார்வையுடைய மகளிரது சேல்விழியாகிய வலையில் சிக்கி வாடி வருந்தி யான் அடைந்த கொடிய தீவினைக்குப் பயந்து, தேன் ததும்பிய கொன்றை மாலையணிந்த பரமசிவனே! உன் சீலத்தையும், குணத்தையுஞ் சிந்தித்துப் பாராது நான் இவ்வளவு தூரம் வேண்டிக் கொள்ளுகிறேன்; அடியேன் உயிரோடு நரகத்தில் அழுந்தி வருந்தாவாறு, என்னிடத்தில் ஊனங்களாக உள்ளவற்றை யெல்லாம் நீக்கித் திருவருள் புரிவாயாக. (எ-று.)

ஆனந்தபோதி

ஈசுவர ஹூ

புரட்டாசிமீ 1௨

ஹிந்தி கட்டாய பாடப் பிரச்சினை

நமது தமிழ்நாட்டில் சில நாட்களாகக் கல்வி சம்பந்தமான ஒரு முக்கிய பிரச்னை அறிஞர்களிடையே பலமாக விவாதிக்கப்பட்டு வருவது வாசகர்கள் அறிந்திருக்கலாம் அப் பிரச்சினை என்ன? உயர்தரப் பாடசாலைகளில் முதல் மூன்று பாரங்களிலும் ஹிந்திமொழியைக் கட்டாய பாடமாக வைக்கவேண்டுமென்பதே யாகும். இவ் விஷயத்தை முதன்மந்திரி கனம் இராஜகோபாலாசாரியார் முதன்முதலாக மைலாப்பூர் இராமகிருஷ்ண மாணவர் இல்லத்தில் நடந்த கூட்டமொன்றில் பிரஸ்தாபித்தார். அதன் பயனாக, தமிழ்நாடெங்கும் பெருத்த கிளர்ச்சி யேற்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக நாடோறும் பொதுக் கூட்டங்களிலும், பத்திரிகைகளிலும் பல அறிஞர்கள் சாதக பாதகமான அபிப்பிராயங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைப்பதை ஆதரிப்போரைப் பற்றி இங்கு பேச்சேயில்லை. ஏனென்றால், அவர்களெல்லாம் கனம் இராஜகோபாலாசாரியார் என்ன காரணங் கூறுகிறாரோ அதை வேதவாக்காகக் கருதுபவர்களாவர். ஹிந்தி கட்டாய பாடமாதலை எதிர்ப்போர் பலதிறக் கருத்துடையா யிருக்கின்றனர். அக் குழுவினருள் முக்கியமாக இரு பிரிவினரை மட்டும்தான் நாம் இங்கு குறிப்பிட விரும்புகிறோம் ஒரு சாரார், 'ஹிந்தி கட்டாய பாடமாக வைக்கப்பட்டால் தாய்மொழி வளர்ச்சிக்குப் பாதகம் நேரிடுமோ' எனப் பயப்படுபவர்களாவர். பிறிதொரு கோஷ்டியார், 'ஏற்கனவே மாணவர்களுக்கு அவர்கள் தாங்க முடியாத அளவு பல விஷயங்கள் பாடங்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றோடு ஹிந்தியையுங் கட்டாய பாடமாகவைப்பது முறையன்று' என்று கூறுபவர்களாவர். இவ்விரு திறப்பட்ட அபிப்பிராயங்களும் கவனிக்கப்படத் தக்கதேயாகும். இவ்வித அபிப்பிராயங்களை வெளியிடுபவர்கள் சாதாரணமானவர்களல்லர். பல மொழிகளிலும் வல்லவர்கள்; கல்வித் துறையில் ஈடுபட்டு

பல வருடங்களாகச் சேவை செய்து வருபவர்கள். பிரம்மஞான சங்கத்தைத் தோற்றுவித்து உலகமெங்கும் பரவச் செய்த அன்னிபெஸண்ட் அம்மையாருடன் சேர்ந்து பல வருடங்களாகக் கல்வி முன்னேற்ற விஷயமாகப் பாடுபட்டு வருபவரும், தற்போது பிரம்மஞான சங்கத்தின் தலைவரா யிருப்பவருமான டாக்டர். அருண்டேல் என்ன! சிறந்த வழக்கறிஞரும், அண்ணாமலை சர்வகலாசாலைப் பேராசிரியருமான உயர்திரு. எஸ். சோமசுந்தர பாரதியார் எம் ஏ., பி. எல்., என்ன! திருவாளர்கள் கே. சுப்பிரமணியம் பிள்ளை எம். ஏ., எம். எல்., பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் முதலிய பேரறிஞர்கள் என்ன! இப்பெரியார்களெல்லாம் ஹிந்தி கட்டாய பாடமாதலை எதிர்க்கிறார்கள் என்றால், அதற்குத் தக்க காரணங்கள் இல்லாமலிருக்க முடியாது.

திரு. சோமசுந்தர பாரதியார் போன்ற பேரறிஞர்கள், ஹிந்தி கட்டாய பாடமானால் நம் தாய் மொழியாகிய தமிழ் மொழியின் வளர்ச்சி குன்றும் என்று பயப்படுவதற்கு இடமிருக்கிறது. ஏற்கனவே ஆங்கிலத்தாலும், அதுபோன்ற அயல் மொழிகளாலும் நம் தமிழ்மொழி நசுக்கப்பட்டு வளர்ச்சி கெட்டு வந்திருக்கிறது. இது அனுபவத்தில் கண்ட உண்மையாகும். ஆகவே, இப்போது ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைப்பின் தமிழ் மொழியின் நிலை என்னாமோ? என்று தமிழ்மக்கள் பலர் அஞ்சுவது இயல்பேயன்றோ!

தற்போது எல்லா பள்ளிக் கூடங்களிலும் அரசாங்க மொழியாகிய ஆங்கிலம் முக்கியமாக—அதாவது கட்டாய பாடமாக-வைத்துக் கற்பிக்கப்படுகிறது. அத்துடன் நாட்டு மொழி என்று வேறொரு மொழி கற்றுக் கொடுக்கப்படுகிறது. அது தமிழ் மொழியாகவும் இருக்கலாம்; சமஸ்கிருதமாகவும் இருக்கலாம். தமிழ்மொழிதானிருக்க வேண்டுமென்ற விதியில்லை. இவ்விதம் தாய்மொழி கட்டாய பாடமாக வைக்கப்படாம லிருக்கும்போது, ஹிந்தி மொழியைக் கட்டாய பாடமாக வைக்க முயற்சி செய்வதென்றால், தமிழ்மொழி வளர்ச்சியில் ஆர்வ முடையவர்களுக்கு மனக்குறை யேற்பட்டதில் ஆச்சரியமொன்றில்லை.

காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர்-திரு. கா. நமசிவாய முதலியார் போன்ற பெரியார்கள் தமிழ் மொழியைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென்று கல்வியிலாகா அதிகாரிகளுக்கும், அரசாங்கத்துக்கும் பல வருடங்களாக முறையிட்டு வந்தனர். இதன் பயனாக, சில வருடங்களுக்கு முன், ஆங்கிலபாடம் நீங்கலாக, மற்ற விஷயங்(பாடங்களைத் தமிழில் போதிக்கலாம்; மாணவர்களும் தமிழில் விடையெழுதலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், அவ்விதி இதுவரை அமுலுக்கு வந்ததாக நமக்குத் தெரியவில்லை. எனவே, முதலில் தமிழ் மொழியைக் கட்டாய பாடமாக்குவதும், சகல பள்ளிக்கூடங்களிலும் ஆங்கிலம் நீங்கலாக மற்றெல்லாப் பாடங்களையும் தமிழில்

போதிக்கும்படி செய்வதும் மிக இன்றியமையாததாகுமன்றோ! இவ்விதம் தாய்மொழி வளர்ச்சிக்கான செயல்கள் செய்ய வேண்டியது நமது காங்கிரஸ் மந்திரிகளின் முதற் கடமையாகும். அவ்விதம் தலையாய கடமையைச் செய்யவேண்டிய காங்கிரஸ் மந்திரிகள் அதைக் கவனியாது, எடுத்த எடுப்பிலேயே ஹிந்தியைக் கட்டாய பாடமாக்க முற்பட்டிருப்பதுதான் ஒரு சிலருக்குச் சந்தேகத்தை யுண்டுபண்ணியிருக்கிறது.

மகாத்மாகாந்தியும், அவரைப் பின்பற்றும் மற்ற தலைவர்களும் இந்தியாவுக்குப் பொது மொழியொன்று இருக்க வேண்டியது அவசியமாகும் என்று சுமார் இருபது வருஷங்களாகவே கூறி வருகின்றனர். அவர்கள் கூறுகிறபடி, இந்தியாவுக்கு அதன் பல பாகங்களிலுள்ள பல்வேறு மக்களும் பேசுவதற்கு ஒரு பொதுமொழி அவசியமானதே என்பதை யாரும் மறுக்கமுடியாது இந்தியா நாம் விரும்புகிறபடி சுயராஜ்யமடைந்தால், இப்போது வழங்கும் ஆங்கிலத்துக்குப் பதிலாக ஒரு பொதுமொழி யிருக்க வேண்டியது அவசியமேயன்றோ! அரசியல் நடவடிக்கைகளுக்கும் எல்லா மாகாணங்களிலுள்ளவர்களெல்லாம் ஐக்கிய மடைவதற்கும் வியாபார முதலியன நடத்துவதற்கும் பொது மொழியொன் றில்லாவிடில் முடியாது. அப்படியானால் எம்மொழி பொது மொழியாவது? இந்தியாவிலேயே மற்றெல்லா மொழிகளையும்விட, ஹிந்தியே பெரும்பாலோரால்—அதாவது ஏறக்குறைய 22 கோடி மக்களால்—பேசப்படுகிறது; ஆதலால், மகாத்மா காந்தி ஹிந்தியையே பொதுமொழியாக்கி யிருக்கிறார். ஆகவே, அந்த ஹிந்தி மொழியை இப்போதிருந்தே பயின்று வரவேண்டியது அவசியமேயாகும். அதைப்பற்றி யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். தக்ஷிண ஹிந்தி பிரசார சபையார் நமது நாட்டில் சென்ற இருபதுவருட காலமாக ஹிந்தியைப் பரவச்செய்ய முயன்று பலருக்கும் போதித்து வருகிறார்கள். ஆனால் ஹிந்தியைக் கட்டாயபாடமாக வைக்க வேண்டியது அவசியமா? விருப்பப் பாடமாக (Optional subject) வைத்து மாணவர்களுக்குப் போதிக்கக் கூடாதா? என்பதே இப்போது திரு. சோமசுந்தர பாரதியார் போன்றவர்களுடைய கேள்வியாகும்.

இவ்வித எதிர்ப்புக் கிளர்ச்சிகள் பலப்பட்ட பிறகு, கனம் இராஜகோபாலாசாரியார், இவற்றிற்கெல்லாம் பதிலளிக்கு முறையில் பல இடங்களில் பேசி வருகிறார். டாக்டர் டி. எஸ். எஸ் ராஜன், கனம் எஸ். ராமநாதன் முதலிய போன்ற மந்திரிகளும் இதை யொட்டிப் பேசிவருகின்றனர்.

முதன்மந்திரி கனம் ராஜகோபாலாசாரியார், தாம்பரம் கிறிஸ்தவக் கலாசாலையில் மாணவர் கூட்டத்தில் பிரசங்கஞ் செய்தபோது,

"நமது வாழ்விலே, நமது மனோ உணர்ச்சிகளை அப்படியே வெளியிடத் தாய் பாஷை எவ்வளவு முக்கியமாக விருக்கிற தென்பதை உணராதிருப்பது மிகவும் துக்ககரமாகும்.

நமது தாய் பாஷையில் போதிய பதங்கள் இல்லை என மதிப்பது தவறு. அப்பாஷையை நாம் உபயோகிக்காததால் அது படிப்படியாக க்ஷீணித்து வருகின்றது. தாய் மொழியைப்போல அவ்வளவு சுலபமாகவும் சரியாகவும் நமது உணர்ச்சிகளை வேறெந்தப் பாஷை மூலமும் வெளியிட முடியாது. ஷேக்ஸ்பியர் நாடகத்தைக் கூட தாய் மொழியில் மாணவர்களுக்கு மேலாகக் கற்பிக்கலாம்.

கணக்கு, ரஸாயன சாஸ்திரம் முதலியவைகளையும் எம். ஏ வரையிலும் கூடத் தமிழிலேயே கற்பிக்கலாம். மேல் வகுப்புக்களில் எல்லாப் பாடங்களையும் தாய் மொழியிலேயே கற்பிக்கவேண்டும். இப்பொழுது கீழ் வகுப்புக்களில் சில பாடங்களைத் தமிழில் கற்பிக்கின்றனர். ஆனால் மேல் வகுப்புக்களில் எல்லாம் இங்கிலீஷிலேயே கற்பிப்பதால் கீழ் வகுப்பு மாணவர்கள், தாய்மொழி ஏற்பாடு தற்காலிகமானதே யென்றும், சில வருஷங்கள் கழித்து எல்லாம் இங்கிலீஷ் மூலமே கற்பிக்கப் படுமென்றும் எண்ணி, தமிழ்மொழியை ஒருவித அலட்சியத்துடன் மதிக்கின்றனர் ஆகையால்தான் மேல் வகுப்புக்களிலும் தாய்மொழி மூலமே பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டுமென்று நான் கூறுகின்றேன்......................"

"தென்னிந்தியர்கள் ஹிந்துஸ்தானியிலே பண்டிதர்களாக வேண்டுமென்று நான் சொல்லவில்லை தாய்மொழியாகிய தமிழுக்குப் பதிலாக வேறொரு பாஷையை வைக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை அவ்வித யோசனையையும் நான் கண்டிப்பாக எதிர்ப்பேன். ஆனால், இந்திய தேசீய சமுதாய பிரஜைகளுக்குப் பொதுப் பாஷையான ஹிந்துஸ்தானி அவசியமாகும். இந்தியா வெங்கும் வேலை பெறுவதற்கும் பொதுஜன சேவை செய்வதற்கும் ஹிந்தி பாஷையில் பழக்க மிருக்கவேண்டியது அவசியம்."

என்று குறிப்பிட்டுப் பேசி யிருக்கிறார். இப்பிரசங்கம், ஹிந்தி கட்டாயபாட மாக்குவதால், தமிழ்மொழி வளர்ச்சி குன்றும் என்று பயப்படுபவர்களுடைய சந்தேகங்களை ஒருவாறு போக்கும் என்று நம்புகிறோம்.

சமீபத்தில், சென்னை தியாகராய நகர் ரங்கசாமி ஐயங்கார் ஞாபகார்த்த மண்டபத்தில் கல்வி யபிவிருத்தியில் கருத்தும் கல்வியிலாகாவில் சம்பந்த முமுடைய பெரியார்கள் கூட்டம் ஒன்று கனம் ராஜகோபாலாசாரியார் தலைமையில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் ஹிந்தி கட்டாய பாடமாக வைக்கப்படுதலைப் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

(176-ம் பக்கம் பார்க்க.)

தமிழர் கடமைகள்

(ஆசிரியர். எம். எஸ். சுந்தரேச ஐயர்.)

அறுசீராசிரிய விருத்தம்.

தேம்பழம் கண்டு சீனித் தேனுவின் பாலுங் கைக்கும்
தீந்தமிழ்ச் சுவையை யோராத் திருவிலாப் பரத நாட்டீர்!
மாந்தர்கள் உலகில் யாரும் மாண்புடன் தமிழைக் கற்கச்
சாந்தனை யுழைத்து நீவிர் தமிழர்நா டாக்கு வீரே. (1)

நம்முடை நாட்டுப் பண்டை நூல்களை நலமாய்க் கற்றச்
செம்மையோ ரவரைப் போற்றாச் சீரிலா பரத நாட்டீர்!
நம்முடை தமிழைப் பேணி நம்மவர் மனங்களிக்கச்
செம்மையாய்க் கடனையாற்றிச் செல்வ நாடாக்குவீரே. (2)

அத்தையும் பாட்டி மாரும் அகத்தினில் வியக்கும் வண்ணம்
இத்தரை மீது நூலை இயற்றிடும் பரத நாட்டீர்!
வித்தகர் வியக்கும் வண்ணம் மேன்முறை யாளர் நூலைச்
சுத்தவா ராய்ச்சி செய்து தூய்மைநா டாக்கு வீரே. (3)

ஆங்கிலம் வல்லோர் நாளு மளவிலா தனத்தைக கொள்ள
ஆங்கதைப் பார்த் திருக்கும் ஆண்மையில் பரத நாட்டீர்!
பாங்குறு நமது தேசப் பாஷையி னுயர்வைக் காட்டித்
தீங்கிலா அறப்போர் செய்து தீரநா டாக்கு வீரே. (4)

அன்னிய நாட்டா ரெல்லாம் அருந்தமி ழதை யவாவ
மன்னிய கீர்த்தி யின்றி வாடிடும் பரத நாட்டீர்!
தன்னிலை யறிந்தான் நாளுந் தரணியி லுழைததல் போல
இன்னையே சோர்வைத் தள்ளி இன்பநா டாக்கு வீரே. (5)

தேனிசைப் புலவரென்று "டெனிஸனைப்" புகழ்ந்து கூறி
மானிலத் துவகை கூரும் மாண்பிலா பரத நாட்டீர்!
மேனிலைக் 'கம்ப' ராதி வித்தகர் நூலைப் பார்த்து
நானிலத் துவகை கூரி நல்லநா டாக்கு வீரே. (6)

செந்தமிழ் ஞானத் தோடு சிறந்தநல் 'பி. ஏ.' பட்டம்
எந்தையி னருளால் பெற்றே இலங்கிடும் பரத நாட்டீர்!
இந்தமா நிலத்தில் யாரும் இழிசொலைப் பகரா வாறு
அந்தமாய் நடந்து நீவிர் அருமைநா டாக்கு வீரே. (7)

ஆங்கிலம் முறையாய்க் கற்றே அந்நிய நாட்டிற் காகப்
பாங்குடன் உதவி யாற்றும் பண்புசால் பரத நாட்டீர்!
தாங்கொணு வறுமை யேற்றுத் தவித்திடுந் தாய்நாட் டிற்காத்
தீங்கிலாப் பணியே யாற்றித் தெய்வநா டாக்கு வீரே. (8)

நந்தமிழ் வரலா றெல்லாம் நயம்பட ஆங்கிலத்தில்
பந்தமா யெழுதி விகரும் பற்றுடை பரத நாட்டீர்!
விந்தையா யவர்கள் நூலை விருப்புடன் மொழி பெயர்த்துச்
செந்தமி ழதனிற் காட்டிச் செல்வநா டாக்கு வீரே. (9)

உத்தம மக்கள் வாழும் ஒவ்வொரு ஊர்கள் தோறும்
வித்தகர் வழியில் வந்த வீறுடை பரத நாட்டீர்!

சத்துவ குணங்க ளூட்டுந் தமிழ்மொழி வளர்ச்சிக் காகப்
புத்தக சாலை வைத்துப் புலமைநா டாக்கு வீரே. (10)

அன்னிய பாஷை வேட்டுஎம் மன்னையைத் தூற்றி வாழும்
தன்னய மில்லா வீர நலஞ்செறி பரத நாட்டீர்!
சொன்னயந் ததும்பு கின்ற தொன்மையாந் தமிழைப் போற்றிப்
பன்னரும் புலவோர் வாழ்த்தப் பண்டைநா டாக்கு வீரே.: (11)

இமிழ்கட லுலகத் தோர்கள் இனிமையாய்ப் புகழு மிந்தத்
தமிழதின் பெருமை எண்ணுந் தன்மைசேர் பரத நாட்டீர்!
இமையவர் தங்கட் காக எழுறக் கொண்டு வந்த
அமிழ்தென இதனைப் பேணி ஆதிநா டாக்கு வீரே. (12)

வள்ளுவர் இளங்கோ சாத்தன் வகுத்தநற் பண்டை நூலைத்
தெள்ளற வாசி யாது திரிந்திடும் பரத நாட்டீர்!
வெள்ளைய ரென்று நாளும் வீணிலே யழிந் திடாமல்
உள்ளுற ஞானம் பெற்றே உயர்ந்தநா டாக்கு வீரே. (13)

சாத்திரம் வேத மெல்லாம் சாற்றிய நெறியைப் பற்றி
நீர்த்திரை யுலகில் வாழும் நேர்மைசேர் பரத நாட்டீர்!
நாத்திகக் குழியி லாழ்ந்து நலிந்துயர் நீங்கா முன்னர்
ஆத்தும நூலை யோதி அன்புநா டாக்கு வீரே. (14)

செந்தமிழ் நாட்டில் தோன்றிச் செந்தமி ழிடை வளர்ந்து
செந்தமிழ் இழிவென் றோதும் சீரிலா பரத நாட்டீர்!
செந்தமிழ் புலவர் யாத்த செய்யுளில் வழிந்து வீழும்
செந்தமிழ்ச் சுவையை மாந்தித் திவ்யநா டாக்கு வீரே. (15)

நண்பரைக் காணும் போது நந்தமி ழதிற்பே சாது
பண்பற ஆங்கி லத்தில் பறைந்திடும் பரத நாட்டீர்!
விண்புலத் தவரும் கற்க விழைவுறும் பாஷை தன்னைத்
திண்புவி மீது போற்றிச் சிறந்தநா டாக்கு வீரே. (16)

அகம்புற மென்று முன்னோர் அணிபெற அமைத்த நூலின்
அகம்புறந் தெரிகி லாத அறிவிலா பரத நாட்டீர்!
அகந்தனை அறவே நீக்கி ஐயனைக் காண வேண்டில்
அகத்தனில் தமிழை வத்தி ஆன்றநா டாக்கு வீரே. (17)

திண்மைசேர் மனத்தின் கண்ணே சீரிய ஊக்கம் பொங்கி
உண்மையாய்த் தமிழுக் காக உழைத்திடும் பரத நாட்டீர்!
வண்மைசேர் செல்வத் தோர்க்கு வான்தமி ழருசி காட்டித்
தண்மையால் பொருளை யீட்டித் தருமநா டாக்கு வீரே. (18)

தாய்மொழி யதனி லூக்கம் தரணியில் வேண்டு மென்று
வாய் மொழி யாகப் பேசி மகிழ்ந்திடும் பரத நாட்டீர்!
நாய் மொழி நிகர்க்கு மந்த நாரது பாஷை விட்டெம்
ஆய்மொழி கற்று நீவிர் அமலநா டாக்கு வீரே. (19)

மேதினி மாந்தர் யார்க்கும் விரித்திடுந் தமிழானந்த
போதினி வாசிக் கின்ற புகழுடை பரத நாட்டீர்!
ஓதினி மையே யான உயர்தமிழ் கற்று பாரில்
வாதினி யறவே நீக்கி மாட்சிநா டாக்கு வீரே. (20)

உலக சமாதானம் சாத்தியமா?

ஒவ்வொரு காலத்திலும் மனிதர் தேசங்கள் பலவற்றிற்கு மிடையே இருந்துவரும் பகைமைகளையும் பூசல்களையும் இல்லாதொழித்து உலக அமைதி காண மிகுந்த பிரயத்தனம் செய்திருக்கின்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே டிஸ்ரீயலினுடைய தலைமையின் கீழ் ஐரோப்பிய அரசியல் நிபுணர்கள் உலக சமாதானத்திற்கான மார்க்கத்தைத் தாங்கள் கண்டுபிடித்துவிட்டதாக எண்ணினார்கள். ஆண்டிரு கார்ணகீ உலாந்து தேசத்திலுள்ள ஹேக் பட்டணத்திலே சமாதான மாளிகை ஒன்று கட்டுவதற்காகத் தம்முடைய பணத்தைக் கோடிக் கணக்கில் வாரி இறைத்தார். ஆனால் திடீரென ஏற்பட்ட உலக யுத்தத்தால் அவரும் அவரது சகாக்களும் பெரும் ஏமாற்றம் அடைந்தார்கள். அவர்களுடைய பிரசாரத்தின் காரணமாக, 1914-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் கூடவிருந்த சமாதான மகா நாட்டிற்கு உலகத்தின் பற்பல பாகங்களிலிருந்தும் பிரதிநிதிக் கோஷ்டிகள் வந்துகொண்டிருக்கையில் தானே யுத்தம் ஏற்பட்டுவிட்டது; வந்த பிரதிநிதிகள் தங்கள் தங்கள் தேசங்களுக்குத் திரும்பிப் போவதற்குக் கஷ்டமாய்விட்டது. இந்தத் துக்கம் தாள மாட்டாமல், ஆண்டிரு கார்ணகீ சிறிது காலத்திற்குப் பின் மரணமடைந்தார்.

மகா யுத்தத்திற்குப் பின், அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் தலைவரும் அப்போது உலகத்தில் இருந்த மிகச் சிறந்த இலக்ஷியவாதிகளுள் ஒருவருமாகிய உட்ரு வில்சன், சம்பிரதாயத்தை மீறி கடல் தாண்டி ஐரோப்பாவிற்குப் போய், அங்குள்ள அரசியல் தந்திரிகளுடன் சேர்ந்து, இனி உலகத்தில் ஒருபொழுதும் யுத்தம் என்பதே தோன்றாதபடிக்குச் சர்வ தேச சங்கத்தை ஸ்தாபிப்பதிலே தீவிரமாக ஈடுபட்டார். ஆனால் அவருக்குப் பலத்த எதிர்ப்பு இருந்தது. "வில்ஸன் இயேசுக் கிறிஸ்துவைப் போல் அல்லவா பேசுகிறார்?" என்று கிளெமென்ஸோ அவரைக் கேலி செய்தார். கிறிஸ்துவினுடைய கொள்கைகள் அனுபவ சாத்தியமல்லாதவை என்பது கிளெமென்ஸோவின் அபிப்பிராயம். உட்ரு வில்சனும் துக்கத்தால் மன முறிந்து மரித்தார்.

இப்படிப் பலத்த எதிர்ப்புக்கும் ஏளனத்திற்கும் இடையே பிறந்தது சர்வதேச சங்கம். அது மிக உயர்ந்த இலக்ஷியங்களைக் கொண்ட சங்கம். பல துறைகளிலும் அது செய்திருக்கும் சேவையை அளவிடல் அரிது. பற்பல, தேசங்களிலும் உள்ள சிறுபான்மை ஜாதிகள், தேசப் பிரஷ்டர், அடிமைகள், லாகிரி வஸ்துக்கள் வியாபாரம் முதலியன சம்பந்தமாக அது எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகள் பெரிதும் பாராட்டற்பாலன. உலக சரித்திரத்தில் வேறெந்த ஸ்தாபனத்தைக் காட்டினும் மிகப் பேரளவாக அது யுத்தத்திற்கு விரோதமான மனப்பான்மையை வளர்த்து விட்டிருக்கிறது என்பதற்குச் சந்தேகமே இல்லை. ஆனால் அதனுடைய முக்கிய நோக்கத்தைச் சிந்தித்துக் கொள்வதிலே, அதாவது யுத்தமென்பதே இல்லாத ஒரு புது உலகத்தைச் சிருஷ்டிக்கும் முயற்சியிலே அது முற்றும் தோற்றுவிட்டது.

உலகம் அலுத்துவிட்டது. அதற்கு சமாதானம் வேண்டுமென்று நாம் மனப் பூர்த்தியாக விரும்புகிறோம். நம்முடைய அனுதாபம் ஆதரவு அத்

தனையும் உலக அமைதிக்காக முயலுபவர்களைத்தான் சேரும். ஆனால் இவ்வுலகத்திலே நிலையான சமாதானம் ஏற்படும் என்பதில் மட்டில் நமக்கு நம்பிக்கை இல்லை. மனந் திரும்பி மறுபிறப்புப் பிறந்து புனிதம் அடையாத மக்களுடைய அகத்தியற்கை அழுக்குச் சேற்றை ஒக்கும். அதன் மேலே நிலையான சமாதானம் என்ற மாளிகையை எங்ஙனம் கட்ட முடியும்? ஜினிவாவில் "சமாதான மாளிகை" என்பதனுடைய கட்டடங்களெல்லாம் கட்டி முடிந்த 1935-ஆம் ஆண்டிலே தான், அது முழுக்கத் தோல்வியடைந்ததும். போர்க்கருவி ஒழிப்புமகாநாடும் வியர்த்தமாய்ப் போய்விட்டது. சர்வதேச சங்கத்தின் அமைப்புச் சட்டங்களில் ஒரு முக்கிய பகுதியாகிய வெர்ஸேய்ல்ஸ் ஒப்பந்தத்தை ஜெர்மனி நிராகரித்துவிட்டது. இம்மட்டோ! அச்சங்கத்தை ஸ்தாபித்த வல்லரசுக்களுள் ஒன்றாகிய இத்தாலி, இப்பொழுது தானே அதை மீறிவிட்டிருக்கிறது. ஸீனர் முஸோலினி அபீஸினியாவின்மேல் போர் தொடுக்க ஆயத்தஞ் செய்துகொண்டிருக்கையில், தாம் அந்த யுத்தத்தை சர்வதேச சங்கத்தினுடைய உதவியுடன் கூடவோ, உதவி இன்றியோ, அவசியமானால் சங்கத்தை மீறியோ, எப்படியும் செய்யப்போவதாய்ப் பச்சையாகக் கூறினது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும்.

இத்தாலி சங்கத்தினுடைய ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்திட்டபொழுது, இனிச் சண்டை போடுவதில்லை என்றும் தான் பிற தேசங்களுடன் செய்துகொள்ளும் உடன்படிக்கைகளை மீறுவதில்லையென்றும் ஒப்புக்கொண்டது. சர்வதேச சங்கத்தினுடைய அமைப்பின் 12ம் விதியின் வாசகம் வருமாறு: "சங்கத்தின் உறுப்பினர் எவர்க்குமிடையே முறிவுக்கு ஏதுவான ஏதாவதோர் விவகாரம் நேருமானால், அவர்கள் அதை மத்தியஸ்தர்களுடைய தீர்ப்புக்கோ, நியாயக் கூட்டங்களின் தீர்ப்புக்கோ விடவேண்டும்; மத்தியஸ்தர்களுடைய தீர்ப்பும் சங்கத்தினுடைய ரிப்போர்ட்டும் வெளியாகி மூன்று மாதம் ஆகும்வரைக்கும் யுத்தத்திற்குப் போவதில்லை என்று அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள்." இப்படிப்பட்ட உறுதி மொழிகளையே சீனா நம்பியிருந்தது; இறுதியில் அது ஜப்பானின் ஏகாதிபத்திய ஆசைக்குப் பலியாகும்படி நிர்க்கதியாக விடப்பட்டது. அதே கதியைத்தான் வெகு சமீபத்தில் அபிஸீனியாவும் அடைந்தது.

சங்கத்தின் 8-ஆம் விதி போர்க்கருவிகளின் குறிப்பைக் குறித்துப் பிரஸ்தாபிக்கிறது. கிரேட் பிரிட்டன் இவ்விதியின் உட்கருத்தை அனுசரித்து நடக்க முயன்றிருக்கிறது. ஆனால் 1934-ஆம் ஆண்டிலே பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் தன்னுடைய நடைமுறையின் பயனின்மையைக் கண்டு, யுத்த ஆயுதங்களைப் பெருக்கும் போட்டி முயற்சியில் மீண்டும் முனைந்திருக்கிறது.

ஆயுதப் பரிஹாரண மகா நாட்டின் தலைவரான திரு. ஆர்தர் ஹெண்டர்ஸன் 1932-ஆம் ஆண்டில் மகா நாட்டைத் திறந்து வைத்துச் செய்த பிரசங்கத்திலே, மனுஷ ஜாதியினுடைய நம்பிக்கையெல்லாம் அந்த மகா நாட்டையே பற்றியிருக்கிறதென்பதைச் சுட்டிக் காட்டினார். "நாம் அபஜெயமடைவோமானால், அதன் காரணமாக விளையும் தீயபயன்களை யார் அறிவார்? போர்க் கருவிகளை மேலும் மேலும் பெருக்கும் பொல்லாப் போட்டி மீண்டும் ஏற்பட்டுவிடும். நாம் நம்முடைய பிரயத்தனத்திலே

ஜெயம் அடையாவிட்டால், கட்டாயம் அந்த நிலைமைதான் ஏற்படப் போகிறது" என்று அவர் கூறினார். ஸர் ஜான் ஸைமன் சொன்னார்: "நாம் இப்பொழுது அபஜெயம் அடைவோமானால், அளப்பரிய ஆபத்து ஏற்படும்." சீனர் முசோலினிகூட பின் வருமாறு சொன்னார். "சர்வதேச சங்கம் மட்டில் அல்ல, நாகரீகமே இப்பொழுது ஆபத்தில் இருக்கிறது..... மேனாட்டு நாகரிகம் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வழி தேடவேண்டும்; அல்லது வேருடன் கெடவேண்டும்." இப்படி 1932ஆம் ஆண்டில் சொன்ன முஸோலினிதான் 1935ஆம் ஆண்டில் உலக சமாதானத்தைக் குலைத்து, ஏழை அபிஸீனியாவைக் கைப்பற்றிக்கொண்டார்.

உலக சமாதானத்தை ஏற்படுத்திக்கொள்ள மக்கள் செய்யும் முயற்சிகளெல்லாம் ஏன் பாழாய்ப் போகின்றன? யுத்தமில்லா ஒரு உலகத்தைச் சிருஷ்டிக்க வேண்டுமென்ற உத்கிருஷ்டமான பிரயத்தனத்திற்கு ஏன் முட்டுக்கட்டைகள் ஏற்படவேண்டும்? ஏனென்றால், மனித இயற்கை கெட்டுப் போயிருக்கிறது. இரண்டு மனிதர் ஒருவரோடொருவர் சண்டை போடுமளவும், இரண்டு தேசங்களும் ஒன்றோடொன்று யுத்தம் புரியும்.

இது விஷயமாக, லியோ வி. ராஸ்டன் என்பவர் 1935ஆம் வருஷம் ஜூலை மாதத்திய "ஹார்ப்பர்ஸ்" பத்திரிகையிலே ஒரு சிறந்த வியாசம் எழுதியிருக்கிறார். அதில் அவர் சொல்வதாவது: "சரித்திரத்தில் முன்னொரு காலத்திலும் இல்லாத அளவு இக்காலத்திலே மக்களிடையே போர் ஒழிப்பு உணர்ச்சி பரவியுள்ளது. என்றாலும், எவ்வளவுதான் எச்சரிக்கைகளும் ஆவேசப் பிரசங்கங்களும் செய்யப்படுகிறபோதிலும், ராஜ்யங்கள் ஆத்திரம் ஆத்திரமாகப் போர்க்கருவிகளைப் பெருக்கிக்கொண்டு போவதை மட்டும் நம்மால் நிறுத்த முடியவில்லை. உண்மை என்னவென்றால் யுத்தமானது மனிதனுடைய மனதுக்கமைந்த ஒரு கவர்ச்சியுடையதாயிருக்கிறது. சமாதானத்தால் உண்டாகும் நன்மைகளைக் காட்டிலும், யுத்தந் தரும் இன்பமும் திருப்தியுந்தான் அவனுக்கு உள்ளூறப் பிடித்தம்........ "ஒவ்வொரு மனிதனும், அந்தரங்கத்தில், ஒரு கொலைகாரனே......திடீரென நெருக்கடி ஏற்பட்டு, அத்தருணத்தில் அவனுடைய சன்மார்க்கமாகிய போர்வை நழுவி, ஊரார் வெறுப்பார்களே, அரசியலார் தண்டிப்பார்களே என்ற பயமும் போய்விட்டால், பிறகு பார்க்கவேண்டுமே அவனுடைய இரத்த வெறியை! இதுவரை அவனது இருதயத்தில் எங்கோ பதுங்கிக் கிடந்த இரத்த வெறி இப்பொழுது பீறிக்கொண்டு வந்துவிடுகிறது." "தேச பக்திக்கும் பட்டாளத்திற் சேருவதற்கும், பல சமயங்களில், சம்பந்தமே இருப்பதில்லை. ஆயிரக் கணக்கான மனிதர் தாங்கள் கஷ்டப்பட்டு அடக்கி வைத்துக்கொண்டிருக்கும் துர் ஆசைகளை வெளியிடுவதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பமாக யுத்தத்தைக் கொள்ளுகிறார்கள்."

மனிதர் யுத்தத்தை விரும்புகிறார்கள் என்பது முற்றும் உண்மையே. எனவே தான் இயேசு கிறிஸ்துவும், "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" என்று கூறியிருக்கிறார். "நாய்களும் சூனியக்காரரும் விபசாரக்காரரும் கொலைபாதகரும் விக்கிரகாராதனைக்காரரும் பொய்யை விரும்பி அதன்படி செய்கிற யாவரும்" புறம்பே இருக்கும் தெய்வ ராஜ்யம் ஏற்படும்

பாரதியின் பாட்டோவியம்

(தே. ப. பெருமாள்.)

பாட்டோவியம் என்றால் என்னை? பாட்டாலாய ஓவியமே பாட்டோவியமாம். பாட்டென்பதற்கு பல பொருளுரைப்பர் பாவலர். பாட்டு எனுஞ் சொல் பெரும்பாலும் மனிதனது உள்ளத்தைக் கவரும் உயரிய அழகிற்கே அமைந்த பெயராகும். கங்குற் கழிந்த காலைப் போழ்தில் கதிரவன் உதயத்தால் அழகு பெற்றிலங்கும் பொருட்கள் அனைத்தும் பாட்டேயாம். நீலத்திரை விரிக்கும் நெடுங்கடல் கதிரவன் ஒளி பெற்று விளங்குங்கால் அதனைக்கண்டு மகிழும் புள்ளினங்களும் விலங்கின் தொகுதியும் பிறவும் பாட்டேயாம். அந்தி மாலையில் மேற்றிசை மறையும் கதிரவன் அழகும், பூஞ்சோலையின் புறத்தே தோன்றும் வெண்மதியின் உதயமும், மணிகளைக் கொழித்த வயற்றரையில் வனப்பும், மரங்களும் செடிகளும் கொடிகளும் அடர்ந்து கான்யாறு ஓடவும் பெற்ற காட்டின் கவினும், வானளாவிய மரங்களும் சலசலத்த ஒலி கொண்ட அருவிகளும் அறிஞர் அகமெனத் தெளிந்த சுனைகளும் வெய்ய விலங்குகளும் இனிய பறவைக் கூட்டங்களும் நிறையப் பெற்ற வரைகளும் பாட்டேயாம்.

இத்தகைய பாட்டால் அமையும் ஓவியமே முற்கூறிய பாட்டோவியம். இவ் வோவியம் இருவகைத் தாகும். ஒன்று விழிகட்கு விளக்கமுறப் பருப் பொருளாய் புலனாவது. மற்றொன்று அறிவில் நுண் பொருளாய் விளங்குவது. முன்னது பலதிற வர்ணங்களால் ஓவியப் புலவனால் திரையில் வரைந்து காட்டுவது. பின்னது பொருள் நிரம்பிய சொற்களால் புலவனால் பாடிக் காட்டுவது.

முன்னதாகிய வர்ணங்களால் வரைந்து காட்டுவதினும் பின்னதாகிய சொற்களால் கூறிக் காட்டுவதே சிறப்புடையது. வர்ணங்களால் வரைந்து காட்டுவது மிக்கத் துன்பத்தை யுடையதாகும். அது நீண்ட பொழுதை அள்ளிச் செல்லும். பின்னும் பாட்டின் கூறு அனைத்தையும் அஃதின்கண் பொருத்திக் காட்டுதல் இயலாது. அழகின் வழியே செவிக்கு இன்பம் பயக்கும் இன்னிசையை ஓவியப்புலவன் யாங்ஙனம் தன் சித்திரத்தின் கண் சித்திரித்துக் காட்டுவன்? அஃது அவனால் இயலுந் தன்மையதோ?

சொற்புலவனே தன் கண்ணெதிரே காணும் அழகை சிறிது பொழுதிற்குள் அழகுற கூறிக் காட்டுகின்றனன். அவனது சொற்கள் பொருள்

பொழுதுதான் உலகத்தில் எங்கணும் அமைதியும் சமாதானமும் நிலவும். அந்தத் தெய்வ ராஜ்யம் மறு பிறப்புப் பிறந்தவர்களுக்கு மாத்திமே உரியது. "ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும் வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின் படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" (நல்வழி)

நிரம்பியனவாய் பாட்டின் கூறு அனைத்தையும் செவ்விதின் விளக்கிக் காட்டுகின்றது. ஓவியப்புலவன் பன்னாட்கள் வருந்தி முடிக்கும் ஒரு பாட்டின் ஓவியத்தை சொற்புலவன் நான்கு அல்லது ஐந்தடிகளில் அச் சித்திரத்தினும் விளக்கமுற விளங்குவதாய் ஒரு கணத்தில் கூறிக் காட்டுகின்றனன். அத்துணை பெருமையுடையவன் சொற்புலவன். அத்துணை விளக்க முடையது சொல்லாலமையும் ஓவியம்.

இத்தகைய சொல்லான் அமையும் ஓவியம் எல்லாப் புலவராலும் அமைக்க இயலுந் தன்மையதன்று. கற்றவராய் இருப்பினும் அவரிடை அத் திறன் அமையப் பெறல் அரிது. தெய்வத்தன்மை பொருந்திய புலவர்க்கே அத்திறன் அமையும்.

பொருள் நிரம்பிய சொற்புலவர் நமது தமிழ்நாட்டின் கண் தோன்றி மறைந்தனர். மறைந்த அன்னார் தம் தொகையினை நம்மால் சரிவர எடுத்துக் கூறுதல் இயலாது. அவரது எண்ணம் நூற்றுக்குமேல் ஆயிரம் பதினாயிரமாகச் செல்லும். அன்னார் தம் விழுமிய முழுத்திறனால் அமையப் பெற்ற நூற்கள் அனைத்தும் ஆழிப் பெருக்கில் அமிழ்ந்தன. எஞ்சிய சிலவே இன்று தமிழ்நாட்டிடை நிலவுகின்றன. இந்நூற்கள் பொருணயமும் சொன்னயமும் பொலியப்பெற்று விளங்குகின்றன. இவை பழந்தமிழரின் குணம், அழகு, ஆற்றல் முதலியனவற்றைத் தெற்றென விளக்கிக் காட்டும். இந் நூற்களாலேயே நாம் பழந்தமிழ்நாட்டு நாகரீகத்தின் உயர்வை அறிய இயலுகின்றது.

இத்தகைய உயரிய நூற்களின் பெருமைக்கொப்ப நம் தமிழ்நாட்டின் கண் அணித்தே ஓர் நூலெழுந்தது. இந்நூல் பாரதி நூலாகும். இந்நூலை இயற்றியவர் வரகவி சுப்பிரமணிய பாரதியாராவர். இவரது பெயரைக் கொண்டே இந்நூல் இலங்குகின்றது.

இவரது பாடல்கள் அனைத்தும் எளிய நடையில் இனிய ஓசையுடன் அமைந்துள்ளது. சொல் நயத்திலும் பொருள் நயத்திலும் தலைமை பெற்று விளங்குகின்றது. குறுகிய அடியில் பெருகிய பொருளை விளக்கிக் காட்டுகின்றது. பழந்தமிழ்ப் புலவரின் பாடலை ஒட்டி இவர் பாடலும் பொருளை ஆயுந்தோறும் ஆயுந்தோறும் பொருள் பெருகிச் செல்லுகின்றது.

இவரது நூற்களில் இயற்கை அழகினைக் கூறும் பாகங்கள் பல. இயற்கையின் ஒவ்வொரு பகுதியினையும் பாரதியார் விளக்கமுற எடுத்துரைக்கின்றார். அப்பாடலை நோக்கியதும் நம் கண்முன் அவை ஓவியமாகவே பொலிகின்றது. அவ்வோவியத்துள் சிலவற்றை ஈண்டெடுத்து தீட்டுதலே இக் கட்டுரையின் தலையாய நோக்கம்.

நாம் பிறந்த பாரதநாட்டின் அழகினைக் கூறப்புகுந்த பாரதியார்,

"ஆற்றினிலே சுனையூற்றினிலே—தென்றற்
காற்றினிலே மலைப் பேற்றினிலே
ஏற்றினிலே பயனீந்திடுங் காலி
யினத்தினிலே யுயர் நாடு."

என்று கூறுகின்றார். இது எத்தகைய இனிய சொல்லில் எளிய நடையாக

அமைந்துள்ளது. இப் பாடல் நான்கு அடிகளும் ஒரு தனிவாக்கும் கொண்டு மிளிருகின்றது. இச் சிற்றடிகளில் எத்துணை உயர்பொருள் அமைந்துள்ளன. இப் பாட்டினைப் பாடுங்கால் நமது மனக்கண்முன் நமது நாட்டின் எழிலோவியம் விளங்குகின்றதன்றோ!

இந்திய நாட்டகத்தேயே வான்முகத்தைக் கிழிக்குந்தன்மையதாய் உயரம் பெற்று சந்தனம், சண்பகம், குருக்கத்தி. ஆசினி யாதிய நல்மரங்களை தன்னகம் கொண்டதாய் விளங்கும் வரையினையும், அவ்வரையின் முகட்டினின்றும் பெருக்கெடுத்து மணியினையும் முத்தினையும் மலரினையும் காய்ந்த இலைச்சருகினையும் கொண்டு பள்ளத்தை நோக்கி இழியும் தீம்புனல் நதியினையும், அந் நதியினின்றும் துகில் போர்த்தாலென்ன பரந்து பாயும் அருவியினையும், அவ்வருவியின் அணித்தே ஊறும் சுனையினையும், அச்சுனையின் பக்கத்தே மலர்ந்து மணம் வீசும் பன்னிற மலர்களில் படிந்து வருந் தென்றலினையும், பாரதியார் தம் முதலிரு அடிகளால் விளக்கிக் கூறுகின்றார். பின்னிரு அடிகளில் அஃதால் நாடு கொள்ளும் செழிப்பினை மறைமுகமாக உரைக்கின்றார்.

பாரதியாரின் இப் பாட்டோவியத்தை நோக்கியதும் நமது உள்ளம் பெருமிதத்தால் இறுமாப்பு கொள்ளுகின்றது. ஏனென்றால், நமது நாட்டகத்தேயே வையகத்தின் கண் உயர்ந்த வரையாய இமையம் அமையப் பெற்றுள்ளது. இதன் உயர்வை மேனாட்டறிஞர் பலர் தம் புதுப் புனைவுகளுடன் அறிய முயன்றும் அஃது போதிய பயனைக் கொடுத்திலது. அத்துணை உயரஞ் சான்றது நமது இமயம். இதைப் பாரதியாரே ஒரு இடத்தின்கண்,

‘மன்னு மிமயமலை யெங்கள் மலையே,
மாநில மீதது போற் பிறிதிலையே!’

என்றுரைக்கின்றார். அத்தகைய மலைப் பேறுடையதன்றோ நமது நாடு! இன்னும் எவ்வளவு மலைகள் நமது நாட்டகம் உள்ளன! இஃதனைத்தையுமே பாரதி ‘மலைப்பேறு’ என்ற உயர் மொழியில் உரைப்பாராயினர். கோடைக்காலத்தும் மாரிக்காலத்தும் வளங் குன்றாது பெருகியோடும் புண்ணிய நதிகளும் நமது நாட்டகத்தேயே பெருகியிருக்கின்றன. கங்கையும் சிந்துவும் நீர் வளங் குறையப்பெற்ற நதியாமோ? காவிரியும் தென் பெண்ணையும் ஓட்டங் குறைவுடையனவோ? இன்னும் இஃதே போன்று எத்துணை மாநதிகள் நமது நாட்டகம் முழுதும் ஓடி செழிப்பை அளிக்கின்றன.

தென்றல் காற்றினிலே உயர் நாடு என்று பாரதியார் கூறியதும் நமது அறிவினிலே பொதியமலையினின்றும் பொங்கி எழும் சந்தனத் தென்றல் வந்துறுகின்றதன்றோ! அந்தி மாலையில் பிரிந்த காதலர்க்கு வெய்யதாய் கூடியோர்க்கு அமிழ்தாய் ஆடுந் தென்றல் பொதிய மலைத் தென்றலன்றோ! ஆரத்தினை அளைந்து காலும் அத்தென்றலின் பெருமையை என்னென்றுரைக்க இயலும்? இத்தகைய தென்றல் ஒன்றுமட்டுமா நமது நாட்டகம் உள்ளது. இன்னும் எத்துணை திறத்துத் தென்றல்கள் நமது நாட்டகம் வீசுகின்றன! கன்னிகுமரித் துறையில் வதியும் கொடும் பிணியாளரின் பெரு நோய் யாங்ஙனம் அகல்கின்றது? மருத்துவாழ் மலையினின்றும் போதரும் மருந்துத் தென்றலும் குமரித் துறையில் வீசும் குளிர் தென்றலுமன்றோ! அன்னார் தம் நோய் அகற்சிக்கு காரணம். இன்னும் இதுபோன்று ஆங்காங்கே ஆடுந் தென்றல்கள் எத்தனை! அம்மம்ம! உரைக்கவும் இயலுமோ?

இஃதனைத்தும் பாரதியார் தம் பாவின் கண் அடக்கிக் கூறுகின்றார். இஃது, இந்திய நாட்டின் இயற்கை எழிலிலும் செழுமையிலும் பாரதியார் உள்ளம் தத்தித் தடுமாறி அலைந்த காலையில் எழுந்த செழுங் கவியாகும்.

பாரதியார் மனக் கண்முன் பாரத நாட்டின் ஒரு பிரிவினதாய தமிழ் நாடு தோன்றுகிறது. யாண்டு நோக்கினும் வானளாவிய மரங்கள்! பசுங் கொடிப் பந்தர்கள்! செந்நெல் விளையும் பூமியிலே பயிர்கள் சீதப்பு[illegible]ல் செழுமையுற வளர்ந்து மெல்லிய பூங்காற்றால் தலை அசைத்து ஆடுகின்றன. கொத்துக் காய்களுடன் குற்றுச் செடிகள் தரையில் உரன் பெற்று நின்றன. தினை, பயறு, சாமை, சோளம் ஆதிய பயிர்கள் கண்ணுக்கெட்டாத தொலைக்கு செழித்து வளர்ந்து தங் கொண்டையினைக் கீழ் சாய்த்து அசைகின்றன. இதைக் கண்ட பாரதியார் உள்ளம் இச் செழுமையின் ஏதுவை அறிய அவாக்கொண்டது. அதுபோழ்து அவரது அகக் கண்ணில் ஐந்திணை நிலங்கடந்து செல்லும் பெரு நதிகளும் புலனாகின்றன. தமிழ் நாட்டின் செழிப்பு இப் பெரு நதிகளாலேயே என்று இதுபோழ்தே இவர் அறிகின்றார். இச்சமயம் இவர் தீட்டிய பாட்டோவியமே,

“காவிரி தென்பண்ணை பாலாறு—தமிழ்க்
கண்டதோர் வையைப் பொருநை நதி
மேவிய யாறு பலவோட புகழ்
மேனி செழித்த தமிழ் நாடு”

என்பதாகும்.

இனி கலைமகளின் இருக்கையைக் கூறப்புகுந்த பாரதியார்,

‘வெள்ளைத் தாமரைப்பூவி லிருப்பாள்
வீணை செய்யும் ஒலியிலிருப்பாள்
கொள்ளையின்பங் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பார்
உள்ளதாம் பொருள் தேடியுணர்ந்தே
ஓதும் வேதத்தி னுண்ணின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்துட் பொருளாவாள்.’

என்று கூறுகின்றார்.

கலைமகள் வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாள் என்றும், வீணையின் ஒலியில் இயைந்துள்ளாள் என்றும் தேன் பிலிற்றுந் தகையனவாய் தீங்கவி இயற்றும் திருப்பாவலர் உள்ளமிசை உறை கொண்டாள் என்றும், ஆண்டவன் அருணெறியிற் பிணிக்கும் திரு வேதத்தே தேங்குவாள் என்றும், மெய்நெறி கண்டு துறவு பூண்ட மாசற்ற முனிவர் வாசகத்தி லுறைவாள் என்றும் கவிஞர் தம் பாட்டோவியத்தின் கண் பொறித்துள்ளார்.

கலைமகள் அழகுப் பொருட்களிலேயே பதி கொள்ளுவள். அப் பொருட்களில் பதி கொண்டு அப் பொருட்களின் கூறுகளாகிய அன்பு அருள் என்பவற்றோடு இயைந்து வாழ்வள். அழகுப் பொருட்களில் ஒன்றே வெண்டாமரை. ஆதலின் கலைமகள் அவ்வெண்டாமரையில் விளங்கித் தோன்றலானாள் என்று கவிஞர் கூறுகின்றார். ஆயின் செந்தாமரை அழகுப் பொருள் அல்லவோ? அஃதின் கண்ணும் கலைமகள் இருக்கை விளங்குகின்றதே எனின் செந்தாமரையும் அழகுப் பொருளேயாம். அஃதின் கண்ணும் கலைமகள் இருக்கை விளங்குதல் காணலாம். பின்னை வெண்டாமரையை கவிஞர் குறித்தது என்னை எனின் கலைமகளது உள்ளம் பெரிதும் மாசற்றதையே விரும்பும். மாசற்றது வெண்மை. வெண்மையில் மாசு கலவின் அம்மாசு கடிதிற் புலனாகும். ஏனெனின் வெண்மைக்கு மறைக்குந் தன்மை கிடையா. இஃது 'வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை' என்பதனாற் போந்ததே. ஆதலின் கலைமகள் மாசற்ற பொருளாகிய வெண்டாமரையை அச் செந்தாமரையினும் பெரிதும் விரும்பி அண்டுவாளாயினள். இதைத் தான் கவிஞர் கூறுகிறார். இஃதையே ஆன்றோர் 'வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள்' என்று கூறுவாராயினர்.

கவிஞர் கலைமகளை வீணையின் ஒலியில் இருப்பதாகக் கூறுகின்றார். வீணையின் ஒலி இனிய தொனி. அவ்வினிய தொனியாலாயது இசை. அவ்விசை ஒருவரது உள்ளத்தை உருக்குந் தன்மையது. இசையினில் உருகாத மனிதன் இலன். விலங்குகளும் இசையினில் உருகி மறக்கின்றன. அன்று கண்ணன் ஊதிய இசையில் நசை கொண்டு ஆனிரையும் பிற கானுறை விலங்கும் ஊனெடுத்தலையும் வெறுத்து அவ்விசையை அண்மிய தன்றோ! புற்றிலுறையும் நச்சுடை நாகமும் இசையினில் இச்சை கொண்டு தம்முயிர் நலனை புமெண்ணாது வெளி வந்தாடலைக் காணாதார் உளரோ? இத்தகைய இனிய இசையிலேயே கலைமகள் இருக்கை கொண்டாள். இதையே நம் பாரதியார் 'வீணை செய்யும் ஒலியிலிருப்பாள்' என்று கூறுகின்றார். (தொடரும்)

(166-ம் பக்கத் தொடர்ச்சி.)

அதில் பெரும்பான்மையோர் முதன் மந்திரி ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைக்கத் தீர்மானித்திருப்பதற்குச் சாதகமாகவே இருந்ததாகத் தெரிகிறது. சமீபத்தில் சென்னை காங்கிரஸ் மண்டபத்தில் கொண்டாடப்பட்ட "பாரதி திருநாள்" கூட்டத்தில் கனம் ராஜகோபாலாசாரியாரும் கனம் டாக்டர் ராஜனும் இந்த ஹிந்தி பிரச்னையைப்பற்றி பேசிய தோரணையைப் பார்த்தால் கூடிய சீக்கிரம் முதன் மந்திரி ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைத்து அமுலுக்குக் கொண்டு வந்து விடுவாரென்றே நம்புகிறோம். ஆகவே, இனியும் ஹிந்தியைக் கட்டாயபாடமாக வைக்கலாமா கூடாதா என்று விவாதித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை யென்றே கருதுகிறோம். நாம் கனம் முதன் மந்திரியை இச்சமயத்தில் வேண்டிக்கொள்வ தென்னவென்றால், தாய் மொழியாகிய தமிழ்மொழி வளர்ச்சிக்கும் வேண்டும் விதியைக் கூடிய சீக்கிரம் ஏற்படுத்த வேண்டுமென்பதே.

"வாழ்க்கை இன்பம்"

(தே. வி. ராமமூர்த்தி.)

வாழ்க்கை என்பது ஒரு பெருங் கடலுக்கு ஒப்பாகும். அந்த சம்சார சாகரத்தை கடக்க நமக்கு கடவுளால் அளிக்கப்பட்டிருக்கும் தோணியே இம் மானிட சரீரம். ஆனால் இத் தோணியைக் கொண்டே அம் மாபெருங் கடலை எளிதில் கடந்துவிடலாம் என்பது பைத்தியக்கார யோசனையாகும். பெரும் கொந்தளிப்புடன் ஆரவாரிக்கும் சமுத்திரத்தினூடே, மலைபோல் உயரக் கிளம்பி, பாதாளத்தில் ஆழ்த்தும் அலைகளுக்குத் தப்பி, தோணியை அக்கரை சேர்ப்பதற்கு கை வல்லமையும் நெஞ்சத் துணிவும், விடா முயற்சியும் வேண்டும். மனுஷ்ய] யத்தனம் எவ்வளவுதான் இருந்தாலும் தெய்வ யத்தனம் சிறிதளவாவது அமைதல் அவசியம். இடையில், இருக்கும் பெருந்தூரத்தைக் கண்டு நாம் அஞ்சவில்லை! மோதி அடிக்கும் அலைகளைக் கண்டும் அஞ்சவில்லை! ஆனால் எதிர்பாராவிதமாக பிரளயாந்த காலத்து ஊழிக் காற்றுபோல் கோரமாக எழும்பும் அதீதமான புயற் காற்றுக்குமுன் மனுஷ்யன் யாது செய்ய இயலும்? விபரீதப் பலன் சித்திப்பதற்கு முன்னால் தெய்வம் சிறிதளவு கை கொடுப்பின் ஆழ்கடலை கடப்பதென்பது கஷ்ட சாத்தியமான காரியமாயிராது. ஆனால், அவனுடைய துணையை கோரு முன்னர் அதற்கு நாம் அருகதை உள்ளவர்களாகச் செய்துகொள்வது முக்கியம். மிருகங்களிடையே அகப்பட்ட மனிதன்போல், மனித சமூகத்தி னிடையே ஞானிகள் தோன்றுகின்றனர்.

மனிதன் மிருகங்களை வேட்டையாட காட்டை அடைகின்றான். ஞானிகள் மனிதர்களை உய்விக்க நாட்டில் அவதரிக்கின்றனர். ஞானிகள் என்னும் பொழுது நாம் எந்த தனி மனிதனாலும் அடையப் பெறாத உயர் நோக்கங்களை கடைபிடித்து ஒழுகுகின்றவர்கள் என்ற கருத்தில் வைத்து பேசவில்லை. கடமையைச் சரிவரச் செய்தல், தன்னைப்போல் பிறரையும் பேணுதல், எல்லா ஜீவராசிகளிடத்தும் அன்புடனிருத்தல் இவைகளே கடவுளின் உள்ளன்பையும் அருட் துணையையும் பெற போதுமானவை. பிறர்பால் பழிப்புக்கிடமான செய்திகள் கிட்டுமா என்று ஆராய்வதிலும் அநேக பழிகளினின்றும் தங்களைச் சீர்திருத்திக்கொள்ள வகை யறியாது அஞ்ஞானத்தில் மூழ்கி யிருப்பவர்களுமே இக் காலத்தில் மிகுந்து காணப்படுகின்றனர். அந்த கருத்தையே வரகவி மாரிமுத்து பிள்ளை "அவர்கள் குறிப்பாக பின் வரும் கீர்த்தனைப் பகுதிகளில் புகுத்தியுள்ளார்.

"செய்யவர் பழிகேட்க வளைபோல் வளையும் காது
சிவகதை கேட்கவென்றால் காதினுள் துளையேது?"

என்றும்,

"எய்தும் என்பழி நோக்க இருகண்ணும் காமாலை
இதரர் பழிகள் நோக்க இந்திரன் கண்ணொந்த மூலை ?"

என்றும் குறிப்பிட்டுள்ள வரிகள் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கவை. மனிதன் மானாகிய இன்பத்தை வேட்டையாடச் சென்று மதயானையாகிய துன்பத்தைச் சந்திக்கின்றான். அதை எதிர்த்து நின்று வீழ்த்த அவனுக்கு வல்லமை இல்லையேல், அதே மத யானையால் அவன் இடர் உறுகின்றான். அந்த துன்பத்தை எதிர்த்து நிற்க அன்பு உருவாகிய ஆண்டவனை சிந்திப்பின் அவனிடமிருந்து உதவி பெறுவதில் என்ன ஆட்சேபனை ! ஓடி யாடி விளையாடும் குழந்தைகளுக்கு அறிவுறுத்தும் பாவனையாய் பாரதியார் கூறியிருக்கும் மணி மொழிகள் இதை நன்கு விளக்குகின்றது.

" துன்பம் நெருங்கிவந்தபோதும்—நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா
அன்பு மிகுந்த தெய்வம் உண்டு—துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா
உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மைதான் என்று அறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும்—இது
வாழும் முறைமை அடி பாப்பா "

ஆனால் இன்ப துன்பங்கள் இரண்டும் கலந்தே ஒவ்வொரு அணுவிலும் இருப்பதால் அதை நாம் ஆராய்வது அவசியம். இன்பமாவது யாது? துன்பமாவது யாது? இரண்டிற்குமுள்ள மூலாதார வேற்றுமை என்ன? இவைகளை இக் கட்டுரையில் சிறிது விளக்க முயல்வோம்.

குழந்தை பிறக்கும்பொழுதே 'ஊம்' 'ஓம்' 'ஆம்' என்ற அழுகைக் குரலுடனேயே ஜனிக்கின்றனது. அவை 'ஓம்' என்ற ஒப்பற்ற வார்த்தையின் சிதைவுகளே. ஒவ்வொரு குழந்தைக்கும் 'ஓம்' என்ற தொனி உள்ளிருந்தே கிளம்புகின்றது. ஓம் என்ற தத்துவம் ஒருபுறம் இருக்கட்டும். நம்முள் வழங்கும் சம்பிரதாயத்தை ஒட்டி அது மங்கல ஒலியா அன்றி அழுகைக் குரலா என்பதை ஈண்டு குறிப்பிடுவோம். இது வரை அது தாயின் கருப்பையில் இருந்தபோதிலும் அது உலக கஷ்ட நிஷ்டூரங்களை அறியாது பேரின்ப சாகரத்தில் திளைத்துக்கொண்டிருந்தது. தாயின் கருப்பையில் இருக்கும் காலம்வரை அதற்கு பூர்வ ஜன்ம வாசனை உண்டென்று ஆன்றோர் கூறுவர். அது உண்மையாயின் அது ஜனிக்கும்பொழுதே அழுங் காரணம் யாதா யிருக்கக் கூடும் என்பதை உற்று நோக்குவோமாயின் காரணம் நமக்குப் புலப்படாமல் போகாது.

நிலையாத சமுத்திரத்தில் சமுசார துறைகளில் தன்னை விடுவிப்பதாக விருப்பினும் அது உண்மையான விடுதலை ஆகமாட்டாது. சமுசார துறைகளில் நம் கைக்கு கிட்டும் ஆதாரம் சிற்றின்பமே! ஆனால், சிற்றின்பமோ நிலையற்ற வஸ்து. அது நம்மை இன்னும் காற்றுவாக்கில் தள்ளிக்கொண்டே போய் நடுச் சமுத்திரத்தில் விட்டுவிடுமே ஒழிய கரையேற நமக்கு அது சாதனமாகமாட்டாது. இந்த வேதாந்த கருத்துபற்றியே, அக்குழந்தை துயர் உறுகிறது.

" வந்து வந்து முன் தவழ்ந்து
வெஞ்சு கந்த யங்க நின்று
மொஞ்சு மொஞ்சு என்றழும் குழந்தை "

பூமியில் ஜெனிக்கும்பொழுதே அதற்கு இந்த கவலையும் கூடவே தொடருமாயின் சிற்றின்பம் எப்படி நிலையற்றது என்று மறுபடியும் கூறவேண்டியதில்லை. அதன் நிலையற்ற தன்மையை இங்கு சிந்திப்போம்.

குழந்தை பருவத்தில் அது தேடி மகிழ்வது தாயின் மார்பும் மடியும் தான்! தாயின் மடியிலும் மார்பிலும் தவழ்ந்து விளையாடும்பொழுது அது அடையும் இன்பம் நேரில் அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். தாயின் புடவைத் தலைப்பை இழுத்து அதனால் தன் முகத்தை மூடிக்கொண்டு " அம்மா ! என்னைக் கண்டுபிடி " என்று கொச்சைப் பேச்சுகள் பேசி தாய் கண்டு பிடிக்க முடியாததுபோல் பாசாங்கு செய்ய அது திடீரென்று வெளிப்பட்டு விழுந்து விழுந்து பொக்கைப் பல்லைக் காட்டி சிரிப்பது எத்தனை இன்பம் விளைக்கிறது?

ஆனால் அந்த இன்பம் சாஸ்வதமானதல்ல. இதே குழந்தை மதலைப் பருவத்தைக் கடந்து ஓடியாடி விளையாடும் திறன் படைத்ததும் அதன் மகிழ்ச்சி வேறு எல்லையில் செல்லுகின்றது. தன்னைப்போலுள்ள மற்றைச் சிறுருடன் கூடி விளையாடுவதிலும் நாவிற்கினிய தின்பண்டங்களைப் பெறுவதிலேயுமே தன் சிந்தையைச் செலுத்துகின்றது. அதே குழந்தை பெண் குழந்தையா யிருக்குமாயின் மண் வீடு கட்டுவதிலோ, பொம்மைக் கலியாணம் செய்து மகிழ்வதிலுமோ அது விருப்பத்தைக் கொள்ளுகின்றது. முன்பு ஒன்றுமறியாத பேதைப் பருவத்திற்கும் இப்பொழுது அதன் மனதில் வேர் ஊன்றியுள்ள குழந்தை மனத்திற்கும் எத்தனை வேற்றுமை?

இந்த மகிழ்ச்சியும் நெடுநாள் நிலைப்பதில்லை. அச் சிறுவன் பள்ளிச் சென்று பயிலும் பாலப் பருவத்தை அடைந்தவுடன் கதைகளைக் கேட்பதிலும் படிப்பதிலும் மிகுந்த ஆவல் காட்டுகின்றான். எப்பொழுது பார்த்தாலும் தின்பண்டங்களைத் தின்றுகொண்டே புழுதியில் புரண்டு விளையாடும் குழந்தைகள் இல்லாமல் இல்லை. அன்று அபார புத்தி கூர்மையுடன் ஆழ்ந்த சிந்தனையுடன் கூடி ஆராய்ச்சி மனோபாவத்தைக் கொண்டவர்களு மிருக்கலாம். ஆனால் நாம் குழந்தை என்னும்பொழுது பொதுவாக சாதாரண அறிவுள்ள குழந்தைகளைப் பற்றியே பேசுகின்றோம் என்பதை முக்கியமாய் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

பள்ளிப் பயிற்சி பெறுங்காலையில் சலியாத உழைப்பு அபார புத்தி கூர்மை இவற்றால் சர்வகலாசாலைப் பட்டத்திற்கு அடி கோலுகின்றான். அநேக வருஷ முயற்சியின் மிகுதியால் அதையும் அடைகின்றான். தன்னுடைய பெயருக்குப் பின்னால் பி.ஏ., என்ற இரண்டு அக்ஷரங்களை ஒட்டவைத்துக்கொள்ள உரிமை அளிக்கப்பட்ட உடன் அவனுக்குச் சிந்தனை வேறு விதத்தில் செல்லுகின்றது. இத்தனை நாள் உழைத்ததெல்லாம் பி. ஏ. என்பதற்குப் பிழைப்பது எப்படி என்பதை உணரமட்டும்தானா? ஒவ்வொரு ஆபீஸுக்கும் மனு எழுதிப் போடுகின்றான்.

மூன்று மாதமோ, ஆறுமாதமோ அவன் பொறுமை பரிசோதிக்கப்பட்ட பின்னர். அவனுக்கு ஒரு உத்தியோகமும் அளிக்கப்படுகின்றது என்று வைத்துக்கொள்ளுவோம்.

"உடுக்க துகில் வேணு நீள்பசி
யவிக்க கனபான வேணும் நல்
ஒளிக்கு புனலாடை வேணுமெய் யுறுநோயை
ஒழிக்க பரிகார வேணுமுன்
இருக்க சிறுநாரி வேணு மொர்
படுக்க தனிவீடு வேணுமிவ் வகையாவும்
கிடைத்து கிருஹ வாசியாகிய
மயக்கக் கடலாடி..................."

என்றபடி தன்னைச் சுற்றிலும் உள்ள மாந்தர் நடாத்தும் மயக்க வாழ்வை ஒட்டி அச் சௌகர்யங்களை தானும் செய்துகொள்ளவேண்டும் என்ற சிந்தனை தானே எழுகின்றது. அவன் விவாகம் செய்துகொள்வதில் ஊக்கம் செலுத்துகின்றான். கண்ணுன மனையாட்டியுடன் இல்லற வாழ்க்கையை இனிது நடத்தும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்து நின்ற அவன் அந்நாள் வந்ததும் அதை எதிர்கொண்டோடி தழுவுகின்றான். ஆ! என்ன மகிழ்ச்சி! நாட்கள் செல்லுகின்றன. என்? வாலிப முறுக்கிலும் மகிழ்ச்சியிலும் பறக்கின்றன. ஆம்? இறக்கை கட்டிக்கொண்டுதான் பறக்கின்றன.

'குடும்ப இன்பங்களே குவலயம் தருபவைகளுள் தலை சிறந்தவை. குழந்தைகளிடம் பெற்றோர்களுக்குள்ள ஆனந்தமே மனிதன் அறிந்த ஆனந்தங்களில் புனிதத்தில் புனிதமானது. அது அவர்கள் இருதயத்தை தூய்மைப்படுத்துகின்றது. அதை நல்லுருவாகச் செய்கின்றது. அது மனிதர்களை ஆண்டவனிடம் கொண்டு சேர்க்கின்றது' என்று ஆங்கில அறிஞர் பெஸ்டலோஜி கூறியிருக்கிறார்.

இனி அந்த குழந்தைகளின் சக்தியை கவனிப்போம். அவன் வேலை செய்துகொண்டிருக்கிறான். டெலிபோன் மணி கிணுகிணு வென்று ஒலிக்கின்றது. ரிஸீவரை எடுத்து காதில் வைத்துக்கொள்ளுகிறான். "வீடு தீப்பற்றி எரிகின்றது. குழந்தை வீட்டிற்குள் அகப்பட்டுக்கொண்டது." என்ற பரிதாபகரமான செய்திதானு காதில் விழவேண்டும்? ஆ! என்று அலறுகின்றான். ரிஸீவரை தொப்பென்று கீழே வைக்கின்றான். தன் மேஜைக்கு ஓடுகின்றான். வழக்கம்போல் தலைப்பாகையை எடுத்து அணிந்துகொள்ளவில்லை. அதை அப்படியே ஒரு மூலையில் எறிந்துவிட்டு ஓடுகின்றான். எதிரில் சேவகன் வருவதையும் லட்சியம் செய்யவில்லை. எஜமானே என்று அவன் கூப்பிடுவதைக் கேட்டுத் திரும்புகின்றான். அவன் முகம் பார்க்க விகாரமாயிருக்கிறது. சேவகனே "துரை உங்களை சீட்டாட அழைக்கிறார்" என்கிறான். உண்மையாகவா? துரையே அவனை சீட்டாட அழைத்தால் அது எவ்வளவு கௌரவம்! மற்றோர் சமயமாயிருந்தால் அவன் அதை நம்பக் கூட மாட்டான்! தலை கால் தெரியாமல் குதிப்பான்! அந்த அந்தரங்க விஸ்வாஸத்தைப் பெற உயிரும் உடலுமாய் உழைத்த அநேகம் குமஸ்தாக்களில்

அவனும் ஒருவன்! ஆனால் இப்பொழுதோ பதில்கூட பேசாமல் ஓடுகிறான். சேவகன் முழிக்கின்றான். அவனை அப்படி முழித்துக்கொண்டிருக்க விட்டுவிட்டு ஓடியவனைத் தொடர்வோம்.

அவன் டிராமில் ஏறி உட்கார்ந்துகொள்ளுகிறான். எதிரில் புன்னகை பூத்த வதனத்துடன் அழகே திரண்டுருண்டு ஓர் உருவெடுத்து வந்ததுவோ என்று ஐயுறத்தக்க காரிகை ஒருத்தி உட்கார்ந்துகொண்டிருக்கின்றாள். இவன் அவளை ஏறெடுத்துக்கூட பார்க்கவில்லை. ஆனால் அவளாக இன்று "நீங்கள் டென்னிஸ் விளையாடுவதைக் கண்டு பிரமித்துவிட்டேன். உங்களோடு ஒரு 'ஸெட்' டென்னிஸ் விளையாடவேண்டுமென்று........" மேலே அவள் என் பேசுகின்றாள்! அவன் அவளைப் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டான். எவ்வளவோ சமயங்களில் அவளோடு ஒரு வார்த்தை பேச அவன் எதையும் தியாகம் செய்யத் தயாராயிருந்தான். ஆனால் இப்பொழுது அவன் மனம் அவள்பால் செல்லவில்லை. கடைசியாக வீட்டை அடைகின்றான். எங்கும் ஓரே இறைச்சலும் அழுகையுமாயிருந்தது. எங்கும் புகை எழும்பி மேக மண்டலத்தை மறைத்துக்கொண்டது. இவன் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்வார் எவருமில்லை. ஆனால் மெதுவாக இவன் விஷயத்தைக் கிரஹித்துக்கொண்டான்.

குழந்தை சாப்பிட்டுவிட்டு தொட்டிலில் படுத்துக்கொண்டது. குழந்தை தூங்கியதும் தாய் ஏதோ காரியமாக வெளியில் சென்றாள். வேலைக்காரி மட்டும் குழந்தை அருகில் தூங்கிக்கொண்டிருந்தாள். சில உறவினர்களும் வீட்டில் இருந்தார்கள். வீடு எப்படியோ தீப்பிடித்துக்கொண்டது. கலவரத்தினாலும், திகிலினாலும் எல்லோரும் வீட்டை விட்டு வெளியே ஓடி வந்தார்கள். குழந்தை அவரிடமிருக்கின்றது இவரிடமிருக்கின்றது என்று நினைத்திருந்தனர். ஆனால், எல்லோரும் வெளியில் வந்த பிறகு குழந்தை ஒருவரிடமுமில்லை எனத் தெரிந்தது. விம்மலும் பொருமலும் உதட்டைக் கடித்தலும் எங்கும் நிரம்பின.

தீயணைக்கும் படையினர் எவ்வளவோ சிரமப்பட்டும் நெருப்பின் அருகில்கூட செல்ல முடியவில்லை. அவன் அவர்களிடத்தில் ஓடுகின்றான். "ஐயோ, எங்கள் சிறிய இனிய குழந்தையை எப்படியாவது காப்பாற்றுங்கள். எங்கள் சொத்து முழுவதையும் கொடுக்கிறோம். எங்களுக்கு சொந்தமான எதையும் கொடுக்கிறோம். நாங்கள் இனி சம்பாதிப்பதில் ஒரு பகுதியையும் கொடுத்துவருகிறோம். எப்படியாவது எங்கள் குழந்தையைக் காப்பாற்றுங்கள். ஐயோ எப்படியும் காப்பாற்றுங்கள்" என்று அலறுகின்றான்; கதறுகின்றான். சொத்து சுதந்தரம் எதையும் குழந்தைக்காக தியாகம் செய்யத் தயாராக அவன் அந் நிலையில் இருக்கின்றான்.

"குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்த்தும்
மயக்குறு மக்கள்"

என்றபடி அக்குழந்தையின் வசீகரத்தை அவன் எதற்காகவும் இழக்க தயாராயில்லை. ஆனால் அந்த குழந்தையின் வசீகரமாவது என்றும் நிலைத்திருக்

கிறதா என்றால் ஐயோ! அதுதான் இல்லை என்று வருத்தத்துடன் கூற வேண்டியிருக்கிறது. குழந்தை பெரியவனானதும் அந்த பழைய இணைப் புக்குக் காரணமான வசீகரமான மோஹன வடிவு மறைந்துவிடுன்றது. எனவே அந்த பழைய அன்பு விட்டுப்போகாதுபோனாலும் பழைய இணைப்பு என்னமோ நீடிப்பதில்லை.

அப்படியாயின் இதுவரை படிப்படியாக கவனித்துவந்தவற்றில் இன் பம் நிலைபெற்றது எவ்விடத்தில் எனக் கேட்கின்றோம். ஒரு இடத்திலும் இல்லை என்பது வெளிப்படை. இன்ப துன்பங்களுக்குக் கர்த்தாவான பரம் பொருள் ஒன்றே நிலையானது. மற்றது எல்லாம் மாயை. மாயையாவது யாது? அது அநாதி. முடிவையுடையது அது உள்ளதுமல்ல. இல்லாதது மல்ல. இரண்டும் கலந்ததுமல்ல. ஆகவே இன்னதென் றுரைக்கப்படாத அநிர்வசனீயம் எனப்படுகின்றது. இதன் தன்மை இதுவாகலின் இதன் காரியமான உலகம் அநிர்வசனீயமாகும்.

இவ்வுலகம் காட்சிப்பிரமாணமாக காணப்படுகின்றன என மேற்கூறிய வற்றால் அறியலாம். கண்ணுக்கும் அதனால் அறியப்படும் பொருளுக்கு முள்ள சம்பந்தமே காட்சிப்பிரமாணமாகும். அதாவது கண் ஒரு பொருளை (மண்,பெண்,பொன் ஏதோ ஒன்றை)ப் பார்க்கின்றது. இவ்விரண்டுக்கும் சம் பந்தம் நிகழ்கின்றது, சம்பந்தம் என்பது சம்பந்திகள் வேறாய் இருபொருள் களிலுமுள்ளதாய் ஒன்றை ஒன்று பற்றியதென்னும் உணர்ச்சியைத்தருவது. இதன்படி கண் ஒன்றைப் பார்த்து அதை ஸ்தூலமாக அடைந்த உணர்ச்சி பெற்றதும் அதற்கு அன்னியமாய் நின்றுவிடுகின்றது. கண்ணுக்கும் அதற்குமுள்ள சம்பந்தம் ஈண்டு குறிப்பிடற்பாலது. கண் அவ் வஸ்துவல்ல. அன்றி அவ்வஸ்துவும் கண்ணல்ல. இரண்டும் தனிப்பட்ட பொருள்கள். இதுதான் காட்சிப்பிரமாணம். குழந்தையாய் தானே முதலில் ஜனித்தான். பின்னர் அதே குழந்தைக்காக எல்லாவற்றையும் தியாகம்செய்ய துணிந்தான்.

இவற்றால் இவ்வுலக இன்பம் எப்படி நிலை அற்றது என்று விளக்கினோம். அதனால் யாவரும் துறவறத்தை நாடவேண்டும் என்பது நம் கருத்தல்ல. நிலையற்ற இன்பத்தில் அதீத இச்சை வைக்காமல் தன் கடமை என்று ஒவ்வொன்றையும் செய்துவரவேண்டும் என்பதே நம்அபிப்பிராயம். "நிஷ் காம்ய கர்மம்" நம்மை பேரின்ப வீட்டிற்கு அருகதையாக்கும் என்பது துணிவு.



பிரதிக்ஞை

(V. A. சின்னஸ்வாமி.)

ஆதித்தன் தன் அந்திம அருண கிரணங்களினால் ஆற்றின் மணலை ஸ்வர்ண மயமாக்கிக் கொண்டிருந்தான். மல் லிகை மகரந்தங்களின் சுகந்தம் சேர்ந்த சீதள சமீரம் மந்தகதியில் வீசிக் கொண்டிருந்தது. மானிட உள் ளங்களில் எழுந்து எழுந்துவிழும் எண்ணங்களைப் போன்று ஆற் றிலும் அலைகள் எழுந்து எழுந்து விழுந்துகொண்டிருந்தன. இச் சிங்கார சோபாம்ருதத்தைப் பரு கியதால் உன்மத்தம்பிடித்து உட் கார்ந்து கொண்டிருந்தாள் ரத்தி னம். திடீரென்று யாருடைய னவோ இரு கோமள கரங்கள் அவள் கண்களை மூடின.

"யார்? கமலாவா" பதிலில்லை. "இல்லை. ரமாமணி" இதற்கும் பதிலில்லை. மெல்ல கைகளை தொட்டுப் பார்த்தாள். ஷர்ட் கப்கள் கிடைத்து விட்டன. "ஓ! கோபால்!" என்று சொன்னதும் விடுதலையடைந்தாள்.

கோபாலன் புன்முறுவலுடன் "ரத்தினம்! உனக்கு என் பகவான் இவ்வளவு அறிவையும் அழகையும் கொடுத்தார்? உன்னையடைபவன் பெரிய பாக்யசாலி என்பதில் சந்தேகமில்லை" என்று கூறிப் பெருமூச்சு விட்டான்.

"ஏன் வீண் புகழ்ச்சி செய்கின்றாய் கோபால்! நான் என்ன அவ்வளவு அழகிற் சிறந்தவளா?" என்று சங்கோசத்துடன் ரத்தினம் கூறினாள்.

"நீ பெரிய கள்ளி. என் ஹிருதயத்தையே திருடிக் கொண்டு விட்டாய். இப்பொழுது பொய்யும் பேச வாரம்பித்து விட்டாய்!" என்றான் காபாலன்.

"என்ன பிதற்றுகின்றாய்? அந்தஸ்தை அறிந்து பேசு. நீ ஒரு பெரிய மிராசுதாரின் மகன். நானோ ஒரு அநாதை. மேலும் நீ உயர் குலத்தைச் சேர்ந்தவன்" என்று ஆத்திரத்துடன் கூறினாள் ரத்தினம்.

"நீ என்ன 9-ம் நூற்றாண்டு பேர்வழியைப் போல் குலம் கோத்திரம் எல்லாம் பேசுகின்றாயே? காதலின் முன்னால் ஜாதி மதம் அல்ல; இந்த உலகின் எந்த பெரிய சக்தியும் ஒரு பொருட்டல்ல."

"ரொம்பவும் நல்லது. இந்த மாதிரி பசப்பு வார்த்தைகள் பேசி என்னையா ஏமாற்றப் பார்க்கின்றாய்? இந்தக் காலத்தில் ஒன்று மறியாத யுவதிகள் எவ்வளவு பேர் இம் மாதிரி காமவெறி பிடித்தவர்களின் கைகளில் சிக்கி கடைசியில் சந்தியில் நிற்கின்றனர்!"

கோபாலனுக்கு இந்த வார்த்தைகளைக் கேட்டு அளவற்ற துக்கம் உண்டாயிற்று. அவன் மனதில் இருந்த கொஞ்சம் நஞ்ச நம்பிக்கையும் அகன்று விட்டது. அவன் யாரை இவ் வுலகத்தின் முழுமனதுடன் நேசித்து வந்தானோ அவளிட மிருந்தே திரஸ்கார வார்த்தைகளை எப்படி எதிர்பார்க்க முடியும்? கண்களில் நீர் ததும்பிய வண்ணம் "ரத்தினம், என்னை ஒரு போதும் அப்படி யெண்ணாதே. இவ்வளவு நாள் பழகியும் என்னை இன்னும் நீ அறிந்து கொள்ள வில்லை. என் குல தெய்வம் முருகக் கடவுள் சாட்சியாக மணந்தால் உன்னையே மணப்பேன்; இல்லா விட்டால் பிரம்மசர்ய பாலனம் செய்வேன்" என்று பிரதிக்ஞை செய்தான்.

ரத்தினத்தின் மனதிலும் சகானுபூதி தோன்றியது. அவளுக்கும் அவளை யறியாமலே இவனிடம் ஒருவித பிரீதி ஏற்பட்டு விட்டது. "ஆனால் வாஸ்தவமாக என்னை நீ காதலிக்கின்றாயா?"

"இன்னும் சந்தேகமா?"

இருவரும் மௌனம் சாதித்தனர். தினகரனும் உலகத்தாருக்கு "எவ்வளவு நாள் எவ்வளவு ஆனந்தத்துடன் இவ்வுலகில் வாழ்ந்தாலும் ஒரு நாளைக்கிறப்பது திண்ணம்" என்னும் நீதியைப் புகட்டுவது போல் மேற்றிசை மலை மாலைகளின் மத்தியில் மறைந்தான். தினம் பூராவும் அத்யந்த பிரகாசமாய் ஜ்வலித்துக் கொண்டிருந்த தினகரனின் இப் பரிதாப நிலையைப் பார்த்து துக்கம் தாங்க முடியாத காரணத்தால் தன் வைரங்கள் பதித்த கரும்புடவை யணிந்து கொண்டு சந்திரவதனி இரவும் சூர்ய பகவானுக்கு தேறுதல் சொல்லப் புறப்பட்டாள்.

2

"நான் சொல்வதைக் கேட்டாற்கேள். இல்லா விட்டால் இந்த வீட்டை விட்டுப் போ" என்று கோபத்துடன் கூறினார் கோபாலனின் தகப்பனார்.

"அப்பா! அந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் என் எண்ணத்தை மாற்ற முடியாது" என்றான் கோபாலன்.

"குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்பே! நான் உன்னைக் கெட்டுப் போகவா சொல்கின்றேன்? அந்தப் பெண் ரங்கநாத முதலியாரின் ஏக புதல்வி. சொத்தும் ஒரு லட்சத்திற்கு இருக்கிறது. வீணில் ஏன் கெட்டுப் போகிறாய்?"

"அப்பா! நான் ரத்தினாளை விட்டு விட்டு வேறொருத்தியை கனவிலும்...
........................."

"பறைப்பையனைப் பள்ளியில் வைத்தாலும் 'அநே' என்கிற புத்தி போகாது. நீ மறுபடியும் அந்த அநாதையைப் பற்றிப் பேசுகிறாய். ஏதோ கொஞ்சம் கோணை யெழுத்தும் தனுக்கும் மினுக்கும் படித்திருக்கிறாள்; ஆனபடியால் நீ மயங்கி விட்டாய்"

"அவள் நல்ல விவேகி. ஞானமுள்ளவள். ஏழை வீட்டுப் பெண்; நம் மிஷ்டப்படி நடப்பாள்."

"ஓஹோ நான் சொல்வதைக் கேட்கமாட்டாய். நீ எக் குட்டிச் சுவராய் போனால் எனக்கென்ன? என் பேர் வீணாகக் கெட்டுப் போய் விடும். கந்தசாமி முதலியார் மகன் ஒரு நாயுடுப் பெண்ணை கட்டிக் கொண்டான் என்ற களங்கம் மறைவதெப்போ?"

"இதில் என்ன களங்கம்? இன்றைக்கு எத்தனை முதலியார்கள் தேவடியாள் வீட்டிற்குப் போகிறார்கள். கல்யாணம் செய்து கொண்டால் களங்கம் வந்து விடுமாக்கும்" என்று ஆத்திரத்துடன் கூறினான் கோபால்.

"அது போகட்டும்; ரூபாய் ஒரு லட்சம் வருகின்றதே. அது எப்படி சம்பாதிப்பாய்?"

"எனக்கு கல்யாணம் செய்து கொள்வது ரூபாயுடனல்ல. ரூபாய் என் வாழ்க்கைத் துணைவியாக முடியாது. ஆனந்த மில்லாமல் ரூபாயை என்ன செய்வேன்?"

"கொஞ்சம் கூட தகப்பனிடம் மரியாதை யில்லாமல் எதிர்த்துப் பேசுகிறாயா? செல் அப்புறம். உனக்கு ஒரு செப்புக் காசுகூட வைப்பதில்லை. ஏதாவதொரு கோவில் குளத்திற்கு எழுதி வைத்து விடுகிறேன் பார்." என்று கர்ஜித்தார் கந்தசாமி முதலியார்.

கோபாலனும் விசனத்துடன் அந்த அறையை விட்டு வெளிக் கிளம்பினான்.

3

கோபால் கண் திறந்ததும் ஒரு புதிய சுத்தமான பெரிய அறையில் ஸ்பிரிங் கட்டிலில் படுத்திருப்பதைப் பார்த்து ஆச்சர்ய மடைந்தான். பிறகு தன் உடம்புகளில் கட்டுகளையும் உடம்பு பூராவும் வீக்கத்தையும் பார்த்ததும் மெல்ல மெல்ல முன் நடந்த சம்பவங்கள் ஒருவாறு ஞாபகத்திற்கு வந்தன. தாகம் எடுத்தது. மேஜையின் மேலிருந்த காலிங் பெல்லைத் தட்டியதும் ஒரு அழகிய யுவதி வந்து "என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

"கொஞ்சம் தண்ணீர்" என்று கோபாலன் மெல்லிய குரலில் கேட்டான். அந்த யுவதி ஒரு பீங்கான் கோப்பையில் தண்ணீரை அவன் முகத்தருகில் கொண்டு வந்து கொடுத்தாள். கோபால் தண்ணீரருந்தி விட்டு, "நான் எங்கிருக்கிறேன்?" என்று கேட்டான்.

"ஜெனரல் ஆஸ்பத்திரியில்"

“எப்பொழுது வந்தேன் ?”

“காலை 11 மணிக்கு”

கோபாலனுக்கு இன்னும் சரியாக உணர்ச்சி வரவில்லை. ஆனபடியால் ஏதோ சொப்பனம் காணுவது போன்று அவனுக்குத் தோன்றியது. மேலும் இக் குரலை எங்கோ கேட்டது போன்று தோன்றிற்று. கோபாலனுக்கு ஒரு சிந்தனை. இம் மூர்ச்சித்த நிலையிலும் “ரத்தினம் ! ரத்தினம் !!” என்று பிதற்றிக் கொண்டேயிருந்தான்.

“எந்த ரத்தினத்தை நினைத்துக் கொண்டு புலம்புகிறீர்கள்” என்று கேட்டாள் அந்த யுவதி.

“என் ‘கிளாஸ்மேட்’ ரத்தினம். அவளுக்காகத்தான் இச் சங்கட நிலையிலும் பிராணனை வைத்துக் கொண்டிருக்கின்றேன்.”

“என்ன தூக்கத்தில் பிதற்றுகிறீரா ?”

“தூக்கமா ? வெகு நல்ல தூக்கம். நானும் என் ரத்தினமும் VI பாரம் வரை ஈரோடு ‘மஹாஜன ஹைஸ்கூலில் ‘கிளாஸ்மேட்டு’கள். அவளிடம் நான் அவளையே மணப்பதாக பிரதிக்ஞை செய்திருக்கின்றேன். என் தகப்பனார் என் விவாஹத்தை ஒரு பணக்காரனின் பெண்ணுடன் நிச்சயம் செய்திருந்தார். நான் எப்படி ஒத்துக் கொள்ள முடியும் ! அவளிடம் என் உள்ளத்தையே பறிகொடுத்து விட்டேன். அதனால் தான் வீட்டை விட்டு வெளியே போகவும் நேர்ந்தது. வேறொரு வேலையும் அகப்படாததால் இங்கு கூலி வேலை செய்து வந்தேன். எனக்கு என் ரத்தினமில்லாமல் உண்ணவும் முடிய வில்லை. உறங்கவும் முடிய வில்லை. என் உடம்பும் இந் நிலைமையை அடைந்தது. இன்று என் எஜமான் ஒரு நெய் ஜாடியைத் தலையில் வைத்து ஸ்டேஷனுக்கு கொண்டுவரச் சொன்னார். தவறிக் கீழே விழுந்து விட்டது. அதனால் தான் இம் மாதிரி தன் கை நோக பிரம்பால் அடித்தார். ஹா ! ரத்தினம் !!”

அந்த யுவதியால் பொறுக்க முடியவில்லை. சொல்லச் சொல்ல அவள் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகியது. “ஆ கோபால்! எனக்காகவா நீ இவ்வளவு கஷ்டப்பட்டாய் ?” என்று கூறி அவனைத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டாள்.

* * * *

கந்தசாமி முதலியார் தன் புதல்வன் கோபாலனைப் பிரிந்து இரண்டு வருஷங்களாயின. புத்ர சோகத்தால் எலும்பும் கூடுமாய் விட்டார். பிரபல தினசரிகளில் தன் மகனுக்கு தன் நிலைமையை எடுத்துக் கூறி தன்னை மன்னித்து உடனே வந்து பார்க்க வேண்டு மென்று கடிதம் விளம்பரம் செய்தார்.

கோபாலன் தன் தகப்பனாரின் நிலையை யறிந்து ரத்தினத்துடன் தன் வீட்டிற்குச் சென்றான். முதிய வயதில் வெகு நாள் பிரிந்திருந்த தன் புத்திரனைப் பார்த்ததும் ஆனந்த மிகுதியால் அவர் ஹிருதயம் அப்படியே நின்று விட்டது.



ஔவையார்

(ஸ்ரீமதி. பண்டிதை—அசலாம்பிகை அம்மையார்.)

“வேண்டி வினை செயேல்” என்பது அடுத்த நீதி. இதற்கு யாதொரு பயனை விரும்பி நீ தீவினையைச் செய்யாதே என்பது பொருள். இந்தத் தொடரில் வினையென்பது பொதுப்படவே ஆளப்பட்டிருக்கிறது. இதனால் நல்வினை செய்வதாயினும் சுயநலம் கருதிச் செய்யாதே என எச்சரித்ததாகவும் கொள்ள இடமுண்டு. இவ்வாறு செய்வதால் தீமை யில்லாவிடினும் சுயநல எண்ணம் வளர்ச்சி பெறக்கூடும். தன்னலம் கருதி ஒரு நற்காரியத்தினைச் செய்ய முதலில் முற்படுவோர் காலக்கிரமத்தில், தன்னலமே தலைமைக் கொள்கையாகி அதற்காகத் தீவினையையும் செய்ய முனைவோ ராகலாம். நல்வினை தீவினை இரண்டிற்கும் காரணம் ஈண்டு சுயநலந்தான் என்பது விளக்கம். சுயநலம் எல்லா நலங்களையும் அழிக்கும். அதனையே ஔவையார் முதலில் வெறுப்பதை யுணர்த்த இந்நீதியில் சுயநலத்தைக் குறிக்கும் ‘வேண்டி’ என்னு மொழியைத்தொடக்கத்தில் அமைத்துள்ளார் போலும்.

ஆனால் உலகில் பொதுவாக மக்கள் வழக்கில் வினை என்பதற்குத் தீவினை யென்பதே பொருளாகக் கொள்வது இயல்பு. உதாரணமாக துன்பப்படும் ஒவ்வொருவரும் அதற்குக் காரணம் தாம் பூர்வத்தில் செய்த வினைப் பயன்(தீமை) என்று புகல்வதையே காண்கிறோம். அதுபோல நன்மையை யடைந் தின்புறுவோர் தாம்செய்த பூர்வபுண்ணியம் என்று கூறுவதே மரபு. ஆதலினால் வேண்டிவினை செயேல் என்ற தொடரில் உள்ள வினை என்பதற்கும் தீவினை என்பதே பொருளாக உரை கண்டனர் அறிஞர். அன்றியும் சுயநலம் காரணமாயினும் செய்கை நன்மை தருமாயின் அதனால் இழுக்கில்லை. பிறரும் இன்புறுவர். இந்தக் கருத்தை யொட்டியும் வினையென்பதற்குதீவினை யென்றே பொருள் கோடல் விழுப்பமுடைத்து. முன்னைய கருத்தில் சுயநலம் என்னும் ஒரே பிழையுண்டு. பின்னைய கருத்தில் சுயநலம், பிறர்க்கின்னல் என இரண்டு பிழைகள் இடம் பெறுகின்றன. இதனாலும் தீவினை செய்வதைக் கடிந்தார் என்று கொள்வது சிறப்பு.

திருவாதவூ ரடிகள்,

“வாழ்த்துவதும் வானவர்கள் தாம்
வாழ்வான் மனநின்பாற்

றுழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெலாம்
தொழவேண்டி
சூழ்த்துமது காமுரலும் தாரோயை
நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானும்
உன்னைப் பரவுவனே.''

என்னும் இனிய செய்யுளால் சுயநல முயற்சியை எவ்வாறு இழித்துக் கூறியிருக்கின்றார் என்பது சிந்திக்கத்தக்கது. ஜயவிஜயீபவ என்றும், பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு எனவும், வாழி வாழி எனவும், எல்லா ஆத்திகப் பெரியார்களும் கடவுளை வாழ்த்துகின்றனர். இதன் உண்மை யென்ன? எங்கும் நீக்கமற நிறைந்து எல்லாமாகிய பிறப் பிறப்பில்லாத கடவுளுக்கு சின்னாட் பல்பிணிக் சிற்றறிவினராகிய நாம் வாழ்த்துக் கூறுவானேன்? வாழ்த்துரை தம்மினும் இளையோர்க்கன்றோ முதியோர் கூறுதல் முறைமை.

சராசரங்க ளனைத்தையும் ஆக்கியும் காத்தும் அழித்தும் செய்யும் எல்லாம் வல்ல இறைவனுக்குப் பிறப்புண்டா? இறப்புண்டா? எதற்காக நாம் வாழ்த்துக் கூறுவது? பின்னை மூதறிவாளரின் மொழிக்குப் பயன்தான் என்னை? எனின்.

விருப்பு வெறுப்பற்ற பரம்பொருளிடம் நாம் எதை அர்ப்பணம் செய்தாலும் அது அவ்வண்ணமே திரும்பி நம்மிடம் வருதல் உண்மை யாகும். இதற்குதாரணமாக மகாபாரதத்தில் ஓர் குறிப்புளது.

தருமபுத்திரர் ஆராதனை முடிவில் 'பாவபுண்ணியங்க ளிரண்டினையும் கிருஷ்ணா உனக்கே அர்ப்பணம் செய்கிறேன்' எனச் சொல்ல எத்தனிக்கையில் வீமன் தடுத்து 'அண்ணா நாம் கிருஷ்ணன் திருவடியில் அர்ப்பணம் செய்யும் எப்பொருளும் ஒன்று அநந்தமாக நம்மிடத்திலேயே திரும்பி வரும். ஆதலினால் புண்ணியத்தினை மட்டில் அர்ப்பணம் செய்யுங்கள். பாவத்தை அர்ப்பணம் செய்யவேண்டாம்' என்று கூறினார் என்பதே. ஆதலால் நாம் கூறும் வாழ்த்துரையும் நமக்கே வரும் என்னும் உட்கருத்தை விளக்கவே,

'வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்.'—என்றும்,

'மனநின்பாற் றுழ்த்துவதும் தாம் உயர்ந்து
தம்மையெலாம் தொழவேண்டி.'—என்றும்,

'சூழ்த்து மதுகரமுரலும் தாரோயை நாயடியேன்,
பாழ்த்த பிறப்பறுத்திடுவான் யானும் உன்னைப் பரவுவனே,'

என்றும் கூறிப் போந்தார்.

தேவர்கள் தத்தம் உள்ளங்களை நினது திருவடிகளில் தாழ்த்தி வணங்குவதும் அதன் காரணமாகத் தமக்கு மிகுந்த மதிப்பும் உயர்வும் ஏற்

பட்டுத் தமது பாதங்களில் பல்லோரும் வணக்கம் செய்தற் பொருட்டேயாகும் என்கின்றார்.

உண்மையில் தெய்வத்தை மெய்யன்புடன் வழிபடுவோர்களை பெரும்பான்மையாக எவரும் மேன்மைப்படுத்துதல் இயற்கை. தெய்வ வழிபாட்டிற் சிறந்த சீலர்கள் பிறர் தம்மை வணங்க வேண்டுமென்று ஒருகாலும் விரும்பவும் செய்யார். எனினும் உலகினர் செயலை இவர்கள் தடை செய்ய முடியாது. அன்பு காரணமாக இவர்களை எவரும் பணிந்தே தீருவர். இறைவன் திருவடியில் இவர் சிந்தை ஒன்று தாழ்வதால் எண்ணிறந்தோர் தலைகள் இவர் அடியிற் றாழ்கின்றனவென்பது வெளிப்படை. மேலடியில் வானவர்கள் வாழ்த்துவதும் தாம்வாழ்வு பெறவே என்பது யூகம்.

''மனம் நின்பாற் றுழ்த்துவதும் தாம் உயர்ந்து
தம்மை யெலாம் தொழவேண்டி.''

என்பது அநுபவம். பிந்திய உதாரணத்தைக் கொண்டு நாம் வாழ்த்தும் உரைகளும் ஒன்று அநந்தமாகி நம்மையே திரும்பவும் வந்தடைதல் உண்மை யென்பது துறுதியாகின்றது. மெய்யன்பர்களுக்கு பிறர் தம்மைப் பெரியவர்கள் எனப் போற்றுவதில் வெறுப்புண்டெனினும், ஜீவனோபாயத்திற்காக அடியார் வேடம் பூணும் பொய்யன்பர்களுக்குப் பல பாரமார்த்திகர்களையும் தமது வஞ்சவேட வலையிற் சிக்கவைப்பதே நோக்கமென்பதைக் கூற வேண்டியதில்லை.

இதனால் கடவுளை வாழ்த்துவதும் இவர் திருவடிகளில் வணங்குவதும் அநந்தம் அநந்தமாக நம்பால் வந்து குவிகின்றன. எனது பாழ்த்த பிறப்பறுத்திடும் இலாபம் கருதியே அடியேனும் உன்னைத் துதி செய்கின்றேன் எனத் திருவாதவூரடிகளே கூறி யுள்ளாரெனில், வேட்கையினால் தூண்டப்பட்டு வினை செய்யாதே எனப் பெருமாட்டியார் உணர்த்தியது அரிய உபதேசமென்பதில் ஐயம் உண்டோ? இதைத் தார்க்கிக முறையில் எந்நாட்டவரும் போற்றிப்புகழ எழுந்த நூல் குருக்ஷேத்திர பூமியில் பாண்டவருள் நடுப்பிறந்தோனாகிய தனஞ்ஜெயனுக்குக் கண்ணபிரானால் உபதேசிக்கப்பட்ட பகவத்கீதை என்னும் ஒப்பில்லாத பாரததேச பொக்கிஷம். திலகர் பெருமானின் திருவுள்ளத்தைக் கவர்ந்து அவரை நிஷ்காம்ய கர்மயோகியாக்கியதும் மோஹனதாஸ் கரம் சந்திரகாந்தியடிகளை இந்தியர்க்கே சொந்தமான மகாத்மாவாக்கியதும் கீதையே யாகும் என்னும் உண்மை அவ்விரு பெரியார்களின் ஜீவிய சரிதைகளைப் படித்தவர்க்கு நன்கு தெரியும்.

பயனை விரும்பாமல் (பலாபேக்ஷை யில்லாமல்) கடமையென எண்ணி கர்மத்தைச் செய் என்பதே கீதையின் ஸாரம். அவ்வாறு செய்பவன் கர்மத்தில் அகர்மத்தைக் காண்கின்றான். அதாவது வினை செய்தாலும் அதன் பயனில் நாட்ட மில்லாமையினால் அதனைச் செய்யாதவனாகவே ஆகின்றான் என்பது பொருள். அருச்சுனனைப் பயங்கரமான பாரதப் போருக்கு ஊக்கிய இவ்வெண்ணமே தற்காலம் நமது பாரததேச விடுதலைப் போருக்கும் அரும் பெரும் தலைவர்களை ஊக்கிச் செலுத்தியதென்பது மிகையாகாது.

எனவே, ஔவையார் வேண்டி வினைசெயேல் என்று வகுத்த நீதியில் ஜீதாஸாரம் அடங்கி யிருப்பது உன்னத்தக்கது. ஔவையார் தீவினையை மட்டில் செய்யாதே என்று தடுத்ததாகப் பொருள் கொள்வோமாயினும் ஆரம்பத்தில் சுயநலம் காரணமாக ஒரு தீயசெய்கையும் செய்யாமலிருக்கத் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முயற்சி செய்பவன் காலக்கிரமத்தில் சுயநலம் அற்றவனாக மாறுதல் இயற்கை. இந்த மாறுதல் ஏற்பட்டால் எவ்வினையையும் பற்றின்றிக் கடமைக்காகச் செய்பவனாகின்றான். இதுவே தெய்வீக நிலை. இதற்கு மேற்பட்ட நிலை வேறில்லை. இதனையே மேற்கண்ட நீதி குறிப்பதாகும்.

இனி அடுத்து வருவது "வைகறைத் துயிலெழு" என்னும் நீதி. வைகறை என்பது விடிவதற்கு ஐந்து நாழிகை முன்னிட்ட காலம். அதிலிருந்து நித்திரை தெளிந்து எழுந் திருக்கவேண்டும். அந்தக் காலமே விவேகம் களங்கமற்று நிமிர்ந்து நிற்கும் உத்தமகாலம். ஒவ்வொரு நாளையும் சத்துவ காலமென்றும் ராஜஸ காலமென்றும் தாமச காலமென்றும் முக்கூறாகப் பகுக்கலாம். மனிதரிடமுள்ள மேலே கூறிய மூன்று குணங்களும் மூன்றினுக்கும் உரிய காலங்களோடு சேருங்கால் இன்னும் வலிமை பெறும். அறிவை வளர்ப்பதற்கும் மனப்பாடம் செய்வதற்கும் மறந்தவைகளை ஞாபகத்தில் கொண்டு வருவதற்கும் காலை நேரமே ஏற்ற தென்பதை ஒவ்வொரு மாணாக்கரும் உணர்வர். இதுவே விடியற்காலம் அறிவை யெழுப்பும் ஆற்றலுடைய சத்துவகால மென்பதை மெய்ப்பிக்க வல்லதாகும். இத்தகைய அதிகாலை நேரங்களில் பண்டைக்காலத்திய பிரதம போதனைக் கூடங்களில் கற்பிக்கும் வழக்கம் இருந்ததால் அக்காலத்தில் பயின்றவர்கட்கு ஞாபகசக்தியும் மனனசக்தியும் அதிக மிருந்தது. வர வர பள்ளிக்கூடங்களில் அம்முறை மாறிவிட்டது கண்கூடு. இதற்கு முதற்காரணம் நம்மை ஆளும் ஆங்கிலேயர்களின் நாடுகளில் பனி மிகுதியினால் சூரியனை காலை ஒன்பது மணிக்கு முன் காண முடியாது. சூரியவொளி படாமல் பனிவிலகாது. அதற்கு முன் வெளியேறினால் அபாயம் நேரும். ஆதலினால் அவர்கள் பள்ளிக்கேகும் காலம் ஒன்பது மணி. உஷ்ண மிகுந்த நம் மிந்தியநாட்டில் ஆரோக்கியமான குளிர்ந்தகாலம் 9-மணிக்குள் விடை பெற்றுக்கொள்வ தியற்கை. மூளைக்குக் கொதிப்பை யேற்றும் வெய்யில் உயர்வது அதுமுதலே யென்று எவரும் உணர்வர். நடை யுடைகளிலும், உண்பன உடுப்பன ஆகியவைகளிலும் அநேகமாக ஆங்கிலேயரைப் பின்பற்றி நடக்க ஆவலுடையவர்களாகிய நம்மவர் பள்ளிக்கூட போதனைக்குரிய காலங்களையும் அந்நாட்டினரைப் பின்பற்றி வகுத்துக் கொண்டனர். இதன் பயனாக ஞாபகசக்திக்கு வேண்டற் பாலதாகிய நெட்டுருச் செய்யும் கட்டாய முறையும் கைவிடப்பட்டது. தற்போதுள்ள ஆசிரியர்கள் இந்த நுனிப்புல் மேயும் முறையிற் பயிற்சி பெற்றவர்களே யென்பதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. கணிதத்தை முன்னர் காலையில் பிரதம பாடமாகத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கூட எடுத்துக் கொண்டிருந்தனர். வந்த பாடங்கள் மறக்கும் மாலை நேரத்தில் வாய்ப்பாடு சொல்வதை இக்காலம் காண்பதெளிது. விடியு முன்பு படுக்கை விட்டெழாமல் இருக்கும் மாணவர்களும் பலர். தூக்கம் கலைந்தால்கூட அதிகாலை எழுந்திருக்கச் சோம்பலினாலேயே இருப்பர்.

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்."

என்றார் தெய்வப்புலவரும். அதாவது விரைந்து செய்யவேண்டிய காரியங்களைத் தாமதமாகச் செய்யும் குணமும் அதிக மறதியும் சோம்பலும் அதிக நித்திரையும் கேட்டினை எய்துவோர்களின் அடையாளங்கள் என்பது. தான் விரும்பி ஏறும் கப்பலில் பல துளைகள் இருக்குமாகில் விரைவில் அது நீரில் அமிழ்ந்து ஏறியவனை அழிப்பதுபோல், வாழ்க்கையில் மேன்மையடைய விரும்புவோர் மேலே சுட்டிய நெடுநீர், மறதி, மடி, துயில் ஆகிய நான்கு குற்றங்களுக்கு இரையாதல் கூடாதென்று உணர்த்தி யுள்ளார்.

ஆழ்ந்து சிந்திக்குமிடத்து நெடுநீர், மறதி, மடி ஆகிய மூன்று குறைகளுக்கும் பிறப்பிடம் பெருந்துயில் என்பது புலனாகும். ஆகவே மூதாட்டியார் "வைகறைத் துயிலெழு" என்று சுருக்கி யுரைத்தனர் போலும். மேலே கூறியபடி துயிலுணர்ந்தும் படுக்கையிலிருந்து எழாம விருப்போர்க்கும் எச்சரிக்கையாகவே அன்னையார் "வைகறைத் துயில் உணர்" என்றுரையாது "துயில் எழு" என்றமைத்த நுட்பம் போற்றற்குரியது. இதனைப் பற்றி நீதி நூலாசிரியர்,

"விடியலிற பறவைமிருகம் யாவுமுள்
விரைந்துணர்ந்து பலவினை செயும்
கடிமலர்ப் பொழில்கள் மலரும் ஆர்வமொடு
சுண்டிறந்து மதுபில்கிடும்
படியின் மன்னுயிரெலா மெழுந்து
பலபணியியற்றிட எழாமலே
தடியெனத் துயிலுவோன் நரன் கொலொரு
தாவரம்கொல் அறியோமரோ"

என்று இடித்துக் கூறினர். அதாவது ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவுகளை முறையே உடைய எல்லாவுயிர்களும் விடியு முன்னதாக உணர்ந்தெழுந்து சுறுசுறுப்புடன் தம்தம் கடனாற்றுதலைக் காண்கிறோம். ஆறறிவுடையனென்று போற்றப்படும் மக்களினத்திற் பிறந்தவன் மட்டில் சிற்றுயிர்களிடம் காணப்படும் கடமை யூக்கம் கொள்ளானாயின், அவனை துணித்து வீழ்த்தப்பட்ட மாத்தாலாகிய ஒரு தடிக்குச் சமானம் என்பதாகும். கொல் என்னும் அசையினால் அந்தத் தடியாகவாவது இருப்பானோ? என்னும் ஐயப்பாட்டினையும் சுட்டுகிறது. இம்மட்டோடு விடாமல்,

"வானுலா மருணன் எனும் மக்கள் ஆயுளின் கணக்கன்
தானெழு முன்எழாரைச் சகத்திரக் காத்தாற் றட்டும்
என்னென எழார் வாழ்நாளை எண்குறைத் தெழுதிக் கொள்வான்
ஆனது கண்டு காலன் அவரிடம் அணுகுவானே."

என மற்றுமோர் செய்யுள் வரைந்துள்ளார்.

இதன்பொருள் மனிதர்களின் ஆயுட்காலத்தை அளக்கும் கணக்கன் தினகரனாகிய சூரியனே யாவன். அந்தக் கணிதப் பணியுடைய சூரியனுக்கு ஆயிரம் (கிரணங்கள்) கைகள் உண்டென்பது நூல் வழக்கு. அக்கடவுள் தனது ஆயிரம் கைகளாலும் தான் கீழ்த்திசையில் உதயமாவதற்கு முன்னம் எழாமல் உறங்குவோர்களைத் தட்டி எழுப்புகின்றான். அதன் பிறகாவது துணுக்குற்று யார் யார் படுக்கை விட்டெழ வில்லையோ, அவர்களுடைய ஆயுள் பாகத்தில் தினப்பிடித்தம் இவ்வளவெனக் குறைத் தெழுதிக்கொள்வான். அதன் பயனாக இவர் அற்பாயுள் பெறுகின்றார். வாழ்வின் காலத்தை நிறைவேற்றி வைக்கும் பொறுப்புள்ள இயமன் மேற்சொன்ன பரிதிக் கணக்கன் ஆயுட்காலத்தில் நெடுந்துயில் காரணமாகக் கழித்துக் காட்டிய முடிவான புள்ளிகளையே ஆதாரமாகக் கொள்கின்றான் என்பது. இதைவிட அழகாகவும் அழுத்தமாகவும் சொல்லக்கூடியதுண்டோ?

சுருங்கக் கூறின் வைகறைத் துயில் எழாதவர்கள் சரீர ஆரோக்கியமும் குன்றி விரைவில் அகால மரணத்திற் குள்ளாவார் என்னும் நுட்பம் இதனுள் மிளிர்கிறது. பிணியாளருக்கும் அதிகாலையில் நோயின்வன்மை தணிந்து காட்டும். உட்கொள்ளும் மருந்துகளும் அதிகாலையில் உடலிற் சென்று நலம் விளைவிப்பதுபோலப் பிற நேரங்களில் விளைவியாது. மூளையை ஊக்கப்படுத்தும் முதற்சாதனம் வைகறையில் படுக்கை விட்டெழுந்து விடுவதே யாகும். புத்தி கூர்மையை விடப் பகுத்தறிவுடைய மனிதனுக்கு ஆக்கம் வேறில்லை. அதில் கவனமில்லாமல் நாம் நடந்து கொண்டால் புத்தி மந்தம் என்னும் வறுமைக்கு அடிமைப்பட்டு வாழ்நாள் எல்லாம் சிறுமை யுழத்தல் திண்ணம். ஔவையார் உபதேச மொழிகள் அனைத்துமே பல நோய்கட் கொரு மருந்தென்பதுபோல் அமைந்துள்ளவைகள் என்பது ஆன்றோர் துணிவு. ஆதலின் நாம் அவைகளை நன்கு உளத்திற் பதித்து அதன்படி ஒழுக முற்படுவோமாக.

ஆனந்தபோதினி

அச்சுக்கூடத்தில்

போஸ்ட் கார்டுகள் முதல் போஸ்டர்கள் வரை புஸ்தக வேலைகள் உள்பட எல்லாவித அச்சு வேலைகளும் சுத்தமாகவும், அழகாகவும், கால தாமதமின்றியும் செய்து கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ், மதராஸ்.

(ஆசிரியர் - வி. சங்கரய்யர்)

17. சுவாசகாசம், பீனஸம், தீபனம் முதலியவைகளுக்கு

தாடிமீ ரசாயனம்

மாதுளைப்பழச்சாறு $\frac{1}{2}$-படி, வெல்லம் 8-படி, திரிகடு சூரணம் 3-படி லேகிய பாகமாகக் கிண்டி தேன் நெய் சேர்த்து தினமும் சாப்பிட்டு வரவும்.

18. உஷ்ணவாய்வு, மூத்திரரோகத்துக்கு

கோக்ஷுர கஷாயம்

நெரிஞ்சி ஸமூலம், கஷாயம் வைத்து ஜீனியும், தேனும் சேர்த்துக் கொடுக்கவும்.

19. ஸர்வவாத ஹாரி,

ராஸ்னு பஞ்சகம்

சித்தரத்தை, சிற்றமிருது, தேவதாரு, சுக்கு, ஆமணக்குவேர் கஷாயம் வைத்துக் கொடுக்கவும்.

20. அஜீர்ணத்தா லுண்டான வாயு உபத்திரவத்துக்கு

தான்ய நாகரம்

கொத்தமல்லி, சுக்கு, ஆமணக்குவேர், இவைகளாலான கஷாயம் கொடுக்கவும்.

21. கண்குளிர்ச்சி, நேத்திரரோகத்துக்கு

பிருங்காமலக தைலம்

கரிப்பான்சாறு $\frac{1}{4}$-படி, நெல்லிக்காய்சாறு $\frac{1}{4}$-படி, நல்லெண்ணெய் படி 1, பால் படி 1. அதிமதுரத்தை பால் விட்டரைத்து கலக்கி எண்ணெய் காய்ச்சி வடிகட்டி மூழ்கி வரவும்.

22. தேககாந்தி, தேகபலம், தேகபுஷ்டி முதலியவைகளுக்கு

பஞ்சகவ்ய கிருதம்

கோரங்கிழங்கு, ஏலம், கொடுவேலிக்கிழங்கு, அமுக்கிராக்கிழங்கு, வாயுவிளங்கம், அதிமதுரம், மஞ்சள், மஞ்சட்டி, வசம்பு, திப்பிலி, கடுகு ரோகிணி, திருபலை, ஆடாதோடைவேர், திராக்ஷைபழம், மரமஞ்சள் இவைகளைத் தண்ணீர் விட்டரைத்து வைத்து பசுசாணக நீர் $\frac{1}{8}$ படி, பசு மூத்திரம் $\frac{1}{4}$-படி, பால் 2-படி, தயிர் $1\frac{1}{4}$-படி, நெய் 1-படி சேர்த்து காய்ச்சி வடிகட்டி தினம் காலை மாலை ஒரு டீ ஸ்பூன் வீதம் கொடுக்க கர்ப்பாசயு

சுத்தி யுண்டாகி கர்ப்ப முண்டாகும். புருஷனுக்கு சுக்கிலசுத்தி ரத்த விருத்தியு முண்டாகும்.

23. வயிற்றுவலி, அஜீரணம், முதலானவைகளுக்கு
அஷ்ட சூரணம்

சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், இந்துப்பு, ஜீரகம், கருஞ்சீரகம், காயம் வகைக்கு 1-பலம் வீதம் இடித்து பொடிசெய்து திரிகடிப்பிரமாணம் வெந்நீரிலோ, மோரிலோ போட்டு சாப்பிடவும்.

24. சகல ஜ்வர நாசினி
வட சிருங்காதி கஷாயம்

ஆலமொட்டு, ஆடாதோடைவேர் இவைகளுடன் பால் ¼-படி விட்டு கஷாயம் வைத்து தினம் இரண்டு வேளையும் கொடுக்கவும். தினம் புதிதாக செய்யவும்.

25. பாம்புக் கடிக்கு

வாழைமரத்தின் சாறு கொடுக்கவும். கிழங்கின்சாறு மிக சிலாக்கியம்.

26. தேள்கடிக்கு

நவசாரம், சுண்ணாம்பு இவ்விரண்டையும் உள்ளங்கையில் ஒன்று சேர்த்து ஆள்காட்டி விரலால் மூக்கில் முகரவும்; கொட்டிய இடத்தில் போடவும்.

27. பிரண்டைத் துவையல்

பிரண்டையை எண்ணெய்விட்டு வதக்கி அதோடு ஜீரகம், மிளகு, மஞ்சள், உப்பு, புளி சேர்த்து அரைத்துக் கூட்டவும். இது ஜீரண சக்தியை வளர்க்கும்.

28. சகல ஜ்வரத்துக்கும்
முதற் சிகிச்சை

5-வெற்றிலை, 9-அரிசித்திப்பிலி, 1-அங்குலநீள அரத்தை இவைகளை நன்றாக மைபோல் தண்ணீர்விட்டு அரைத்து ஒரு காண்டியைக் காய வைத்து அதில் விட்டு சுரசம் செய்து கொடுக்கவும். இப்படி 3-வேளை கொடுக்கவும்.

இதில் குணப்படாத பக்ஷம்

சுக்கு, தேசாவரம், செவியம், சிறுதேக்கு, பேப்புடல், சித்தரத்தை, நிலவேம்பு, பற்படகப்புல், திராக்ஷைப்பழம் வகைக்கு காலணுவுக்கும் திப்பிலி அரையணுவுக்கும் வாங்கி நன்றாக இடித்து மூன்று சமபாகம் வைத்து ஒரு பாகத்தில் அரைப்படி தண்ணீர்விட்டு கஷாயம் வைத்து கால்படியாக வற்றவைத்து காலை மாலை வேளை யொன்றுக்கு அரைக்கால்படி வீதம்

கொடுத்து வரவும். மூன்று நாட்கள் கொடுத்தால் சகல ஜ்வரமும் குணப்படும்.

29 பைத்தியம், சித்தப்பிரமை, உஷ்ணம்
இவைகளுக்கு

அகத்திக்கீரை, வெங்காயம் இவைகளை கறி சமைத்து சாப்பிட்டு வரவும்.

30. குஷ்டத்திற்கு

மருதோணிவேர் கஷாயம் சாப்பிட்டு வரவும்.

31. இரத்தவிருத்திக்கு

கசகசா, வால்மிளகு, வகைக்கு பலம் 2. இளவறுப்பாக வறுத்து அதில் வாதம்பருப்பு சீனிக் கற்கண்டு, வகைக்கு 2-பலம் வீதம் சேர்த்து இடித்து தினம் காலை மாலை சாப்பிட்டு வரவும்.

32. வயிற்றுவலிக்கு ஓமப்பொடி

ஒரு சேர் ஓமத்தை புளித்தமோரில் ஊறப்போட்டு உலர்த்தி பிறகு அப்படியே எலுமிச்சம்பழச் சாற்றில் ஊறப்போட்டு உலர்த்தி ½-சேர் இந்துப்பு சேர்த்து இடித்து தினம் காலை மாலை ஒருவராகனிடை வீதம் சாப்பிடவும்.

33 தாதுபுஷ்டி ஹல்வா

கோதுமை, கசகசா, சவ்வரிசி, வாதம்பருப்பு வகைக்கு ¼-படி வீதம் ஜலத்தில் ஊறப்போட்டு மைபோல் அரைத்து எருமைப்பால் ஒருபடி, தேங்காய்ப்பால் ஒரு படி, சீனி ஒரு படி, நெய் படி கால், சேர்த்து நன்றாகக் கிண்டி ஏலப்பொடி சேர்த்து இறக்கி தினம் இரவு படுக்கும் முன் சாப்பிட்டுவரவும்.

34. முகவாதம், சந்துவாதம், பலஹீனம், ரத்தசுத்திக்கு
அன்னபேதி மாத்திரை

எலுமிச்சம்பழ ரசத்தில் ஊறப்போட்டு சுத்தப்படுத்தின அன்னபேதி ஒருபலம், மிளகு ஒருபலம், இரண்டையும் பொடித்து தேன் விட்டரைத்து மாத்திரை செய்து வைத்துக்கொண்டு ஒரு வேளைக்கு சுண்டைக்காய் பிரமாணம் காலை மாலை சாப்பிடவும்.

35. சொப்பன ஸ்கலிதம், துரித ஸ்கலிதம்

கர்ப்பூரம் 1-பலம், அபின் அரைக்கால் பலம் கூட்டி சேர்த்து அரைத்து மிளகு அளவு தினம் படுக்குமுன் சாப்பிடவும்.

36. சகல ஜ்வரத்துக்கும் லிங்க மாத்திரை

லிங்கம் விராகனிடை 1¼ திப்பிலி 2½ விராகனிடை பசுவின்பால் விட்டரைத்து பயற்றளவு மாத்திரை செய்து வைத்துக்கொள்ளவும். காலை மாலை தேனிலோ, இஞ்சிச்சாற்றிலோ கொடுக்கவும்.

37. சுக்கிலம் கெட்டிபட

தாழம்பூ மகரந்தத்தூள், அமுக்கிராக்கிழங்கு, வசம்பு, மருந்தோன்றி விதை இவை சமனிடை பொடிசெய்து வைத்து கோழிமுட்டை வெள்ளைக் கருவில் குழப்பி மேல் பூசவும்.

38. பித்தத்துக்கு ஜீரகப்பொடி

2-சேர் ஜீரகத்தை, வல்லாரை, கரிப்பான், பொன்னாங்காணி, புளியாரை, இஞ்சி, எலுமிச்சம்பழம், இந்தச் சாறு ஒவ்வொன்றிலும் தனித்தனியாக ஊறப்போட்டு உலர்த்தி தினம் காலை மாலை 2-விராகனிடை வீதம் சாப்பிட்டு வரவும்.

39 உஷ்ணத்துக்கு மிளகு

1-சேர் மிளகை கரிப்பான், எலுமிச்சம்பழம், இந்தச்சாறு ஒவ்வொன்றிலும் ஊறப்போட்டு, அத்துடன் ¼-சேர் இந்துப்பு சேர்த்து உலர்த்தி தினம் காலை மாலை 7-முதல் 10-மிளகு வீதம் சாப்பிட்டு வரவும். ரத்தசுத்தி விருத்தியு முண்டாகும்.

40. வல்லாரை கிருதம்

சிவதைவேர், இஞ்சி, மஞ்சள், நெல்லிப்பருப்பு, கடுக்காய், திப்பிலி, வாயுவிளங்கம், இந்துப்பு, வசம்பு, ஏலம் வகைக்கு 1-ரூபாயிடை வீதம் பொடிசெய்து வஸ்திரகாயம் செய்து வல்லாரைச்சாறு அரைப்படி, பசுவின் நெய் அரைப்படி சேர்த்து காய்ச்சி காலை மாலை கால் ரூபாயிடை வீதம் சாப்பிடவும். சகலமேக வியாதிகள், ஸ்திரீ வியாதி, சூதகவாய்வு, பாலர் கணைப் பிணிகள் தீரும். ரத்தசுத்தி ஞாபகசக்தி, தீபனசுத்தி யுண்டாகும்.

41. வல்லாரை சூர்ணம்

வல்லாரை இலையை பாலில் புட்டவியல் செய்து நிழலில் உலர்த்தி சூர்ணித்து தினம் காலை மாலை திரிகடிப்பிரமாணம் தேன் நெய் கலந்து சாப்பிடவும். சகல சர்மவியாதிகளும் தீரும். ஞாபகசக்தி அதிகப்படும். கல்லீரல் மண்ணீரல் பெருக்கும் குணப்படும்.



பழமையிற் புதுமை

—:(o):—

(S. ராமஸ்வாமி ஐயங்கார்)

பழையன வெறுப்பதும் புதியன விரும்பி ஏற்பதும் நம்மிற் சிலர் செய்கையாம். பழையன கழியின் புதியன கொள்மினென்றூர்ப்பரித்து 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே' என்னு முரையைத் தமக் காதாரமாகக் காட்டுகின்றனர். பழைமையிற் குற்றங் காணுதலும் நன்மை காணமாட்டாமையு மிதற்குக் காரணமாம்.

பல்லாண்டுகட்கு முன்பு வதிந்த அறிவிற் சிறந்த பெரியோர் எழுதிப் போந்த நூல்களில் நவீனக் கருத்துகளும் கொள்கைகளும் மலிந்து கிடப்பதைக் காணக்காண அப் பெரியோரின் தீர்க்க தரிசனம் நமக்குப் பெருவியப்பைத் தருவதாகும்.

கவிக்கரசு கம்பன் வாழ்ந்த காலம் பன்னிரெண்டாம் நூற்றூண்டின் இடைப் பகுதியாம். இவரறிவிற் றலை சிறந்த அரும்பெரும் புலவர். இவரியற்றிய அரிய பெரிய நூலாகிய இராமாயணத்தில் தம் முள்ளக் கருத்துகளையு மாங்காங்கே பொறித்திருக்கின்றூர். இவ்விராமாயணம் மிகப் பழைமையே யாயினு மிதிற் புதுமை மிளிர்ந்து காணப்படுகின்றது.

இது போழ்து நவீனமெனப் படும் பெண்கல்வி, பெண்களின் சொத்துரிமை, பால்ய விவாகத் தடை, தேவதாசி முறை ஒழிப்பு, மதுவிலக்கு அபேத வாதக் கொள்கை ஆகியவை கம்பராமாயணத்தில் இடம் பெற்றிருக்கின்றன. கம்பராமாயணச் செய்யுள்களைத் துருவித் துருவி யாராயுமிடத்துப் புத்தம் புதிய கருத்துகளும் தோற்றங்களும் நமக்குப் புலனாகாமற்போகா.

பெண்மக்கட்குங் கல்வி மிக அவசியமென்பது கம்பர்தங் கருத்து. நாட்டணி கூறுமிடத்து இதை மிக அழகு பெறக் காட்டுகின்றூர்.

'பெருந்தடங்கட் பிறை நுதலார்க் கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே'

என்று கூறுகின்றூர். மிகப் பெரிய கண்களோடு பிறைபோன்ற நெற்றியையுமுடைய மாதர்களுக் கெல்லாம் நிலைத்த செல்வமும் கல்வியறிவு முண்டாயிருத்தலால் தம்மை வந்தடைந்தார்க்குங் கொடுத்தலும் நாடோறும் விருந்தோம்பலு மல்லாது வேறு தொழில் யாது என மிடுக்குடன் வினவுகின்றூர்.

'கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்'

என்று ஆண் பெண் இருதிறத்தார்க்குங் கல்வி யவசியமென்பதைத் தமிழ் மறை பொதுவாகக் கூறி நிற்பதும் நோக்கற் குறித்து.

'கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்விமுற்ற
வல்லாருமில்லை யவை வல்ல ரல்லாருமில்லை'

என்று கம்பர் பிறவிடத்துங் கூறுகின்றார்.

'பொருந்து செல்வமும்' என்பதால் பெண்கள் நிலைத்த செல்வத்திற்கு முரித்தானவர் என்பது பெறப் படுகின்றது. வருந்தி வந்தவர்க்கீயு முரிமையும் அவர்க் குரித்து. எனவே பெண்களுக்குச் சொத்துரிமையு முண்டென்ற கருத்துக் கொண்டவர் கம்பனென்பதும் புலனாகின்றது.

(ஆற்றின் வெள்ளத்தைக் குறித்துக் கூறுமிடத்து,

'ஈக்கள் வண்டொடு மொய்ப்ப வரம்பிகந்
தூக்கமே மிகுந் துட்டெளி வின்றியே
தேக் கெறிந்து வருதலிற் றீம்புனல்
வாக்கு தேனுகர் மாக்களை மானுமே'

என்று கூறுகின்றார். இது கட்குடியருக்கும் வெள்ளத்திற்குஞ் சிலேடையாக வமைந்த பாடலாகும். கட்குடியனுடைய குணாதிசயங்கள் இப்பாட்டில் பரக்கக் காணப்படுகின்றது. தீம்புனல் வெள்ளம் வார்க்கப் படுகின்ற கள்ளைக் குடிக்கின்ற மனிதர்களை ஒத்திருக்கின்றது. இதெவ்வாறெனின் ஈக்கள் வண்டுகளோடு மொய்க்கவும், அணையைக் கடந்து வலிமிகுந்து உள்ளிடத்துத் தெளிவில்லாமலும், தேக்க மரங்களை வீசிக்கொண்டும் வருவதாலெனப்படும். கட்குடியர் மேலேற்றிக் கூறுமிடத்துக் கள் நாற்றத்துக்கும் இனிமைக்கும் ஈக்கள் வண்டொடு மொய்ப்ப, தமது குலம் குடிப்பிறப்பு முதலியவைகட் குரிய ஒழுக்க வரம்பு கடந்து மனத் தெளிவில்லாமல் வருதலாலென்ற பொருள்படும். கட்குடியால் ஊக்க மிகுவதாலும், மனத் தெளிவின்மையாலும் வரம்பு கடந்து செல்லுங் குணமடைவதாலும் கட்குடியன் செய்யுஞ் செயலனைத்தும் பெருந் தீங்கினதாகவே முடிகின்றது. அவன் குடும்பம் வீழ்ந்து படுகின்றது. எனவே கட்குடி கூடாது என்ற கருத்து இப்பாட்டி லொளிர்கின்றது. கம்பர் மதுவிலக்குப் பிரசாரத்தை எத்துணை நாகரீக முறையில் கையாண்டிருக்கின்றா ரென்பதுந் தெள்ளிதிற் புலனாம்.

'துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்'

'உண்ணற்க கள்ளினை யுணிலுண்க சான்றோரா
லெண்ணப்பட வேண்டா தார்'

என்பவை தமிழ் மறைமொழியாம். பெறுதற்கரிய அறிவைப் பெற்றிருந்தும் கள்ளாலழித்துக் கொள்ளுவாரை இயல்பாகவே அறிவில்லாத மிருகங்களுடனேயு மெண்ணாராகலால் 'சான்றோரா லெண்ணப்பட வேண்டாதாருண்க' என்றார். இதையறிந்தே சென்னை யரசாங்கம் சேலம் ஜில்லாவில் மதுபானத்தை யொழிக்கக் கருதி உத்தரவும் பிறப்பித்திருக்கின்றது. பல்லாண்டுகட்கு முன்னர் கம்பர் கொண்ட கொள்கை இது காலை ஒருவாறு வெற்றி பெற்றதென்னலாம்.

வேசைக்கும் வெள்ளத்திற்குஞ் சிலேடையாக,

'தலையு மாகமுந் தாளுந் தழீஇயதன்
நிலைநிலா திறை நின்றது போலவே
மலையி னுள்ள வெலாங் கொண்டு மண்டலால்
விலையின் மாதரை யொத்ததவ் வெள்ளமே'

எனக் கூறுகின்றார். வெள்ளத்தின் போக்கிற் குபமானமாக வேசையை யெடுத்தாள்கின்றார் கவி. விலைமாதர் தம்மிடத்து வந்த காமுகாது சிரத்தையும், மார்பினையும் பாதத்தையுந் தழுவின நிலையினளவாயினும் நில்லாமல் சிறிது நேரம் நின்றது போன்று காணப்பட்டு அன்னாரிடமிருக்கும் பொருள்கள் யாவற்றையும் பறித்துக் கொண்டு விரைந்து போதலே போன்று வெள்ளஞ் சென்றது என விலைமாதர் குணமும் அவர்களைச் சாரும் ஆடவரிழி நிலையு மொருங்கே எடுத்துக் காட்டுகின்றார். இன்னல் தருந் தேவதாசி முறை ஒழிமின் எனச் சாற்றுவது போன்றமைந் துள்ளதிப் பாடல். அகழி, 'பொன் விலை மகளிர் மனமெனக் கீழ் போய்' என்றார் பிறவிடத்தும். இவைகளை நோக்குழி கம்பர் எத்துணை ஆழ்ந்த நவீனக் கருத்துகளைக் கொண்டுளார் என்பது பெறப்படும்.

இனி அபேத வாதத்தைப் பற்றிக் கம்பன் கூறுவதை யாராய்வோம். அயோத்திமா நகரில்,

'எல்லாரு மெல்லாம் பெருசெல்வமு மெய்தலாலே
இல்லாரு மில்லை யுடையாரு மில்லை மாதோ?'

என்ற வடிகள் ஆழ்ந்த கருத்துக்களைத் தாங்கி நிற்கின்றன. அந் நகரிலிருப்பவர்க ளெல்லாரு மெவ்வகைப் பெருஞ் செல்வங்களையும் நிரம்பப் பெற்றிருப்பதால் அங்கு வறியவர்களுமில்லை, உடையவர்களுமில்லை என்பதிதன் கருத்தாம். ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் அங்கு தலைகாட்டுவதில்லை என்பதிதன் தேர்ந்த பொருள். இது குறித்து மேலும் விளங்கக் கூறுமிடத்து,

'வள்வார் முரசம் மதிர்மாநகர் வாழுமாக்கள்
கள்வா ரிலாமைப் பொருள்காவலு மில்லையாதும்
கொள்வா ரிலாமைக் கொடுப்பாரு மில்லைமாதோ'

என்று கூறி இவ்வபேத வாதக் கொள்கையை விளங்க வைக்கின்றார். அயோத்திமா நகரில் வாழும் மக்கள் தங்கள் பொருட்டுக் காவல் செய்வதில்லை. என்னையெனின் களவு செய்வா ரின்மையாலாம். வறுமையா லிரப்பாருமில்லை. எனவே கொடுப்பாருமில்லை யென்பதிதன் தேர்ந்த பொருள். இத்தகைய தேர்ந்த அருங் கருத்துகளையும் கொள்கைகளையும் பல்லாண்டுகட்கு முன்னரே கம்பன் கண்டார். நவீனம் நவீனமெனப் படுபவை வெகு காலத்திற்கு முன்னரே பெரியாரின் கருத்திற்றோன்றி வெளிப் போந்தவை யென்பது தேற்றம். பழைமையிற் புதுமை காணும் நோக்கொடு எவற்றையு மாராயின் பல உயரிய கருத்துக்களைக் காணலாம். கற்றறிந்த பெரியோர் நமக்கு விட்டுக் சென்ற நூல்களை இந்நோக் கொடு ஆராய்த லெத்துணை சிறப்பினதாகு மென்பது அறியக் கிடக்கின்றது. இப்போழ்து புதியனவாகத் தோன்றுபவை முன்னரே உண்டென்பது இவ்விராமயண ஆராய்ச்சியால் தெரிந்து கொள்ளலாம்.

உலகம்-ஒரு நாடக மேடை

(ஆரியூர்-வ பதுமநாப பிள்ளை.)

நீல வான வீதியிலே உல்லாஸமாக பவனி வந்து கொண்டிருந்த மோகன சந்திரனைக் கண்டு மகிழ்ச்சி பொங்கிய கடலரசி, அலைக்கைகளை வீசி அனந்த ஆரவாரம் செய்துகொண் டிருந்தாள். அவ் வேளையிலே, திருவல்லிக்கேணிக் கடற்கரையிலே, நிலவொளியால் பேரழகு பெற்று விளங்கிய வெண் மணல் தரையிலே, சுமார் நாற்பது வயது மதிப்புடைய ஒருவர் அமர்ந்திருந்தார். அன்று பகற்பொழுது முழுதும் ஆபீசில் ஏற்பட்ட 'எக்ஸ்ட்ரா ஹெவி—வொர்க்'கினால் விளைந்த சிரமத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக தனிமையின் இனிமையை அனுபவிக்கும் ஆர்வப் பெருக்குடன் 'மெரினா'வை அடைந்த அந்த கோபாலசாமி நாயுடு, ரேடியோவையும் ஜனக் கூட்டத்தையும் தாண்டி வெகுதூரம் சென்று ஏகாந்தமானதொரு இடத்தில் அமர்ந்துகொண் டிருந்தார். மனித இனத்தினின்றும் விலகியிருந்து சிறிது நேரமேனும் தனிமையை அனுபவிக்க வேண்டுமென்பது அவரது எண்ணம். ஆனால், மனிதர் எண்ணியது எண்ணியபடியே நிறைவேறி விட்டால், இந்த உலகம் எதற்காக இருக்கிறது? கடவுள் தான் எதற்கிருக்கிறார்? அந்த இடத்திலுங்கூட அவர் ஏகாந்த இன்பத்தை அனுபவிக்க முடியாதபடி எங்கிருந்தோ வந்து சேர்ந்தார், அவரது நெருங்கிய நண்பராகிய இராமசாமி நாயுடு. ஏகாந்த இன்பத்தை நாடிவந்த கோபாலசாமி நாயுடுவுக்கு, 'கண் மூடி மௌனி'யாகி சமாதி நிஷ்டையில் ஆழ்ந்துவிடும் கூடிய சக்தி இல்லை. எனவே, அதன் பின் அவருக்கும் அவரது நண்பருக்குமிடையில் நடைபெற்ற சம்பாஷணையைக் கவனிப்போம்:—

"என்ன, கோபு! ஏது இன்றைக்கு இவ்வளவுதூரம் வந்து விட்டாய்? என்னவோ தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்திருப்பது போல் தோன்றுகிறதே! என்ன விசேஷம்? என்னிடத்தில் சொல்லக் கூடியதாயிருக்குமோ?"

"என்ன சொல்லக் கிடக்கிறது? என்னைப் போன்ற மனிதர்கள், இந்த உலகத்தில் வாழ்வதற்குச் சிறிதும் தகுதியற்றவர்கள். வர வர இந்த உலகம் எனக்குக் கொஞ்சங்கூட பிடிக்கவேயில்லை. இந்த உலகத்தைத் தொலைத்துத் தலை முழுகிவிட்டு மனிதப் பூண்டேயில்லாத வேறு எந்த இடத்திற்காவது ஓடிப்போய் விடலாமா வென்றுகூட, அடிக்கடி நான் நினைப்பதுண்டு. இந்த நன்றி கெட்ட உலகத்தின் மண்ணை மிதிக்காமல், வேறு எங்காவது ஓடிப் போய்விட வேண்டுமென்று எனது மனம் மிகவும் துடிதுடித்துக் கொண்டிருக்கிறது. இதோ இந்த பரந்த கடலிலாவது நீல வானத்திலாவது தன்னந்தனியாக வசிக்கக் கூடிய சக்தி மட்டும் எனக்கிருந்தால், எவ்வளவு நன்றாயிருக்கும்! இந்த உலகத்தில், இந்த மனித ஜன்மம் இன்னும் எனக்கு எதற்காக?"

"எண்ணரிய பிறவி தனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண்; இப் பிறவி தப்பினால் எப் பிறவி வாய்க்குமோ ஏது வருமோ அறிகிலேன்"—என்று தாயுமானவர் கதறிப் புலம்பியிருப்பது உனக்குத் தெரியாதா? கடவுளால் அளிக்கப்பட்ட மகத்தான பாக்கியமாக மனிதப் பிறவியை, நீ இப்படி வெறுத்துப் பேசலாமா?"

"அந்தக் கடவுள் எனக்கு மனிதப்பிறவி கொடுப்பதற்கு முன்பு, என்னை மட்டும் ஒரு வார்த்தை கேட்டிருந்தால், "ஸ்வாமின்! தங்களுக்கு அனந்த கோடானு கோடி நமஸ்காரங்கள் சமர்ப்பிக்கிறேன். ஸம்ஸார ஸாகரத்தில் விழுந்து பலவகைப்பட்ட கவலையலைகளால் பெரிதும் அலக்கழிக்கப் பட்டுத் தவித்து கரையேறுங் காலத்தை எதிர்பார்த்து பலவகைப்பட்ட தளைகளால் கட்டுண்டு கலங்கிக் கிடக்கும் மனிதப் பிறவி மட்டும் எனக்கு வேண்டவே வேண்டாம். பூரண—சுதந்திரத்தைச் சிறிதும் பறிகொடுக்காமல் நீல வான வீதியில் சுயேச்சையாகப் பறந்து திரியும் ஏதேனும் ஒரு பறவைப் பிறவியை எனக்குக் கொடுத்தாலே போதும்"—என்று வேண்டிக்கொண் டிருப்பேன். என்னைப் போன்றவர்களுக்கும் இந்த உலகத்திற்கும் ஏழாம்பொருத்தந்தான்! இப்பொழுது, இந்த உலகம் எனக்குக் கொஞ்சங் கூட பிடிக்கவேயில்லை. எல்லாக் கட்டுகளையும் அறுத்துக் கொண்டு ஏகாங்கியாய்ப் புறப்பட்டு எங்கேனும் போய்விடலாமா என்று யோசித்துக்கொண் டிருக்கிறேன்."

"இதற்குள் ஏன் உனக்கு இவ்வளவு வைராக்கியம் பிறந்து விட்டது? யாராவது சாமியார் உபதேசம் பண்ணிவிட்டுப் போய்விட்டாரா என்ன?"

"சாமியாருமில்லை; கீமியாருமில்லை. "..........சற்றேனும்—ஏறுமாறாக இருப்பாளேயாமாகில்—கூறாமல் சந்யாசம் கொள்"—என்ற ஔவை மொழியே, இப்பொழுது என்னைத் தாண்டி விட்டுவிட்டது. போன மாதம் முழுதும் உழைத்த உழைப்புக்குப் பிரதிபல[illegible]ளத்தை வாங்கிக் கொண்டு இன்று வீட்டுக்குப் போ[illegible] மேலவைகயம்—அணை பைசா உட்பட—கண்டி[illegible] வாங்கிக [illegible]

187532

விட்டாள் எனது ‘கிருக.தேவதை’! எனது சொந்தச் செலவுக்காக ஒரு பத்து ரூபாயையாவது திருப்பிக் கொடுக்கும்படி, எவ்வளவோ நயமாக—அழாத குறையாக—அந்த தேவதையைக் கெஞ்சிக் கேட்டுப் பார்த்தேன். அப்பொழுது அவளது ‘திருமுக தரிசன’த்தைக் கண்டவுடன், வாய் திறக்கத் துணிவின்றி தலை குனிந்து கொண்டேன். “உங்க பணத்தை நீங்களே வச்சிக்கிட்டு குடும்பத்தை நடத்துங்கோ. எனக்கு வேறே போக்கிடம் இல்லாம போயிடலே. நாளைக்கே நான் எங்க தாயார் வீட்டுக்குப் போயிடறேன்”—என்றாளவள். சம்பளத்தைத் தவிர ‘கிம்பள’மாக ஏதாவது மேல் வரும்படி சம்பாதிக்க ஆசைப் பட்டால், ‘உள்ளதும் போச்சே, நொள்ளைக் கண்ணு!’—என்கிற கதையாய், இருக்கிற உத்தியோகத்தையும் இழந்து நடுத்தெருவில் நிற்க நேர்ந்து விட்டால் என்ன செய்வது? ‘நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து’ ஏரோட்டிப் பயிரிட்டுச் சம்பாதிக்கா விட்டாலும், ‘சுய—மரியாதை’யை வீட்டில் மூட்டை கட்டி வைத்துவிட்டு மேலதிகாரிக்குப் பயந்து உள்ளுக்குள் நடுங்கிக் கொண்டே பேனா பிடித்த கையாலும் மூளையாலும் உழைக்கிற உழைப்பின் கடுமையான சிரமம் எனக்கல்லவா தெரியும்! அம்மாதிரி உழைக்கிற எனக்கு, ‘டிப்பன்’ முதலிய சில்லறைச் செலவுகளுக்காக கொஞ்சம் பணம் சொந்தத்தில் வைத்துக் கொள்ளக்கூட சுதந்திரமில்லையா என்ன?”

“சரி, சரி! ரொம்ப சரி!! உன் மனைவி பகவத்கீதையைப் படித்துத் தேர்ந்த பரம பண்டிதையாக இருப்பாள் போலிருக்கிறது. ‘கர்மத்தைச் செய்ய நீ கடமைப் பட்டவனே யன்றி, அதன் பலனை எதிர்பார்க்க உனக்கு உரிமை இல்லை’—என்று கண்ணபிரான் கீதையில் அறிவுறுத்தி யிருக்கிறாரல்லவா? அதனால் தான், அவள் உனது கடமையாகிய கர்மத்தைச் செய்யும்படி தூண்டி விட்டுவிட்டு, அதன் பலனில் நீ ஆசை கொண்டு விடாதபடி தடுத்து உன்னை அடக்கி ஆட்கொண்டிருக்கிறாள் போலும்! ஆணாய்ப் பிறந்த நாமெல்லோரும், உழைத்து உழைத்துக் காலங் கழிக்கக் கடமைப் பட்டவர்கள்; ஆனால், மனையின் சர்வாதிகாரியாக விளங்குவதால் ‘மனைவி’ எனும் சிறப்புப் பட்டத்தைப் பெற்றுள்ள நமது ‘கிருக தேவதைகள்’ சுக—போகங்களை அனுபவிப்பதற்காகவே ஆண்டவனால் சிருஷ்டிக்கப் பட்டவர்கள். ஒற்றைக் காலில் நின்று கடுந்தவம் செய்தாலும்,. ‘மனைவன்’ என்ற பட்டப் பெயரைச் சம்பாதித்துக் கொள்ள உன்னால் முடியுமா? ‘பெண்களெல்லோரும் பராசக்தியின் அம்சம் கொண்டவர்க’ளென்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரே கூறியிருக்கிறாரல்லவா? அவ்வளவு மகிமை பொருந்திய தேவிகள் மட்டும் இல்லாவிட்டால், இந்த அழகிய உலகம் ஏது? மக்கள் தான் ஏது?”

“அது சரி! தற்காலத் தமிழ் நாட்டிலுள்ள ‘கிருக—தேவதைகள்’ பராசக்தி தேவியின் அதிகாரத்தை வகிக்க மட்டும் ஆசைப் படுகிறார்களே, அது போல் அவர்கள் தேவியின் அபாரக் கருணையிலும் கொஞ்சமாவது மேற்கொள்ள வேண்டாமா? எது எப்படியானாலும், பொழுது முழுவதும் சிறிதும் சோம்பலின்றி உழைத்தும் ஆபீசிலும் வீட்டிலும் கொஞ்சமேனும் அமைதியின்பத்தை அனுபவிக்க முடியாமல் எக்காலத்திலும் ஒரு அடிமையைப் போல் மனம் கலங்கிநிற்கும் எனக்கு, இந்த உலகம் கொடிய நரகமாகவே தோன்றுகிறது. “அருளில்லார்க்(கு) அவ்வுலக மில்லை; பொருளில்லார்க்(கு) இவ்வுலக மில்லாகி யாங்கு”—என்று நாயனார் கூறியது போல் காலம் முழுவதும் பொருள் முடையால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் எனக்கு, இந்த உலக வாழ்க்கையால் என்ன பயன்? இந்த பாழும் மண்ணுலகத்தைப் பற்றி எண்ணும் போதெல்லாம், என் வயிறு பற்றி எரிகிறது. “ஐயோ, என்ன உலகமடா இந்த மண்ணுலகம்? ஒழியாத ஏமாற்று, ஒழியாத வஞ்சனை, ஒழியாத கவலை! ஸாரமில்லை; ஸத்து கிடையாது; உள்ளூரப் பூச்சியரித்துக் கொண்டிருக்கும் வாழ்க்கை. மனித ஜாதிக்குத் தீராத நோய் ஒன்று பிடித்திருக்கிறது—மாறாத சாபம்; இறங்காத விஷம்; இதன் பெயர் பணம். மனித ஜாதியைக் கவர்ந்திருக்கும் தெய்விகமாகிய அன்பு என்னும் வலையை அறுத்தெறியும் நீசத்தன்மை கொண்ட எலி ஒன்றிருக்கிறது; இதன் பெயர் பணம். இப் பேய்க்கு வணங்கும்படி மனிதனைத் தூண்டி விடுவது விருப்பம்”—என்று பாரதியார் மனம் கசந்து கூறியிருப்பதை நீ படித்திருக்கிறாயா? அத்தகைய பணப்பேய் தலை விரித்தாடும் கொடிய சுடுகாடு, இந்த உலகம். வறுமைப் பேயின் கொடுமையினால் உடல் வளம் இழந்து உற்சாகங் குன்றி நடைப்பிணமாக ஒடுங்கிநிற்கும் எளியவர்களை, ஆசைப் பேய்களும் வஞ்சனை நாய்களும் பொறாமைக் கழுகுகளும் கூடிக்கொண்டு உயிரோடு கொத்திப் பிடுங்கித் தின்னும் பயங்கரமான—இரத்த மயமான போர்க்களம், இந்த உலகம். மனப்பூர்வமான உண்மையன்பு நீர் வற்றி உலர்ந்து ஆசைக் கனல் வீசி எரிக்கும் கொடிய பாலைவனம், இந்த உலகம். பழங்காலத்திய உலகம் எப்படி யிருந்ததென்பதைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு மூளையைக் குழப்பிக் கொள்ள இப்பொழுது எனக்கு சாவகாசமில்லை; விருப்பமுமில்லை. இன்றைய நிலைமையைப் பொறுத்த மட்டில், என்னைப் போன்ற மனிதர்கள், இந்த உலகத்தில்—இந்த மனித உடலுடன்—சிறிதேனும் இன்பம் அனுபவிக்கக் கூடுமென்ற நம்பிக்கைக்குச் சிறிதும் இடமில்லையென்பது மட்டும் சர்வ நிச்சயம்.”

“ஏதேது, நீ பேசுவதைப் பார்த்தால், இப்பொழுதே—இங்கிருந்தே—புத்த பகவானைப் போல் துறவு பூண்டு புறப்பட்டு விடுவாய் போலிருக்கிறதே! என் வீணாக நீயாகவே உன் மனத்தைக் கவலைகளால் கலக்கிக் கொண்டு விடுகிறாய்? “ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவை விதைக்கிறது மில்லை; அறுக்கிறது மில்லை; களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறது மில்லை. அவைகளையும் உங்கள் பரம பிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும், நீங்கள் விசேஷித்தவர்களல்லவா?”—என்ற ஏசுநாதரின் அருள் மொழிகளை நீ மறந்து விட்டாயா என்ன?”

“அது சரி; அதனால் தான், இன்றைய உலகத்திலே, நவீன நாகரிக முறையில் உடையணிந்து ஆபீஸ் நாற்காலியில் ஒய்யாரமாக உட்கார்ந்து கொண்டு மின்சார விசிறியின் காற்று வாங்கிக் கொண்டு மேலதிகாரியைப் பற்றிய பயத்துடனும் வீட்டுத் தேவதையைப் பற்றிய கவலையுடனும் ‘அடிமை வேலை’ பார்க்கும் ஒரு உத்தியோகஸ்தனது வாழ்வைக் காட்டிலும், ஒரு மரத்தின் சிறிய கிளையிலே தனது அருமைக் காதலியுடனும் ‘பொன் குஞ்சு’களுடனும் கொஞ்சிக் குலவிக் கொண்டிருக்கும் ஒரு சிறு பறவையின் வாழ்க்கை எவ்வளவோ சிறந்ததென்று கூறுகிறேன். அதோ, அந்த மாக்கிளையில் அமர்ந்து கொண்டிருக்கும் அந்த காக்கைத் தம்பதிகளைக் கவனித்துப் பார்! அவை யிரண்டும், எவ்வித மன வேறுபாடு மின்றி ‘சரி—

கிகர்—சமானமாக'வே கொஞ்சிக் குலவிக் குதூகலிக்கின்றன வல்லவா? எங்கெங்கோ திரிந்து அரும் பாடு பட்டு சம்பாதித்துக் கொண்டு வந்த பொருள்களைத் தன் கையினாலேயே செலவழிக்கும் பூர்ண—சுதந்திரத்தை அந்த ஆண் காக்கை பெற்றிருக்கிறது; அதனிடமிருந்து அவ்வுரிமையைப் பெண் காக்கை பிடுங்கிக் கொண்டு விடுவதில்லை. அந்த ஆண் காக்கைக்குத் தனது காதலியிடம் எவ்வித பயமும் சிறிதும் இல்லை. ஆதலின், அத் தம்பதிகளின் வாழ்வு, துன்பக் கலப்பற்ற தனியின்ப வாழ்வாக விளங்குகிறது. அத்தகைய பாக்கியம் மட்டும் எனக்கு வாய்த்து விட்டால், உலக வாழ்க்கையில் நேரும் எப்படிப்பட்ட துயரங்களையும் சகித்து நடந்து கொள்ளக் கூடிய சக்தி எனக்கு உண்டாய் விடும். ஆனால், அப்படிப்பட்ட பாக்கியம், இப் பிறவியில் எனக்குக் கிடைப்பதேது? வீட்டிலிருந்தால் தொல்லையாயிருக்கிறதென்று வெளியில் சென்றாலும், என் கண் முன்பு எதிர்ப்படுவோரில் மிகப் பெரும்பாலோர் கொடிய வஞ்சகர்களாகவும் பேராசைக் காரர்களாகவுமே காணப்படுகின்றனர். களங்கமற்ற மெய்யன்புடைய உத்தம நண்பர்களைக் காண்பது மிக மிக அருமையாக இருக்கிறது. அதனால், இந்த உலகம் எப்பொழுதும் என் கண்களுக்கு பயங்கரமான நரகலோகமாகவே காட்சி யளிக்கிறது.''

"அது உன் குறையேயன்றி உலகத்தின் குறையல்ல.

"நிற்கின்றதெல்லாம் நெடுமால் என்(று) ஓராதார்—கற்கின்றதெல்லாம் கடை"—என்ற ஆழ்வார் அருள் மொழியை அறியாததனால் விளைந்த அஞ்ஞானமே அது! வீட்டிலிருக்கும் போது, உனது 'கிருக—தேவதை' உன்மேல் சொல்லம்பு தொடுத்து வீர வாதம் செய்து நிற்கிறதென்று வைத்துக்கொள்;. அப்பொழுது, நீ செய்ய வேண்டியதென்ன தெரியமா? உனது இரு கண்களையும் இறுக மூடிக்கொண்டு—இரு கைகளையும் கூப்பி நின்று கொண்டு—அத் தேவியைக் 'கிருக—நாராயண'னாகப் பாவித்துக் கொண்டு—"வீட்டுப் பெருமாளே! வீட்டுப் பெருமாளே!! எனது அபசாரங்களெல்லாவற்றையும் பொறுத்தருள்வாய்!"—என்று வாய்விட்டுக் கூற வேண்டும். அதற்காக நீ சிறிதும் வெட்கமடைய வேண்டியதில்லை; உண்மையாகவே, உனது 'கிருக—தேவதை'யின் ஹிருதயத்திற்குள் ஒளிந்துகொண்டிருக்கும் நாராயணனை நோக்கிப் பிரார்த்திப்பதாகவே, அப்பொழுது நீ உன் மனத்திற்குள் பாவித்துக்கொள். உனது மனைவியின் அழகிய உடலும், பகவான் வசிக்கும் கோயில்களுள் ஒன்று தானே! ஆபீசில் வேலை பார்க்கும்போது உனது மேலதிகாரி உன்னைக் கடிந்து பேச நேர்ந்து விட்டால், அப்பொழுதும் உனது கண்களை இறுக மூடிக் கொண்டு, "ஆபீஸ் பெருமாளே! ஆபீஸ் பெருமாளே!! தெரியாமல் செய்து விட்ட பிழைகளையெல்லாம், தயவு செய்து மன்னித்தருள வேண்டும்."—என்று வாய்விட்டுச் சொல்லி விடு.



எங்கும் நிறைந்து நிற்கும் பெருமாள், அப்பொழுது அந்த ஆபீசை விட்டு வேறெங்கும் ஓடிப் போய் விட மாட்டார். அவ் வேளையிலே, உனது மேலதிகாரியின் கோபத் தீ அடியோடு தணிந்து போவதுடன் அவ் விடத்தில் உண்டாகக் கூடிய குதூகலச் சிரிப்பினால் நீ மகிழ்வதோடு மற்றவர்களையும் மகிழ்வூட்டலா மல்லவா? அப்படியே, உனக்கு வெறுப்பையோ கோபத்தையோ விளைவிக்கக் கூடிய எவர்—எவ் விடத்தில்—எப்பொழுது உன் கண் முன்பு தோன்றினாலும், அவர்களது ஊன உடம்பைக் கண்டு வெறுப்போ கோபமே கொண்டு விடாமல், அவர்களது உள்ளத்திற்குள் ஒளிந்து கொண்டிருக்கும் சாந்த சொரூபியான பகவானையே தியானித்து நிற்கக் கடவாய். அத்தகைய நிலையை மட்டும் நீ அடைந்து விட்டால், இப்பொழுது நரக லோகமாகக் காணப்படுகிற இதே உலகம், அப்பொழுது உனக்கு வீட்டிலும்—வெளியிலும்—நினைத்த போதும்—நினையாத போதும்—எந் நேரத்திலும்—எங்கெங்கும் 'ஸ்ரீமந் நாராயண தரிசனம்' கிடைக்கக் கூடிய சாக்ஷாத் பரமபதமாகவே மாறி விடுமல்லவா?''

"ஆம்! ஆம்! அதுவே சரி! தங்கமான—இல்லை—வைரமான—இல்லை—மாணிக்கமான யோசனை! யார் யார் எப்படி நடந்து கொண்டால் தான், எனக்கென்ன கவலை? என்னிடத்திலுள்ள குறைகளை முற்றிலும் நீக்கிக் கொண்டு விடக் கூடிய சக்தி இன்னும் எனக்கு வாய்க்காமலிருக்கும்போது இந்த பரந்த உலகத்திலுள்ள மற்றவர்களைப் பற்றி குறை கூற எனக்கு அதிகாரமேது? எளிதில் காணப்படும் ஒவ்வொருவர் மனத்திலும் பகவான் ஒளிந்து கொண்டிருக்கும்போது, அவர்களை வெறுப்பதோ கோபிப்பதோ மகத்தான அபசாரமல்லவா? பகவானது திருவுள்ளத்தைப் பல வழிகளிலும் மகிழ்விக்கக கூடியவாறு நடந்து கொள்ள இந்த உலகில் பற்பல சந்தர்ப்பங்களிருக்கும்போது, நான் ஏன் இந்த உலகத்தை வெறுக்க வேண்டும்?''

"அதுதான் சரி! இந்த உலகம், ஒரு பெரும் நாடக மேடை; இதுவே ஒரு பெரிய நிலைக்கண்ணாடி. எக் கண் கொண்டு—எத்தகைய எண்ணத்துடன்—எவ்வாறு இந்த உலகத்தை நோக்குகிறோமோ, அவ்வாறே அது நமக்குக் காட்சியளிக்கிறது. நாம் அழுதால், அதுவும் அழுகிறது; நாம் சிரித்தால், அதுவும் சிரிக்கிறது. இது தான் இரகசியம். ஆதலால், எப்பொழுதும் சிரித்த முகத்துடனும் மகிழ்ச்சி நிறைந்த மனத்துடனும் இருந்து பழகிப் பார்! அப்பொழுது, இந்த உலகமே உனக்கு ஒரு பெரும் 'ஆனந்த பூங்காவன'மாகக் காட்சியளிக்கும்.''

பாலர்கள் பக்கம்

சிறு வேதாந்தி

(K. V. S. மணியன் பீ. ஏ.)

வைத்தியநாத தேசிகர் குதிரை சவாரி செய்வதில் மிகவும் சமர்த்தர். அவர் பெயருக்கேற்றபடி வைத்தியத்தில் நிபுணர். அதுவே அவருக்கு ஜீவனம். ஒருநாள் காலையில் எழுந்திருந்து ஒரு மருந்து செய்வதற்காக சில மூலிகைகளைச் சேகரிப்பதற்கு தன்னுடைய குதிரையின்மேலேறி நெடுந்தூரம் சவாரி செய்தார். கடைசியில் மூலிகை இருக்குமிடத்தை யடைந்து குதிரையை ஒரு செடியில் கட்டிவிட்டு வேலியோரத்தில் மூலிகைகளைத் தேட ஆரம்பித்தார். பக்கத்தில் ஒட்டர்கள் கல் உடைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் வெடி மருந்துகளைக் கொண்டு கல்லை உடைப்பது வழக்கம். திடீரென்று ஒருவெடி கிளம்பியது. உடனே குதிரை கட்டியிருந்த செடியைப் பிடுங்கிக்கொண்டு ஒரே ஓட்டமாய் ஓட ஆரம்பித்துவிட்டது. பார்த்தார் தேசிகர். குதிரையைப் பின் தொடர்ந்தார். இவரைக் கண்டதும் குதிரை காற்றினும் வேகமாகப் பறந்தோடியது. தேசிகர் தூரத்தில் வரும்போது நிற்கும் ; சமீபத்தில் வந்ததும் ஓட்டம்பிடிக்கும். இப்படியாக வைத்தியர் அவிழ்ந்த வேஷ்டியைக் கையில் பிடித்துக்கொண்டு தொந்தி குலுங்க ஓடினார். ஐந்துமைல் தூரம் இருவரும் போட்டிபோட்டுக்கொண்டு ஓடினார்கள். அங்கே பக்கத்தி லுள்ளதோர் வயலில் ஒரு சிறுபையன் இந்த வேடிக்கையைப் பார்த்துவிட்டு திடீரென்று குதிரையை வழிமறித்து கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டான். தேசிகர் வந்ததும் குதிரையை அவர் கையில் ஒப்புவித்தான். பெருமூச்செறிய ஓடி வந்த தேசிகர் சிறுவன் சின்னனுடைய உற்சாகமுகத்தையும் தைரியத்தையும் கண்டு ஆச்சரியமடைந்தார். "அப்பா ரொம்ப சந்தோஷம். நான் களைத்துப்போன சமயத்தில் நீ சாமர்த்தியமாகக் குதிரையைப் பிடித்துக் கொடுத்ததற்கு என்ன பதிலுபகாரம் செய்யப்போகிறேன்" என்றார் தேசிகர் சட்டைப்பைக்குள் கையைப் போட்டவண்ணம்.

"ஐயா! எனக்கு ஒன்றும் வேண்டாம்" என்றான் சிறுவன்.

தேசிகர் :—ஒன்றும் வேண்டாமா? இந்நேரம் வரையில் இந்தக் காட்டில் என்ன செய்துகொண்டிருக்கிறாய்?

சிறுவன் :—கொல்லையில் களை பிடுங்கிவிட்டு ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறேன்.

தேசிகர் :—இந்த வேலையைச் செய்வதில் உனக்கு மனதில் சந்தோஷந்தானா?

சிறுவன் :—ஆஹா! தடையென்ன. எப்பேர்ப்பட்ட குளிர்ந்த காற்று வீசுகிறது பாருங்கள்.

தேசிகர் :—அப்படியானால் உனக்கு விளையாடுவதில் விருப்பமில்லையா?

சிறுவன் :—நான் செய்வது கடினமான வேலையல்ல. இதுவும் ஒரு விளையாட்டுதான்.

தேசிகர் :—உன்னை இப்படி வேலை செய்யும்படி சொன்னது யார்? அவர் பெயரென்ன?

சிறுவன் :—என்னுடைய தகப்பனார்தான். அவர் பெயர் வீரமுத்து.

தேசிகர் :—அவர் எங்கே குடியிருக்கிறார்?

சிறுவன் :—அதோ அங்கே மரங்கள் அடர்ந்திருக்கும் தோப்பிலிருக்கிறது எங்கள் வீடு.

தேசிகர் :—உன் பெயர் என்ன? உன்னுடைய வயது எவ்வளவு?

சிறுவன் :—என் பெயர் சின்னான். வருகிற ஆனியோடே பன்னெண்டு வயசு.

தேசிகர் :—நீ இப்போது எவ்வளவு நேரமாக இங்கு வேலை செய்துகொண்டிருக்கிறாய்?

சின்னான் :—காலை ஆறுமணியிலிருந்து.

தேசிகர் :—அப்படியானால் உனக்கு இப்போது பசியெடுக்கவில்லையா?

சிறுவன் :—ஆம். இப்போது வீட்டுக்குப் போவேன். வயிறார கஞ்சி குடிப்பேன்.

தேசிகர் :—இப்போது உன் கையில் ஒரு அணா இருந்தால் என்ன செய்வாய்?

சிறுவன்:—தெரியாது. இதுவரையில் என்னுடைய கையில் அவ்வளவு இருந்தது கிடையாது.

தேசிகர் :—நீ விளையாடுவதற்கு விளையாட்டுச் சாமான்கள் வாங்குவதில்லையா?

சிறுவன் :—இல்லை. என் தம்பி செய்யும் சாமான்களைக்கொண்டே விளையாடுவோம்.

தேசிகர் :—வேறு சாமான்கள் உனக்கு வேண்டாமா?

சிறுவன் :—வேண்டாம். ஏனெனில் எனக்கு நேரம் கிடையாது. காலையில் ஆடுமாடுகளை ஓட்டிவந்து மேய்ப்பேன். பிறகு மாலையில் அவைகளுக்குத் தண்ணீர் காட்டிக் கட்டிவிட்டு கடைக்குப்போய் சாமான்கள் வாங்கி வருவேன். இவையெல்லாம் எனக்கு விளையாட்டுதான்.

தேசிகர் :—தம்பீ! உன்னுடைய கையில் காசு இருந்தால் கடைக்குப் போகும்போது காப்பி குடிக்கலாம். ஆரஞ்சிப்பழங்கள் வாங்கித் தின்னலாமல்லவா?

சிறுவன் எங்கள் வீட்டில் மாம்பழமும் பலாப்பழமும் கிடைக்கின்றன. சில சமயங்களில் ஆரஞ்சும் வாங்குவதுண்டு. காப்பியைப்பற்றி எனக்கு அக்கறை கிடையாது. பாட்டி எப்போதாவது அரையணா ஓரணா கொடுப்பாள். அப்போது பார்த்துக்கொள்ளுவேன்.

தேசிகர் :—(தன்னிடமுள்ள அழகிய கத்தியையாவது அவனுக்குக் கொடுக்கலாமென நினைத்து) குச்சுகள் செடிகள் முதலியவைகளை நறுக்க உனக்கு கத்தி வேண்டாமா?

சிறுவன் :—ஐயா! என்னிடம் ஒன்றிருக்கிறது. தம்பிக்குமிருக்கிறது.

தேசிகர் :—உன் செருப்புகள் கிழிந்துவிட்டதே! புதிதாக ஒரு ஜோடி வேண்டாமா?

சிறுவன் :—தினந்தோறும் போட்டுக்கொள்ள இவை. தேர் திருவிழாவிற்குப் போட்டுக்கொள்ள புதிதாக ஒன்று வைத்திருக்கிறேன்.

தேசிகர் :—உனக்கு குடையில்லைபோலிருக்கிறதே?

சிறுவன் :—அவசியமில்லை. சிறு தூறலில் நனைந்தால் பாதகமில்லை. அதிக மழை பெய்தால் நிற்கும்வரையில் ஒரு குடிசையிலோ மாத்தடியிலோ தங்கிவிட்டு வீட்டுக்குப் போவேன்.

தேசிகர் :—காட்டில் வேலைசெய்யும்போது பசியெடுத்தால் என்ன செய்வாய்?

சிறுவன் :—கம்பு முதலிய கதிர்களையும் கிழங்குகளையும் தின்பேன். அதுவும் அகப்படாவிட்டால் அதைப்பற்றி நினையாமல் என் வேலையைச் செய்துகொண்டே இருப்பேன். மாலையில் சாப்பிடுவேன்.

தேசிகர் :—தம்பீ! உன்னைப்போல் இதுவரையில் நான் ஒருவரையும் கண்டதில்லை. நீ இச் சிறுவயதில் பெரிய வேதாந்தியாய் விளங்குகிறாய். ஆனால் நான் சொல்வது உனக்கு ஒன்றும் விளங்காது.

(சின்னான் முகமலர்ச்சியோடு சிரிக்கிறான்)

தேசிகர் :—போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து என்ற உண்மையை யறிந்துகொண்டாய். நீ படித்திருக்கிறாயா?

சிறுவன் :—நெல்லடிப்பு முடிந்ததும் எங்கப்பா என்னை பள்ளிக்கூடம் போகச்சொல்லுகிறார்.

தேசிகர் :—அப்பா சந்தோஷம். நான் ஊருக்குப்போய் உனக்கு அரிச்சுவடி புத்தகமும் கற்பலகையும் அனுப்புகிறேன். இதை உன் தகப்பனாருக்குச் சொல். போய்வருகிறேன். ஆடுமாடுகளைப் பார்த்துக்கொள்.

சிறுவன் :—நல்லது. வந்தனம்.

தேசிகர் தனது சொந்த ஊருக்குத் திரும்பிவந்து ஜனங்களுக்கு இனாம் வைத்தியம் செய்து வந்ததைக்கொண்டு திருப்திகரமாக வாழ்ந்து வந்தார்.

---

54. தான்யச் சட்டமும் தாராள வியாபார முறையும்

(T. S. ராஜகோபாலன், B. A., L. T.)

முதலாவது சீர்திருத்தம் பார்லிமெண்டின் அமைப்பு முறையில் ஏற்பட்டும் கூட, நிலச்சுவான்தார்களின் ஆதிக்கமும் செல்வாக்கும் பார்லிமெண்டில் ஏற்படவில்லை. பார்லிமெண்டில் மாறுதல் கொஞ்சநஞ்சம் ஏற்பட்டாலும் கூட அது பொதுஜன சபையான House of commonsல்தான். பிரபுக்கள் சபையான House of Lordsன் மனப்போக்கு எளிதில் மாறுவதாக இல்லை. தவிரவும் அந்த பிரபுக்களின் செல்வாக்கு பொதுஜன சபையிலும் இருந்தது. சாதாரண ஜனங்களின் செல்வாக்கில் பார்லிமெண்டு வந்தது வெகு சமீபகாலத்தில்தான் என்பது முன்பு குறிப்பிடப்பட்டது. சமீப காலத்திய பொதுஜன செல்வாக்கும் மிகச் சொல்பமானதே யென்பதும் முதலாளி செல்வாக்கே ஊடாடுகிறதென்பதும் குறிப்பிடப்பட்டது.

இங்கிலாந்தில் விவசாய சௌகரியம் கிடையாது. செய்யக்கூடிய சொல்ப விவசாயமும் ஏராளமான சிலவில்தான் நடக்கவேண்டும். அதையொட்டி, பல விவசாய நிலங்கள் மேய்ச்சல் தரை நிலங்களாக மாறின போக்கு, இத் தொடர்களின் ஆரம்பப் போக்கில் விளக்கப்பட்டது. ஆனாலும் பிற்காலங்களில் ஏற்பட்ட விவசாயப் புரட்சி காரணமாக, பரிசோதனைகளின் போக்கில் கொஞ்ச தானியவிளைவுக்கு ஹேதுவாயிற்று. இந்த கொஞ்ச விளைவு தானியத்தைக்கொண்டு எதேஷ்டமான லாபத்தை யடைந்துவிட விரும்பினர். பொதுவாக தேசம் பூராவுக்கும் போதாததென்ற காரணத்தினால், பிறதேசங்களிலிருந்து தானியம் வந்து தீரவேண்டியிருந்தது. அப்படி வந்த தானியங்களின் விலை வெகு மலிவாக இருந்தது. அந்த காரணத்தினால் உள்ளூர் தானியங்களின் விலைகளும் குறைய வேண்டி வந்தது. அதனால் பார்லிமெண்டில் செல்வாக்குள்ள நிலச்சுவான்தார்கள் தங்கள் சுயநலத்தை நாடியவர்களாய், தங்களுக்கு கட்டி, நஷ்ட மில்லாமல் கோரிய லாபம் கிடைக்கும் அளவுக்கான விலைக்கு சமமாக வரும்படி செய்ய, அயல்நாட்டு தானியங்களின்மேல் வரி விதித்து விட்டனர். இத்தகைய வரியைத்தான் பாமரஜனங்கள் "தான்ய வரிகள்" (corn laws) என்று முறையிட்டனர். தொழில்முறைப் புரட்சியினால் நாணயச் செலாவணி ஜாஸ்தியானபோது விலைகளையும் ஏற்றிவிட்டனர். அதே தொழில் முறைப் புரட்சியின் காரணமாகவே உண்டான போட்டியில் சம்பளக் குறைவு ஏற்பட்டபோது ஏழைத் தொழிலாளிகள் தான்யங்களை வாங்கக் கஷ்டப்பட்டனர். அவர்களுடைய

கஷ்டங்களைக் கவனிப்பாரில்லை. (பர்மா அரிசி, இந்துசீன அரிசி இறக்குமதி விஷயம் வாசகர்களின் மனதில் இருக்கலாம். இந்திய அரிசி வெளிநாடுகளுக்கு எற்றுமதி செய்யப்படுவதற்கும் தடைகள் உண்டான நிலைமையில் நமது நிலச் சுவான்தார்களின் பரிதாப நிலைமையும் சிந்தித்துணரற்பாலது.) எழைகளுக்கு உணவுப்பாடு பெரும்பாடாகி விட்டது. செல்வப் பெருக்கத்தில் எழைகளுக்குப் பிண்டம் பெருங்காய மாகிவிட்டது.

எழைகளிடத்தில் அனுதாபமும், காருண்யமும் நாளுக்கு உணரப்பட்டு, சீரியரின் மனது சிதைவுற்றது. இப்படியான இரு சீரியர்தான் ஜான் பிரைட (John Bright)டும், ரிச்சர்ட் காப்டன் (Richard Cobden) என்பவரும். அவர்கள் இருவருடைய முயற்சியில் தோன்றியது ஒரு சங்கம். அதுதான், "தான்யவரி எதிர்ப்புச் சங்கம்" (Anti-corn law league) ஆகும். அச் சீரியர் இருவரும் தொழிலாளிகள். அவர்கள் இருவரும் "ஆகாரப் பொருள்களின் மீது வரி விதித்தலே கூடாது. அவ்விதம் செய்வது எழைகளின் வயிற்றி லடித்தது போலாகும்" என்பது போன்ற அபிப்பிராயங்களை தங்கள் சங்கத்தின்மூலம் கிளர்ச்சியுடன் கூடிய பிரசாரம் செய்தனர். இருவரும் உணர்ச்சியும் வாக்குவன்மையும் படைத்தவர்கள். நிலச் சுவான்தார்களோ என்றால் அவ் வரிகளை ரத்து செய்து விட்டால் தாங்கள் அழிந்தே போய்விடுவோம்" என்று கிளர்ச்சிகளை எதிர்த்தனர். ஆனால் "தனிப்பட்ட ஒரு கோஷ்டியினர் நன்மையை உத்தேசித்து பெரும்பாலான எழைமக்கள் கஷ்டப்படுவது அதிக்ரமமும் அநியாயமுமானது" என்று பொது ஜனங்கள் உணர்ந்து விட்டனர்.

அப்போது தேச நிர்வாகத்தை நடத்திய பீல் என்பவர் ஆரம்பத்தில் தான்ய வரிக்கு ஆதரவு செய்பவராக இருந்தும், நிலைமையையும், சந்தர்ப்பத்தையும், பொதுஜன உணர்ச்சியையும் அனுசரிக்க வேண்டியவராகி, தாராள மனதுடையவராய் தான்ய வரியை ரத்து செய்ய உடன்பட்டார். இதற்கு சாதகமாக ஐர்லந்தில் எற்பட்ட ஒரு கோரமான பஞ்சம் இருந்தது. ஐர்லந்தின் பெருவாரியான எழை மக்களுக்கு பிரதம உணவுப் பொருள் உருளைக்கிழங்கு ஆக இருந்தது. விதி வசத்தால் எதிர்பாராத விதமாய் உருளைக்கிழங்குப் பயிருக்கு ஒருவித பூச்சியின் மூலம் பூரா அழிவு எற்பட்டு விட்டது. உணவின்றி வாடித் தத்தளித்தனர். பஞ்சக்கஷ்ட நிவாரணத்திற்கு, நயமான பிறநாட்டு தானியங்களை வரவழைப்பதற்கு தானிய வரிச்சட்டம் சத்துருவாக இருந்தது. அதற்கு ஆதாரமான நிலச் சுவான்தார்களோ, "வஞ்சகச் செல்வரடி, அவர் வயிற்றுக்கும் உண்ணாரடி" என்றபடி இரக்கமற்ற கடினச்சித்தம் கொண்டவர்களா யிருந்தனர். நிலைமையை யுணர்ந்த பீல் தன் கொள்கையைக் கைவிட்டு தான்ய வரிச்சட்டம் தள்ளுபடியாவதற்கு உழைத்தார். எவ்வளவு முயன்றும் ஐரிஷ் மக்களின் பஞ்சத்தின் கொடுமையைத் தவிர்ப்பது கஷ்டமானதைக் கண்ட பீல், தான்யவரிச் சட்டத்தைத் தள்ளுபடி செய்ய தானே தீர்மானம் கொண்டுவந்தார். ஜனங்கள் உண்ண வழியின்றித் தவிக்கும்போது, நிலச்சுவான்தார்களின் லாபத்தை பலப்படுத்துவது அசுரத்தனம் என்று நினைத்து விட்டார். அவர் தாராள சிந்தனையற்ற "டோரி" என்ற பெயரை வெறுத்து "மிதவாதி" என்று பொருள்படும் "கன்ஸர்வெடிவ்" என்ற பெயரைத் தன் கக்ஷிக்கு இட்டுக்கொண்டார். அவர்களுக்கு இந்த விஷயமாக, தான்ய வரியைத்

தள்ளுவது நியாயமில்லை என்று பட்டும், பீல் துணிந்து, தீர்மானங்கொண்டு வந்தது பெருமையே. (இதை நமது நாடுகளிலும் கக்ஷித்தலைவர்கள் அனுசரித்து நடக்கும் காலம் சமீபத்தில்தான் வந்து உதயமாகியிருக்கிறது என்பது தற்சமய நிர்வாகத்தில் பலவித புனிதத் தன்மைகளில் ஒன்றாகும்.)

1846-ல் பீல் தான்யவரியைக் குறைத்து பெயரளவுக்கு மட்டும் உள்ளதாகச் செய்துவைத்தார். அதன்மூலம் நயமான விலையில் கிடைக்ககூடிய தானியங்களை வாங்குவதற்கு ஜனங்களுக்கு சௌகரியமாக இருந்தது. இதற்கே எதிர்ப்பு பலமாகஇருந்து பெஞ்ஜமின் டிஸ்ரேலி என்பவர் தலைமையில் எற்பட்டு கஷ்டமும் உண்டாயிற்று. ஒருசமயம் பீல் நிர்வாகத்தைவிட்டு ராஜிநாமாச் செய்யவும் நேர்ந்தது. நேர்மையுடன் முயன்றார் என்ற காரணத்தினால் பீலுக்கு ராணியுடைய ஆதரவும் இருந்ததாம். கக்ஷியும் நாளடைவில் வலுப்பட்டது. இதிலிருந்து செல்வநிலை சம்பந்தமான இரு கக்ஷிகள் தோன்றின. தான்ய விஷயம் வியாபாரமாகக் கருதப்பட்டு, உள்நாட்டு வியாபாரம், கைத்தொழில் தழைத்தோங்குவதன் பொருட்டு,வெளிநாட்டுப் போட்டியை காப்புவரி மூலம் தடுக்கவேண்டும் என்பது ஒரு கக்ஷி. இதற்கு காப்புவரிக் கக்ஷி அல்லது தடை வியாபாரக்கக்ஷி என்று பொருள்படும் Protectionists என்று பெயர் உண்டாயிற்று. மறு கக்ஷிக்கு "தாராள வியாபாரக்கக்ஷி" என்று பொருள்படும் "Free traders என்றும் பெயர் கொடுக்கப்பட்டது. இந்த இரண்டு கக்ஷிகளுக்கும் பொதுவாக சாதக பாதகமான அபிப்பிராயங்கள் எக்காலத்திலும் உண்டு. கைத்தொழிலில் அபிவிருத்திக்கு ஆரம்பித்து முன்னேற விரும்பும் ஒரு ஜனநாயக அரசாங்கம், இந்த தாராள வியாபாரக் கொள்கையை விரும்பாது. எனெனில் பிறநாட்டு மலிவான விலையில் போட்டி யிடக்கூடிய வியாபார சாமான்கள் அத் தேசத்திய கைத்தொழிலைக் கொன்றுவிடும். இதை யொட்டி இம்மாதிரியான பிறதேச சாமான்களை காப்பு வரியின் மூலம் தடை செய்ய முயற்சி செய்யப்படும். (காதி தலையெடுக்காத நிலைமைக்கு ஒருவிதத்தில் பிறநாட்டு மலிவான துணிகளின் விற்பனையும் காரணமாகும் அல்லவா? நமது நாட்டில், அரசாங்க வரும்படிக்கென பெயர் கொடுத்து, தீக்குச்சி ஸோப் போன்ற தொழில்களுக்கும் வரி விதிக்கப்படுவது சிந்திக்கவேண்டிய விஷயமாகும்.)

தாராள வியாபாரக்கக்ஷியினர், பொதுஜன நன்மையைக் கோரி, அவர்களுக்கு சாமான்கள் மலிவாகக் கிடைக்க வேண்டுமானால் தாராள வியாபாரமே வேண்டுமென வாதிப்பர். (இதே காரணத்தை பர்மா, சைகோன் அரிசி சம்பந்தமாக, நிர்வாகிகள் கொஞ்ச காலத்திற்கு முன்பு சொன்னது பத்திரிகை படிக்கும் அன்பர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.) வியாபாரக் கொள்கையில் பீல் தாராள வியாபார முறைக்கு ஆதரவு கொடுக்கும் போக்கு இல்லாதவராயினும் தான்யவரி விஷயத்தில் தாராள சிந்தனையும் பெரும் போக்கும் படைத்தவராக இருந்தார். அதனால் முன்னைய தொகுதிகளில் ஐர்லந்து சம்பந்தமாக சிரத்தை யெடுத்த கிளாட்ஸ்டன் பீலின் கக்ஷியில் சேர்ந்து அந்த கோஷ்டியை வலுப்படுத்தினார். பிறகு கக்ஷி வலுப்பட்டு பிரதம மந்திரியாகவும் வந்து தன்னால் முடிந்த சேவையைச் செய்து புகழ்பெற்றார்.

இந்த கிளாட்ஸ்டன் சேனை சம்பந்தமாக சீர்திருத்தம் செய்து, ஒவ்வொரு ஜில்லாவுக்கும் வெவ்வேறான படை யணிவகுப்புகளை எற்படுத்தி

னார். அதற்கு முன்பு சேனைத்தலைவர்களே தங்கள் படைகளைச் சேர்த்து அணி வகுத்துக்கொள்வதென்ற முறை இருந்தது. அவரால் நிறைவேற்றப்பட்ட மற்றொரு விஷயம் 1870-ம் வருஷத்திய ஆரம்பக்கல்வி முறைத் திட்டம் ஆகும். அந்த முறையின்படி ஸ்கூல் போர்டுகளை ஏற்படுத்தி, ஒவ்வொரு குழந்தையும் படித்தும், எழுதியும் கணக்குகளறிந்தும் இருக்கும்படி யுள்ளதாக ஆகவேண்டும் என்று செய்தார். ஆரம்பக்கல்வி முறையை கட்டாயமாகச் செய்தார். (நமது நாட்டில் கட்டாய ஆரம்பக்கல்வி அமுலுக்கு சென்ற 15-வருஷங்களாகவே கொண்டு வரப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் மிகுந்த சிரத்தை ஆசை மதிப்பு மரியாதை எல்லாம் விசேஷமாக இருந்தும் வந்தது உண்மைத் தேசாபிமானிகள் அறிந்ததாகும்!) எந்த நல்ல திட்டத்திற்கும் எதிர்ப்பு இருந்தது அந்த தேசத்திலும் உண்டென்று சரித்திரம் சொல்லுகிறது.

சுமார் 1885-ம் வருஷத்திய மூன்றாவது சீர்திருத்தச் சட்டத்திற்குப் பிறகு எளியவர்கள் சுதந்திரத்துடன் தேர்தல்களில் தங்கள் வாக்குகளை (வோட்) பதிவு செய்ய சாத்தியமாக இரகசிய வோட்டு முறையை (Vote by ballot)க் கொண்டுவரப்பட்டது. இவற்றை யெல்லாம் தாண்டி, ஏழாவது எட்வர்ட் காலத்திற்கு வந்தபோது பார்லிமெண்டில் பேருக்கு பொது ஜன சபைக்குச் செல்வாக்கு இருந்ததுபோய் உண்மையில் நிச்சயமான செல்வாக்கு ஏற்பட்டது. ஏனெனில் 1909-ல் பட்ஜட் திட்டத்தை பொது ஜன சபை சமர்ப்பித்தபோது, பிரபுக்கள் சபை நிராகரித்து விட்டதின் பேரில் நிர்வாகம் கஷ்டப்பட்டது. அது வரையில் சட்ட மியற்றும் போக்கில் ஒரு மாமூல் இருந்தது. அதாவது எந்தத் திட்டமும் பொதுஜன சபையில் மூன்றுமுறை சமர்ப்பிக்கப்பட்டு, பிரபுக்கள் சபையின் ஆமோதிப்புப் பெறவேண்டும். பிரபுக்கள் நிராகரித்து விட்டால் அத் திட்டம் நிறைவேறாது போய்விடும். அதில் பொது ஜனங்கள் ஆத்திரமடைந்து ஒரு புதிய சட்டம் ஏற்படுத்தினர். அதாவது, எந்த திட்டத்தையும் பொதுஜன சபையில் மூன்றுதரம் நிறைவேற்றி விட்டால், பிரபுக்கள் சபை ஆமோதித்தாலும், ஆமோதிக்கா விட்டாலும் ஒழுங்காக சட்டமாகவே ஆகிவிடும் என்பதாகும். இந்தமாதிரி ஏற்பட்டது 1911ல். இதற்குப் பிறகு நமது சமீப காலத்திற்கு வந்து விடுகிறோம். முக்கிய சில விஷயங்கள் முந்தின தொகுதிகளில் குறிப்பிடப்பட்டு எழுதப்பட்டன. இன்ஷியூரன்ஸ் சம்பந்தமாகச் சில சட்டங்கள் செய்யப்பட்டன. ஆனால் பொதுவாக ஜனநாயக ஆட்சி இருந்தாலும், அனுஷ்டானத்தில் இன்றளவும் பணமூட்டைகளுள்ள முதலாளிகளின் ஆதிக்கமே மேலோங்கி நிற்கிறது என்பது உண்மை. தவிரவும் உள்நாட்டு விஷயங்களில் எவ்வளவு சச்சரவுகள் இருந்தாலும் வெளிநாட்டு விவகாரங்களில் ஏகோபித்த அபிப்பிராயமே உள்ளவர்கள் என்பது இத் தொகுதிகளில் பலமுறைகளிலும் தகுந்த உதாரணங்களால் காட்டப்பட்டது. அதிலும் இந்தியா விஷயத்தில், "சுயஆட்சி கொடுக்கவே கூடாது" என்பதில் அபிப்பிராயபேதமே அவர்களுக்குள் கிடையாது. செல்வாக்கில்லாத சிலர் உதட்டளவில் அனுதாபங் காட்டுவதுண்டு. அதுவும் விசேஷமாக நிர்வாகத்தி லிருப்பவர்களை பயமுறுத்துவதற்காகத்தான். நிர்வாகத்திலிருந்தால் இந்திய விஷயம் தவிடு பொடிதான். இதற்கு விதிவிலக்காக பல கண்ணியமுள்ள ஆங்கிலேயர் உண்டு என்பது உண்மையானாலும் அவர்களால் சாதிக்க முடியக்கூடியது ஒன்றும் கிடையாது. தீனபந்து ஆண்ட்ரூஸ் போன்றவர்கள் இருட்டு வானத்திலுள்ள சில பிரகாசமான நக்ஷத்திரங்களை போன்று இருக்கின்றனர். அவர்களை யெல்லாம் போன்று லக்ஷக்கணக்கான ஆண்ட்ரூஸ்கள் ஏற்படும்போது நாம் கேட்காமலே ஸ்வயராஜ்யம் கிடைத்து விடும். அதுவரையில், மிதவாத மனப்போக்கை மேற்கொண்டு கேட்டுக்கொண்டே இருந்து, கிடைத்தால், கிடைக்கும்போது வாங்க வேண்டியதுதான். அல்லது துவேஷம் என்பதே எள்ளளவும் இன்றி, உலக க்ஷேமத்தில் கருத்துடையவராய் நடந்து கொள்ளும் "காந்தியடிகள் என்ற சாந்தமூர்த்தி தேர்ந்து காட்டும் அஹிம்சா செந்நெறிதான்" நாம் கடைப்பிடிக்க வேண்டியவர்களாகிறோம் என்பது வெள்ளிடைமலை. தீர்க்க தரிசனம் உள்ள அம்மகான் வெற்றி நம் பாரதமக்களின் வெற்றியேயாகும்!! அடுத்து சென்ற உலக மஹாயுத்தத்தைப்பற்றிய பொதுவான சில குறிப்புகள் எழுதப்படும். அதைப்பற்றி அநேக புஸ்தகங்கள் பல விதங்களிலும் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பது யாவரும் அறிந்த விஷயம்.

கணவன் பெயரைக் கூறலாமா?

(ஜே. டி. ஜே. ஜேக்கப்.)

நம் நாட்டுப் பெண்பிள்ளைகள் தங்கள் கணவன் பெயரைச் சொல்லக் கூச்சப்படுவார்கள். புருஷனின் பெயரைச் சொன்னால் அவனுக்கு மரியாதைக் குறைச்சல் உண்டாகும் என்று அஞ்சி அவனுடைய நாமத்தை உச்சரிக்கவேமாட்டார்கள். 'அகஸ்மாத்தாய்' யாராவது ஒருவர் 'அம்மா, உன் புருஷன் பேரென்ன?' என்று வினவினால் என்ன கூறுவது என்று விழிப்பார்கள். அவன் பெயர் பாலு என்றிருந்தால் பால்காரியை அழைக்கும்போது, 'ஏ இவளே, காப்பியில் ஊத்துவோமே அந்த வெள்ளைத் தண்ணீ இருக்கா?' என்று கேட்பார்கள். சீனி என்றிருந்தால் கடையில் சீனி வாங்கப்போனால், 'இனிக்குமே வெல்லப்பொடி அது இருக்காய்யா?' என்று கடைக்காரனைக் கேட்பார்கள். கணவன் பெயரைச் சொன்னால் தோஷம் என்பது அவர்கள் கருத்து.

கிறிஸ்தவர்கள் இன்னும் மேனாட்டு நாகரிகத்தில் தேர்ந்துவிடவில்லை, 'உன் புருஷன்பேரென்ன?' என்று யாராவது ஒருவர் வினவினால் 'மிஸ்டர் சோ அன் சோ' என்று பதில் சொல்லாமல் எப்படிச் சொல்லுவது என்று திகைப்பார்கள். ஒருநாள் கோவிலில் ஐயரவர்கள் சபையாரைப் பார்த்து, "'ஆசீர்வாதம் வேணும்' என்னும் பாட்டைப் பாடக்கடவோம்" என்று கூறினார். அங்கே ஒருத்தி 'ஊ ஊவும் வேணும்' என்று பாட்டுப் பாடினாள். ஐயர் அவள் வாயைக் கவனித்துக்கொண்டார். 'பார்த்தீர்களா, தன் புரு

ஷன் பெயர் என்றவுடனே அவள் அதைச் சொல்லிப் பாடவுங் கூச்சப்படுகிறாளே! கடவுள் நாமத்தை எத்தனை தடவை தாராளமாய் உபயோகிக்கிறாள்' என்றார். இதேமாதிரி 'ஆண்டவா மோட்சகதி நாயகனே', 'மோசே மோசே' 'தாசன் தானியேல் தலபக்தனே' என்னும் பாடல்களில் குறிப்பிட்ட வார்த்தைகளை சில பெண்பிள்ளைகள் உச்சரிக்கிறதில்லை.

இந்தக் கதையை நான் எழுதத் தூண்டினது என் ஊரில் நேர்ந்த சம்பவமே. புதிதாக கனம் ஞான ஒளிவு ஐயரவர்கள் எங்கள் ஊருக்கு வந்தபோது மற்ற பாதிரிமார்களைப்போலிராமல் ஒவ்வொரு தினமும் சாயங்காலந்தோறும் சபையார் வீட்டைச் சந்திக்கப் புறப்பட்டார். ஒருநாள் சாயங்காலம் மாமரத்தடியி லிருக்கும் வீட்டிற்குப் போனார். கழனி பிழிந்து கொண்டிருந்த ஒரு பெண் அவரைக் கண்டு சிரித்த முகத்துடன், 'தோத்திரம் ஐயா, இந்த நாற்காலியில் உக்காருங்க' என்று சொல்லி நாற்காலியைத் தூக்கிப்போட்டாள்.

'ஒம் புருஷன் பேரென்ன அம்மா? அவரைக் காணமே, அவர் எங்கே போயிருக்கிறார்?' என்று கேட்டார். அவள் முதல் கேள்விக்கு உத்தரவு கொடாமல் 'அவ்க மாடல் ஸ்கூலில் வேலை செய்றாக. இன்னும் வரல' என்றாள். 'அவர் யாரம்மா? அவர் பேரென்ன?' என்று மறுபடியும் கேட்டார் குருவானவர். 'அவ்க கொஞ்சம் வளந்து, பொதுநிறமாக இருப்பாக. வெள்ளக் கோட்டுதான் போட்டுக்கொண்டு பள்ளிக்கூடத்துக்குப் போவாக' என்று பெயரை மறைத்தே உத்தரம் சொன்னாள். பாதிரியாருக்கு அவளுடைய குறிப்பை அறிந்துகொள்ளக் கூடாமற்போயிற்று. 'அது யாரம்மா? எட்வர்ட் வாத்தியாரா?' என்று யோசனை பண்ணிக்கொண்டே கேட்டார். 'இல்ல, நீங்க சொல்றவர் கிழவன். எங்கூட்டய்யா வாலிபம். வயது முப்பது இருக்கும்' என்று மீண்டும் கூறினாள். 'எனக்குத்தான் மாடல் ஸ்கூல் வாத்தியார் எல்லாம் தெரியுமே. சொர்ணமா? ஞானையாவா? செல்லையாவா? ....' என்று ஒவ்வொரு உபாத்தியாயர் பேரையும் அடுக்கிக்கொண்டே போனார். அவள் ஒவ்வொன்றுக்கும் 'இல்லை இல்லை' என்று சொல்லுகிறாளேயொழிய புருஷன் பெயரைச் சொல்லவேயில்லை.

'என்னம்மா உனக்கு உன் புருஷனுடைய பேர் தெரியலியே, நீ எப்படிக் காரியத்தைச் சமாளிக்கப்போறே' என்று அவளுக்குப் படும்படி ஐயர் பேசினார். எனினும் அவளுக்கு தன் பத்தாவின் பெயரைச் சொல்ல நா எழவில்லை. உடனே அவள் பக்கத்து வீட்டுக்குப்போய், 'எக்கா ஒன் அண்ணன் பேரைச் சொல்லு ஐயா கேக்காக?' என்றாள். 'அவன் பேர் கசமுத்து ஐயா' என்று சொன்னாள். 'ஓ அவரா? அவர்தான் எனக்குத் தெரியுமே!' என்று ஐயர் ஆச்சர்யத்தோடு சொன்னார்.



தமிழ்நாட்டில் ஹிந்திப் பயிற்சி

(K. V. சிவசுப்பிரமணியன் B. A.,)

சென்ற சில வாரங்களாக ஹிந்தி மொழியை பாடசாலைகளில் கட்டாய பாடமாக வைக்க வேண்டும் என்ற தீவிர உணர்ச்சி நாடெங்கும் பரவி வருகிறது. சில தினங்களுக்கு முன் சென்னை முதல் மந்திரியவர்கள் இராமகிருஷ்ண மாணவர் விடுதியில் பாடசாலைகளில் ஹிந்தியை நுழைக்கும் விஷயமாக போட்ட பீடிகையே இவ்வுணர்ச்சிக்கு அடிப்படையான காரணமாகும். அது முதல் நாடெங்கும் மக்களுக்கு ஹிந்தியில் ஒரு அபிமானமும் ஆசையும் ஏற்பட்டன. இது விஷயத்தில் ஹிந்தி பிரசார சபையார் செய்து வரும் பெரு முயற்சியோடு சென்னை முதலிய பிரபல இடங்களில் புதிய ஹிந்திப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப் படுகின்றன. ஹிந்தியை அகில இந்திய பாஷையாகச் செய்ய வேண்டும் என்பது காங்கிரஸ் அரசாட்சியின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று என்பதை நண்பர்கள் அறிவார்களாக.

இந்த பிரச்னை விஷயமாக பொதுமக்களிடையே பல திறப்பட்ட அபிப்பிராய பேதங்கள் இருந்து வருகின்றன. ஹிந்தியை கட்டாய பாடமாக வைப்பதை பலர் ஆதரிக்கின்றனர்; பலர் எதிர்க்கின்றனர். தமிழ் நாட்டில் சேர சோழ பாண்டியர்கள் ஒரு மொழி வைத்துலகாண்ட காலத்தில் மக்கள் பெரு நன்மையடைந்தது போல், ஹிந்திப் பயிற்சியால் தற்கால இந்தியா நன்மையடைய முடியும் என்பது ஆதரிப்போரின் கருத்து. இச்செயலை ஆதரிப்பாரை விடுத்து, எதிர்ப்போரின் நோக்கங்களை நாம் ஆராய வேண்டிய தவசியம்.

ஹிந்தி மொழிப் பயிற்சியை, பலர் பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்க்கின்றனர். காங்கிரஸ் கடைப்பிடித்துள்ள குறிக் கோள்களையெல்லாம் அழிக்கவேண்டும் என்னும் நோக்கத்தோடு எதிர்ப்போர் சிலர்; ஹிந்தியை கட்டாய பாடமாக வைத்தால் தத்தம் தாய் மொழிக்கு ஆபத்து நேரிடும் எனக் கருதி எதிர்ப்போர் மற்றும் சிலர்; மாணவர்கள் பாடசாலையில் பயின்று வரும் பாடங்களோடு ஹிந்தியையும் கட்டாய பாடமாக வைத்தால் மாணவர்களால் சுமை தாங்க முடியாதென்னும் கருத்து கொண்டு ஆட்சேபனை செய்பவர் பின்னும் சிலர். இங்ஙனம் எழுந்துள்ள முத்திறப்பட்ட அபிப்பிராயங்களை ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

முதலாவதாக, காங்கிரஸார் செய்வனவற்றை எல்லாம் எதிர்க்கவேண்டும் என்னும் கொள்கையுடையோர் "எனக்கு இரண்டு கண்களும் போனாலும் போகட்டும், அண்டைவீட்டுக் காரனுக்கு ஒரு கண் குருடாய்ப் போக வேண்டும்" என்று கூறினவனுடைய வகுப்பைச் சேர்ந்தவர். மாஜி

இடைக்கால மந்திரிகளிற் பலர் இக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். ஹிந்தியைத் தவிர வேறெந்த பாஷையை கட்டாய பாடமாக வைத்தாலும் இக் கோஷ்டியாருக்கு ஆட்சேபனை கிடையாது. காங்கிரஸாரின் பிரஸ்தாபமெல்லாம் இவர்களுக்கு வேம்பு; மற்றவர் பேச்சு கரும்பு.

இரண்டாவது தொகுதியினராகிய தாய் மொழிப் பற்றுடையோரது கொள்கை சற்று நியாயமானதே. அதாவது ஹிந்தியை கட்டாய பாடமாக ஏற்படுத்தி விட்டால் தாய் மொழி வளர்ச்சி குறையும் என்பதே அவர்கள் நோக்கம். சென்னை மாகாணத்தில் தமிழ் ஜில்லாக்களே அதிகமாகையால் தமிழை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். சென்ற சில ஆண்டுகளாக தமிழ் நாடெங்கும் மகா நாடுகள் கூட்டப் பெற்று "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்"; இதுவரையில் அரசியலார் தமிழ் மொழி வளர்ச்சியை கனவிலும் கருதுவதில்லை; ஆகையால் காங்கிரஸ் அரசாட்சியிலேனும் தமிழைக் கட்டாய பாடமாக ஏற்படுத்தும்படிச் செய்ய வேண்டும்" என்று ஆங்காங்கே தீர்மானம் செய்கின்றனர். சென்ற ஆண்டில் நடைபெற்ற தமிழ் மகாநாடுகளொன்றில் பிரதம மந்திரி கனம் இராஜகோபாலாசாரியாரவர்களே "தமிழை பாடசாலைகளில் கட்டாய பாடமாக வைக்க முயற்சி செய்ய் வேண்டும்" என்று கூறியிருக்கிறார். இப்போது அவர் மந்திரி சபைத் தலைவராக வந்தபின் அதைக் கவனிக்காமல் ஹிந்தியைப் பற்றி பெருமுயற்சி எடுத்துக் கொண்டதற்காக தமிழர்களிடையே மனவருத்தம் ஏற்பட்டிருக்கின்றது. தமிழ் நாட்டுப் பாடசாலைகளில் தமிழையும் ஆந்திர பாடசாலைகளில் தெலுங்கையும், கர்நாடகத்தில் கன்னடத்தையும், மலையாள நாட்டுப் பள்ளிகளில் மலையாளத்தையுமே கட்டாய பாடமாக வைப்பது நேரிய முறையாகும். பத்திரிகைக் காரர்கள் கூறுவது போல் அது சுயபாஷையபிமானத்தால் கூறும் சுயநலக் கூற்றல்ல. மாதா வயிறெரிய மகேஸ்வர பூசை செய்தென்ன பலன்? ஒருவன் தான் பிறந்த நாட்டில் வழங்கும் மொழியைக் கற்ற பின்னரே பிறமொழிகளிற் கருத்தைச் செலுத்த வேண்டும். தாய் மொழிப் பற்றே சுதந்திரம் தந்திடுமாகையால், ஒரு நாட்டு மக்கள் தாய் மொழியை கற்றற்குரிய சட்டதிட்டங்களை அந்நாட்டு அரசியலார் ஏற்படுத்த வேண்டும். ஹிந்தி மொழிப் பயிற்சி, இந்தியாவெங்கும் உலவி வருவதற்கு ஒருவனுக்குப் பேருதவியாயிருப்பதால் அதையும் கற்க வேண்டிய தவசியமே. இப்பொழுது உயர்தர பாடசாலைகளில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலியன இஷ்ட பாடங்களாக (Optional Subjects) வைக்கப்பட்டிருக்கின்றன. ஆங்கிலம் எப்படி கட்டாய பாடமாக கற்றுக் கொடுக்கப் படுகிறதோ, அதைப் போலவே அந்தந்த நாட்டு தாய் மொழியை அங்கங்கே கட்டாய பாடமாகவும் ஹிந்தியை இஷ்ட பாடமாகவும் வைத்தலே உசிதமானது. அதனால் ஹிந்தி மொழி நாட்டில் பரவுவதற்கு ஏது வில்லை எனக் கூறிவிட முடியாது. இப்போது மாணவர்கள் 'இஷ்ட பாடங்களைக்' கற்பது போலவே ஹிந்தியில் விருப்ப முள்ளவர்கள் அதை எடுத்துக் கொண்டு படித்தே தீருவார்கள். நாளடைவில் அவர்கள் தொகை அதிகரித்து விடும். இப்போது அமுலிலிருந்து வரும் கல்வி முறைப்படி தமிழ் மாணவனொருவன் தமிழ் கற்காமலே பீ. ஏ. வரையில் வேண்டுமானாலும் படித்து விடலாம். அதனால் தான் இப்போது பலர் பொதுக் கூட்டங்களில் தம் தாய் மொழியில் இரண்டொரு வார்த்தைகள் சேர்ந்தாற் போல் பேசத் தெரியாமல் தவிக்கின்றனர்; இங்ஙனம் பலரும் தமிழை நிராகரித்தார்களானால் நாளடைவில் தமிழின் கதி என்னாம்? ஆகையால் தமிழ் கற்றது போக எஞ்சின ஓய்வு நேரங்களில் ஹிந்தியைக் கற்கலாம். ஹிந்தியை கட்டாய பாடமாக வைத்தாலும் சரி, இஷ்ட பாடமாக வைத்தாலும் சரி அதைக் கற்கும் விருப்ப முள்ளவன் கற்றே தீருவான். அங்ஙனங் கற்கும் விருப்ப முடையவர் பாலராயினும் விருத்தராயினும் அவர்களுக்குப் பயன்படுமாறு தக்ஷிண பாரத ஹிந்தி பிரசாரசபையார் அங்காங்கே ஹிந்தி பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த வேண்டும். சர்க்கார் அவற்றிற்கு ஆண்டு தோறும் தக்க மானியங்கள் (Grants) அளிக்க வேண்டும். ஆகையால் ஹிந்தியை முதல் மூன்று பாரங்களிலேனும் அல்லது வேறெந்த வகுப்பிலேனும் கட்டாய பாடமாக வைக்க வேண்டுமென்பது உசிதமான நோக்கமல்ல. இக்கருத்து கொண்டே அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. S. சோமசுந்தர பாரதியார் மேற்படி கழகத்திலும், சீகாழிப் பொதுக் கூட்டத்திலும், பெண்ணாகடம் காரந்தைத் தமிழ்ச் சங்கத்திலும் ஹிந்தியை கட்டாய பாடமாக வைப்பதை எதிர்த்துப் பேசியிருக்கின்றார். இக் கொள்கையுடைய திரு கா. சுப்ரமணியம் பிள்ளை, திரு இ. மு. சுப்ரமணிய பிள்ளை முதலியோர் தென்காசியில் இதை ஆட்சேபித்துப் பேசியுள்ளனர்.

மூன்றாவதாக, மாணவர்களுக்கு பாடச் சுமை அதிகமாகிவிடும் என்ற கொள்கை. இது அவ்வளவு சிறந்த காரணமல்ல. ஏனென்றால் இப்பொழுது ஒவ்வொரு பாடசாலையிலும் அனுசரித்து வரும் பாடதிட்ட முறையில் (Syllabus) நீக்க வேண்டியவைகளை நீக்கியும் சேர்க்க வேண்டியவைகளைச் சேர்த்தும் சீர்திருத்தம் செய்தால் அத்தகைய பாடச் சுமைக்கு ஏது விராது. அங்ஙனம் மாற்றியமைக்கா விடில் மாணவர்கள் பெரிதும் துன்புறுவார்களென்பது திண்ணம்.

முடிவாகக் கூறுமிடத்து நாமெல்லோரும் ஹிந்திப் பயிற்சியை வரவேற்பது அவசியம். இந்தியாவிலுள்ள மக்களிற் பெருந் தொகையினர் ஹிந்தியை தாய் பாஷையாகப் பெற்றிருக்கின்றனர். அதனால் தென்னிந்தியர்களும் ஹிந்தியை எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டார்களே யானால், வியாபாரம், கல்வி, கைத்தொழில் முதலிய துறைகளை மேற்கொண்டு, நாடெங்கும் உலவி நலம் பெறலாம். இங்ஙனங் கூறுவோமாயின், வடநாட்டிந்தியர்கள், தென்னாட்டு மொழிகளும் பெரும்பாலோரால் வழங்கப்படும் தமிழ் மொழியை கற்கவேண்டியது அத்தியாவசியமானது. ஆகையால் சென்னை அரசாங்கத்தார் இது விஷயத்தை தீர ஆலோசித்து அமுலுக்குக் கொண்டு வருவது மிகவும் அவசியமாகும்.

பொருள் நூல்

ஸ்ரீகண்ட இராமன், எம். ஏ., எல். டி.,

(*Rights Reserved.*)

(தொகுதி-23. பகுதி-1. 9-ம் பக்கத் தொடர்ச்சி.)

அரிசி—Inelastic Demand

மூட்டை விலை ரூபாய்	கேட்கப்படும் எண்ணிக்கை	மொத்த விலை ரூபாய்
10	1000	10,000
9	1050	9,450
8	1100	8,800
7	1200	8,400
6	1350	8,100
5	1500	7,500

அரிசி—"டிமாண்டு" வளைவு

இரண்டாவது படம்



தேவையான அரிசி மூட்டைகள்.

இந்த இரண்டாவது படத்தில் "Inelastic demand" அதாவது வளையாமல் இருக்கும் கேட்பதைக் காட்டப்பட் டிருக்கிறது. அரிசியின் விலை விழும் பொழுது அல்லது கம்மியாகும் பொழுது "டிமாண்டு" அதிகமாகும். ஆனால் அந்த "டிமாண்டு" அதிகரிப்பு குறையும் விலையைப் பொறுத்து

நோக்கினல் கம்மியாகவே இருப்பதைக் காணலாம். முன் படம் போலவே இங்கும் O Y-யில் விலைகளும் O X-ல் மொத்த மூட்டைகளும் குறிக்கப் பட்டுள்ளன.

மேற் கூறிய விஷயங்களில் இருந்தும் நாம் தெரிந்து கொள்ளுவ தென்ன? ஹார்மோனியங்களில் கொஞ்சம் விலை மாறினால் அது "கேட்பதை" (Demand) பாதிக்கிறது. அதிகமாக பாதிக்கிறது என்றே சொல்லி விடலாம். ஆனால் அரிசியின் விலையில் பெரிய மாறுதல் உண்டானாலும் "டிமாண்டை"ப் பொறுத்த மட்டில் கொஞ்சமாகவே பாதிக்கிறது. ஹார்மோனியங்களைப் பொறுத்த மட்டில் அதனுடைய விலை குறைந்தால் மொத்த விலை கொடுத்தது ஜாஸ்தியாக இருக்கும். விலை ஜாஸ்தியானால் கொடுத்த மொத்த தொகை குறைகிறது. ஆனால் அரிசியின் விலை குறைந்தாலும் மொத்த விலை குறைந்துதான் காணப்படுகிறது. அடுத்த "செக்ஷனி"ல் "கேட்பது" (Demand) எந்த நிலைமையில் மாறுகிறது என்பதை ஆராய்வோம்.

கேட்பது எவ்வேப்போது மாறுபடும்?

கேட்பது (Demand) எவ்வெப்போது, ஒவ்வொரு தடவையும் ஒரு குறிப்பிட்ட சாமானுக்கு இணங்குந் தன்மையைக் கொண்டிருக்கிறதா அல்லது விறைப்பாக இணங்காத தன்மையை (Inelastic)க் கொண்டிருக்கிறதா என்பதை நிர்ணயிப்பது மிகவும் கஷ்டமான காரியம். உண்மையில் ஒரு குறிப்பிட்ட சாமான் விலையை யநுசரித்து ஒரு தடவை இணங்கும் அல்லது வளையும் தன்மையைக் கொண்டிருக்கும். அதே சாமான் மற்றொரு விலைக்கு வளையாத தன்மையைக் கொண்டிருக்கும். உதாரணமாக ஒரு வீசை காப்பிக் கொட்டை ஒரு ரூபாயிலிருந்து இரண்டரை ரூபாய்கள் வரையில் கேட்புச் சட்டத்திற்கு அடங்கி இணங்கும். அதற்கு மேல் விலை யேறினல் "Inelastic" ஆக இருக்கும். சில சமயங்களில் விலை விழும்பொழுது கேட்பது கொஞ்ச காலத்திற்கு அதிகரிக்கும்; ஆனல் இது ரொம்ப காலத்திற்கு நீடித்திருக்காது. இதற்கு கிராமபோனை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

கேட்பது இணங்கும் (Elasticity of Demand) எனும் கருத்து வழக்கத்தில் மிகவும் ஜாக்கிரதையாக கையாளப்பட வேண்டும். கொஞ்ச காலத்தில் மாறுதல்கள் ஏற்படும் விலையின் விளைவுகளுக்கு மட்டும் உபயோகப்படுத்த வேண்டும். திடீரென்று மாறுதல்கள் ஏற்படும் விலையிலும் ஜனங்களுடைய பழக்க வழக்கங்களின் விளைவாக மாறுதல்கள் ஏற்படும் விலையின் விளைவாகவும் இது உபயோகப்படுத்தா விட்டால் சரியாக இருக்காது.

ஆடம்பர வஸ்துக்களுக்கு (Luxuries) சாதாரணமாக கேட்பது (Demand) இணங்குந் தன்மையைக் கொண்டிருக்கிறது. இன்றியமையாத வஸ்துக்களுக்கு (Necessaries) கேட்பது வளையாத தன்மையைக் கொண்டிருக்கிறது; என்ன விலையானாலும் நித்திய வாழ்க்கைக்கு அவசியமாக வேண்டிய சாமான்கள் வாங்கப்பட்டே தீரும். ஆனல் ஆடம்பர வஸ்துக்களுக்கு கேட்பது ஒரே நிலையாக இராது. ஏன்? அவற்றை மாந்தர்கள் தள்ளி விட்டுச் சும்மா இருக்கலாகும். (The demand for luxuries is

usually elastic while the demand for necessaries is usually inelastic.)

இது சில விலக்குகளோடு தான் உபயோகிக்கப்பட வேண்டும். உதாரணம் கொடுப்போம். சில வாழ்க்கைத் துறைகளில் ரேடியோ, பியானோக்கள் சமூக அந்தஸ்தின் இன்றியமையாத வஸ்துக்களாக கருதப்படுகின்றன. இதை ஆங்கிலத்தில் Conventional necessaries என்று சொல்லுவர். சில பணக்காரர்கள் விலை ஏறினாலும் அவற்றை வாங்கியே தீருவார்கள். விலையுயர்ந்ததும் கம்மியாக இருக்கக் கூடியதும் சமூகத்தில் அவற்றை உபயோகிப்பது ஒரு விசேஷ கௌரவத்தைக் கொடுக்கிறதென எண்ணுவதும் ஆன வைரங்கள் சாதாரணமாக "Inelastic" கேட்பாகத் தான் இருக்கும். வைரங்களின் விலை குறைந்தால் முன் வாங்காத மனிதர்களுள் சிலர் அவற்றை வாங்கலாகும். ஆனால் முன்பு அந்தஸ்திற்கும் சமூக கௌரவத்திற்கும் மேன்மை தருவதெனக் கருத்துக்கொண்டு அதை உபயோகித்து வருபவர்கள் வைரங்களின் விலை கீழே போயிருப்பதைக் கண்டு அவற்றை வாங்குவதை இப்பொழுது நிறுத்தி விடுவார்கள். ஏன்? பணக்காரர்கள் உபயோகித்து வந்ததை இப்பொழுது ஏனையோர் வாங்கினால் வைரங்களின் மதிப்பு குறைந்து விட்டதாக அவர்கள் நினைத்துக் கொள்ளுவர். அவற்றின் மீது இருந்த ஒரு மோகம் இப்பொழுது அவர்களிடம் கிடையாது. அதனால் கேட்பது குறைந்து போகிறது. இதனால் கேட்பது என்பதை அநுசரித்து நிற்கும் காரணம் விற்பதை ஆதரிப்பதும் தள்ளுவதும் ஆக இருக்கிறது.

இன்றியமையாத வஸ்துக்கள் விலை ஏறினாலும் "டிமாண்டு" வளைந்தே இருக்கும்: ஜனங்கள் அவற்றை வாங்கியே தீருவர். ஆனால் இது எல்லா முக்கியமான சாமான்களுக்கும் பாதிக்கும் என்று சொல்லமுடியாது. உப்பு, நெருப்புக்குச்சிகள் ஆகிய இவற்றின விலைகள் நூற்றுக்கு இருபது அதிகமாக ஏறினாலும் ஜனங்கள் அதை பொருட்படுத்தாமல் வாங்கியே தீருவர். ஏன்? அவர்கள் இவற்றிற்காக செலவிடும் தொகை மிகவும் சொற்பமேயாகும். ஆனால் துணி மணிகள் முதலானவை விலை யுயர்ந்தால் மனிதர்கள் சிக்கனத்தை யநுசரிக்க ஆரம்பித்து விடுவார்கள். அதனால் கேட்பது குறைந்து போகும்.

ஒரு சாமானுக்கு பதில் சாமான்கள் (Substitutes) இருக்குமானால் கேட்பது Elastic ஆகத்தான் இருக்கும் அதாவது கேட்பது விலைக்கு இணங்கியே இருக்கும். (Demand is more elastic where there are substitutes) ஒரு பவுண்டு தேயிலை இரண்டு மூன்று ரூபாய்கள் என்று விலை யுயர்ந்தால், காப்பிக் கொட்டையின் விலை முன்மாதிரியே இருந்தால், ஜனங்கள் காப்பிக் கொட்டையையே வாங்கி உபயோகிப்பார்கள். காப்பிக் கொட்டைக்கு வியாபாரம் வந்தால் அதனுடைய விலையும் உயரும்—இதனால் இரண்டு வகையான சரக்குகளின் விலைகள் கருணையுடன் ஒரே மாதிரி நிலைக்கு வர முயற்சிக்கும் என்பது தெரிகிறது.

(தொடரும்.)

தோற்றம்

(டர்பன், திரு. ச. முனிசாமி பிள்ளை)

"அகத்தினழகு முகத்திற் றெரியும்" என்றோர் வாக்கியமுண்டு. அதன் உண்மை ஆராயத்தக்கது. முகம் வேறுபட்டிருப்பதும், சில குளிர்ச்சியும், சில கடுமையும், வேறு சில மந்தமும், சில பொறுமையும், அறிவுடைமையும் இவைபோன்ற அநேகவித குணங்கள் முகத்தில் தென்படுவதை யாவரும் நன்கு பார்த்திருப்பர். முகப் பார்வையை ஓர் அறிகுறியாய் வைத்து மனிதரின் குணத்தையும் அவரது பெருமையையும் திறமையையும் எண்ணுவோருமுளர். ஆகையால் இவ் விஷய நுட்பம் கவனிக்கலாயிற்று.

நெப்போலியன் மிகுந்த தீர்க்கதரிசியும் பொறுமையு முடையவர்போலுள்ள தோற்றமுடையவர். அநேக மேதாவிகள் சாஸ்திர ஆராய்ச்சியிலும் நூலாராய்ச்சியிலும் உழல்வோர் பித்தர்களின் பார்வையை வகிக்கின்றனர். ஆகவே, முகப் பார்வையிலிருந்தும், தோற்றத்திலிருந்தும் குணத் திறமைகளைக் கண்டறிவது எளிதாகத் தோன்றவில்லை. சாதாரணமாய் முகமும், தோற்றமும் குடும்பப் பற்றையும் பழக்கப் பற்றையும் தனித்தனியுடைமையாலே சிற்சில சமயம் அழகுள்ள மூடனும் அன்பை யொத்த மோசக்காரனும், சாதுப்போன்ற கபடனும் உலகத்திலமைவது தெற்றெனப் புலப்படும். இத்தகைய வஞ்சகர்களைக் கண்டறிவதற்கு முகம் போதாது.

இரண்டாவதாக சொன்னதிலிருந்து பொது வாக்கியத்தின் சிறப்பு குன்றியவாறல்ல. அது வாக்கியத்தைத் தழுவி நின்று அதைக் கொள்ளும் வகையைக் காட்டியவாறும். கல்விமானின் அழகின்மை, ஞானியின் பைத்தியத் தன்மை, லோகோபகாரியின் கடினதன்மை, வீரனின் பொறுமை இவைகள் அவரவரின் முகக்குறியால் காணுமானால் அவைகள் கவனிக்கத் தக்கவையே. கல்விமானின் அழகின்மை அவன் மனக்குறையாலும், கவனமின்மையாலும் நிகழ்ந்ததாகும். ஞானியின் பைத்தியத் தோற்றம், அவன் புத்தியை ஒரே நிலையில் வைத்திருப்பதே. இந்திரியங்கள் அனைத்தும் வேலை செய்து சுகிக்கும்போதே சந்தோஷமும், துன்பக்கேடும் உண்டாகும். அப்போதுதான் முகம் நற்பார்வையை யுடையதாகும். இம்மாதிரியே லோகோபகாரியின் கடினத்தன்மை அவனது மனம் உலக துன்பத்தை சகிக்கமுடியாமல் ஏற்பட்ட கோபக்குறியாகும். இவ்விதமே வீரனின் பொறுமை, தன்னை ஒருவராலும் அவமதிக்கமுடியாதென்ற நிகழ்ச்சியால் பிறந்தது. நற்பார்வை விசேஷம் பார்வையின்மையினும் கொண்டாடத்தக்கது.

நற்பார்வையுடன் அமைந்த குணம், திறமை, நுட்பம். "பொன்மலர் நாற்ற முடைத்தானாற்" போல, குணமே சிறப்புப் பொருந்தியதாகையால்

எவ்விதமாயினும் கொள்ளற்க. அழகுள்ள மடமை விரும்பத்தக்கதல்ல. ஏமாற்றத்திற்கு ஏதுவாகுமாகையால் புறம்பே விலக்கத்தக்கது. மாணிக்கம் குப்பையிலும் விசேஷ ஒளியைக் கொடுக்கிறது. மனதைக் கவர்கிறது. அதை நாம் அப்போதும் பாராட்டுகிறோம். அவ்விதமே நற்கும் எவ்விடத்திலும் போற்றப்படும், படுவது நலம்.

தற்கால நாகரீகம், அநேக நன்மைகளுடன் தீமைகளையும் விருத்தி செய்கின்றது. மனிதன் தேக சௌக்கியத்தையும், மரியாதையையும், கொடுக்கும்பொருட்டு ஏற்பட்டவைகள் சிற்சிலசமயம் மனிதரை ஏமாற்றவும்உபயோகப்படுத்தப்படுகின்றன. இக்காலத்திலே அநேகருடைய உண்மை நிலைகள் தெரியாமலே மறைக்கப்படுகின்றன. வண்ணான், நாவிதன் உதவியைக் கொண்டும் ஆடம்பர உடை இவைகளின் உதவியைக்கொண்டும் அநேகர் பெரிய பிரபுக்கள்போலத் தோன்றுகிறார்கள். இவ்வித தோற்றம் ஒவ்வோர் செய்கையிலும் விளங்குகிறது. சிலர் பிரசங்கத்தாலும், சிலர் சபைகளில் சேர்ந்து தடபுடல் செய்வதாலும், சிலர் பணத்தைக் கவனியாது செலவு செய்வதாலும் தாங்கள் பேர் வாங்கவேண்டுமென்று தூண்டப்படுகிறவர்களின் தொகை அதிகரித்து வருகிறது. இப்பேர்ப்பட்ட எண்ணங்களால், ஊக்கத்தோடும், கவனத்தோடும் அநேக முயற்சிகள் நடத்தப்படாமல் நிலைகுலைந்து போயிருக்கின்றன. அதன்காரணமாகப் பேரும் புகழும் தேசத்தில் குன்றுகின்றன. உண்மையே நிலைக்குமாகையாலும், உண்மையற்றவை ஈனமாகையாலும் உண்மையே கையாளத்தக்கது.

ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாத்தம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்.

மானேஜர்.

நமது வாணாளில்

'மணி'

1. அறியாமை என்ற திரைச் சீலையில் பயம் என்ற பென்சிலைக் கொண்டு மூட நம்பிக்கை என்ற சிற்பியால் வரையப்படும் படமே பேய், பிசாசாகும்.—இங்கர்ஸால்.

2. நம் வாணாள் அளிக்கும் அற்புதப் பொக்கிஷம் களங்கமற்ற பெயராகும். அது இல்லையேல் நாம் வர்ணம் பூசிய களிமண் போலாகின்றோம்.—ஜகத்தைச் சிற்பிப்பவர்.

3, இப்புவியில் எவன் ஒரு காரியத்தைச் செய்ய இயலாதவனாக இருக்கின்றானோ அவன் முயற்சியுள்ளவனாக இருக்கின்றான். எவனால் கூடுமோ அவன் வாளாவிருக்கின்றான். என்னே? மானிட இயற்கை! —பிரௌனிங்.

4. உயர்ந்தோரை வெறுப்பதே, கீழோர் அவர்களுக்குப் புரியும் இயற்கையான தொண்டு—டிக்கன்ஸ்.

5. பழிக்குப் பழி, நாகரீக மற்ற நியாயத் தீர்ப்பு—பைரன்.

6. ஒருவனுடைய எண்ணத்திற்கும், செய்கைக்கும் வித்யாசம் அபரிதமாக இருக்கவேண்டும். அவன் செய்தது செய்ய நினைப்பதை விட குறைந்ததாக இருக்கவேண்டும். இல்லையேல் சுவர்க்கம் எதற்கு?—பிரௌனிங்.

7. நாம் முன்னும் பார்க்கின்றோம். பின்னும் பார்க்கின்றோம். பார்த்தும் இல்லாதவைகளுக்கு வருத்த முறுகின்றோம். நமது உளம் பூரித்த சிரிப்பிலும் சிறிது வலி அடங்கியுள்ளது. நமது கர்ணாமிர்த பாடல்கள் துக்கமான எண்ணங்களை தோற்றுவிக்கின்றன.—ஷெல்லி.

8. நம் வாணாள் அதிகரிக்க அதிகரிக்க, அது ஒரு எளிய வஸ்துவாகிறது—ஆப்த வாக்கியம்.

9. கடவுளுக்குப் பயப்படு. அதுவே ஞானத் தோற்றத்திற்கு அறிகுறியாகும்.—இந்தியன்.

10. கிழக்கு கிழக்கே
மேற்கு மேற்கே
கிழக்கும் மேற்கும்
நமக்கு விருப்பே.—தாகூர்.

11. ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கண்டெடுப்பதைக் காட்டிலும் ஒரு சந்தோஷகரமான மனிதனையோ, மாதையோ பார்ப்பது உசிதமானது —ஸ்டீவன்ஸன்.

12. நாம் ஒருவனைப் பார்த்து ஏசிச் சொன்ன சொற்களை நான்கு குதிரைகள் பூட்டிச் சென்றபோதிலும் திரும்பக் கொண்டுவர முடியாது. —பார்மிய வசனம்.

13. அந்தோ! உன் வறுமையைப் போக்குகிறேன். உன் துக்கத்தைப் போக்குகிறேன். ஆனால் எங்கள் தேசப் புலவர்களை, அதிலும் பாரதியை யாசிக்காதே.—பாரத புத்திரன்.

14. ஒரு பசுந்தழையைப் பார்ப்பதிலிருந்து எழும் எண்ணம் ஞானிகள் கூறுவதைக் காட்டிலும் ஜாஸ்தியாகவே, மனிதனைப்பற்றியும், நீதி நெறிகளைப்பற்றியும் நமக்குப் புகட்டும்.—வொட்ஸ்வொர்த.

வியாபாரிகளே!

சினிமா பட முதலாளிகளே!

நீங்கள்

"ஆனந்தபோதினி"யில்

விளம்பரஞ் செய்ததுண்டா?

இல்லையானால்,

இன்றே ஒரு முறை முயற்சி செய்து பாருங்கள்.

தமிழ்நாடெங்கணும், தமிழர்கள் வசிக்கும் மலேயா, சிங்கப்பூர், கோலாலம்பூர், தென்னாப்பிரிக்கா, பர்மா முதலிய இடங்களிலும் பல்லாயிரக் கணக்காகப் பரவியிருக்கும் "ஆனந்தபோதினி"யில் விளம்பரஞ் செய்தால், உங்கள் வியாபாரங்களில் பெருத்த லாபங் கிடைக்கும். ஒரு முறை பரீக்ஷை செய்து பார்த்தால் உண்மை விளங்கும். விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர், ஆனந்தபோதினி ஆபீஸ்,
:: :: சௌகார்பேட்டை, சென்னை. :: ::

உபாத்தியாயர்:—"பையன்களே! தினந்தோறும் படிக்காவிட்டால் பாடங்கள் பொதி யேத்தினைப் போலக் குவிந்துவிடும்"

ஒரு மாணாக்கன்:—"பொதி யேத்துகிறது யார் ஸார்?"

***

வக்கீல்;—"உமக்கும் சண்டை நடந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும்?"

சாட்சி:—"இருபதடி இருக்கும்"

வக்கீல்:—"நீர் சண்டையை விலக்கக் கூடாதா?"

சாட்சி:—'மறுநாள்தான் எனக்குச்சண்டை நடந்த இடமே தெரியும்."

***

"நீ ஏன் லீவு எடுத்துக் கொண்டு என் குமாரன் கலியாணத்துக்கு விஜயஞ் செய்யக் கூடாது? நீ இல்லாவிட்டால் உன் ஆபீஸில் எந்த வேலையும் நடைபெறாது என்பது உன் எண்ணமா?"

"அது இல்லை நான் லீவு எடுத்துக் கொணடால் நானில்லாக் காலத்திலும் வழக்கம் போல்தான் எல்லா வேலைகளும் நடக்கின்றன என்பதைச்சொந்தக்காரர்கள அறிந்து கொள்வார்களே என்ற பயந்தான்."

***

மனைவி:—தாங்கள் படித்த நாவலின் முடிவு சந்தோஷமாக இருக்கிறதல்லவா!

புருஷன்:—இல்லை, இல்லை! துக்கத்தில்தான் முடிந்தது.

மனைவி:—எப்படி?

புருஷன்:—அவர்கள் இருவரும் கடைசியில் கல்யாணம் செய்து கொண்டார்கள்.

ஒரு பிராமணன் உடுப்பி ஹோட்டலில் போய் ஒரு இட்லி வாங்கி சாப்பிட்டு கொண்டு இருந்தான். பாதி இட்லியில் சட்னி ஆய்விட்டது. வேலைக்காரனைப் பார்த்து அய்யர்,—அடே சட்னி கொஞ்சம் போடு என்றார்.

வேலைக்காரன்:—சட்னி எடுத்துகொண்டு வந்து போட்டுவிட்டு (கன்னடை பாஷையில்) சாக்கா (போதுமா) பேக்கா (வேணுமா) சாமி என்றான்.

அய்யர் (தனக்குள் என்ன சாக்கும் பேக்கும் ஒரு பலகாரம் என்று நினைத்துகொண்டு) அப்படியானல் சாக்கு கொஞ்சம் போடு, பேக்கு கொஞ்சம் போடு என்றார்.

***

பீச்சில் பாப்பா அழுதுகொண்டிருந்தது. தாயார் சீனுவைப் பார்த்து, ஏண்டா சீனு தம்பி அழுகிறான்?

சீனு:—பாரம்மா! தம்பி மணலில் ஒரு பள்ளம் தோண்டச் சொல்லி அதை வீட்டுக்கு எடுத்துகொண்டு வரச்சொல்லி அழுகிறான்.

***

ராமு:—"மாமா என்னை சினிமாவுக்கு நாளைக்கு அழைச்சுண்டு போறேன்" என்று பொய் சொல்லுகிறாரே?

தாயார்:—அவர் பொய்ப் பல் கட்டிண்டு இருக்கா ரோல்லியோ, அதனால் தான்!

***

வக்கீல்:—நீ பிறந்த தேதி என்ன?

குற்றவாளி:—ஐயா, அது எனக்குத் தெரியாது?

வக்கீல்:—ஏன் தெரியாது?

குற்றவாளி:—நான் பிறக்கும்பொழுது எனக்கு முன்னால் ஒரு காலண்டரும் கிடைக்கவில்லை.

***

வக்கீல்;—(கொத்து வேலை கஷிக்காரனைப் பார்த்து) படி (Fees) கட்டியாய் விட்டதா?

கஷிக்காரன்:—எசமானே! கொல்லையிலா? வாசலிலா? நிமிசம் கட்டிடறேனுங்க.

***

புராணிகர்:—"சங்கநிதி பதுமநிதி இரண்டும்........" என்று இராகத்துடன் பாடத்தொடங்கினர்.

முதலிழந்த முட்டாள்:—போதும், போதும், மற்ற நிதிகளும் அப்படித்தான், அதை நினைத்து அழுவதில் பிரயோஜனமே இல்லை.

***

கலியுக பூதகி

பிரிட்டன், ஹேடர்ஸ்பீல்ட் என்னுமிடத்தில் வசிக்கும் ரோசி புருக் என்னும் பெயருடைய பெண்மணி மிகப் பருத்துக் காணப்படுகிறாளாம். அவளது தற்போதைய தேக நிறை கால் டன்னும், உடலின் சுற்றளவு 8-அடியும் இருக்கிறதாம். தான் இவ்விதம் பருத்திருப்பது பற்றிப் பெருமை கொள்வதோடு, பருத்த தேகிகளே உலக இன்பங்களை நன்கு அனுபவித்து, மகிழ்ச்சியாக இருக்க முடியுமென்று கூறுகிறாள். நாளுக்குநாள் பருத்து வருவதைக் காணும்போது இவள் கலியுக பூதகியோ என எல்லோரும் ஆச்சரியப் படுகிறார்களாம்.

***

தங்க வியர்வை யரும்பிய நோயாளி

லண்டன் பெரிய ஆஸ்பத்திரி யொன்றில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளியை ஒருநாளிரவு நர்ஸ் வந்து கவனித்தபோது, வயது முதிர்ந்த அந் நோயாளியின் உடல் தங்கமயமாய்க் காணப்பட்டதை யறிந்து ஆச்சரிய முற்றாளாம். எனவே, அவள் டாக்டருக்குத் தகவல் தெரிவித்தாள். அவர், நோயாளியைப் பரீக்ஷித்து பார்த்துவிட்டு, நோயாளியின் வியர்வை தங்கமாக இருக்கிறதென்றும், முன்னாள் அந்நோயாளிக்குத் தங்கம் அதிகமாகச்சேர்ந்த மருந்தொன்று இஞ்சக்ஷன் செய்யப்பட்டதே இதற்குக் காரணமென்றும், அம் மருந்திலிருந்த தங்கம் இரத்தத்திலிருந்து பிரிந்து வியர்வையாக வெளிப்பட்டிருக்கிறதென்றும் கண்டு பிடித்துக் கூறினர். இம் மாதிரி அதிசய நிகழ்ச்சி இதற்குமுன் நிகழ்ந்ததே கிடையாதாம்.

***

ஜன்னல் குடை

மழைக்காலங்களில் எதிர் வருவோரையோ அல்லது வண்டிகளையோ பார்த்துக்கொண்டு சௌகரியமாக நடப்பதற்காக, மேனாடுகளில் ஜன்னல் போன்ற துவாரங்கள் செய்து மூடப்பட்டுள்ள குடைகள் நூதனமாகச் செய்யப்பட்டு உபயோகிக்கப் படுகின்றனவாம்.

***

விதவிதமாக ஓசை செய்யும் விசித்திரக் கடிகாரம்

வெனீஸில் தற்போது ஒரு விசித்திரமான கடிகாரத்தை மார்லோ பிசட்டி என்ற இத்தாலியர் கண்டுபிடித் திருக்கிறாராம். சில நவீன மோட்டார்களில் 7, 8-விதமாக ஓசை புரியும் 'ஹார்ன்'கள் இருப்பது போல, இக் கடிகாரத்தின் அலாரம் மணி 20-விதமாகச் சப்திக்குமாம். இதில் மற்றொரு விசேஷ மென்னவென்றால், ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொருவிதமாக 20-நாட்கள் முறையே சப்தித்து, மீண்டும் 21-ம் நாள் பழையபடி சப்திக்க ஆரம்பிக்குமாம். முதல்நாள் மட்டுந்தான் சாதாரணமாக ஓசை செய்யுமாம். மற்ற 19, நாட்களில் மேனாட்டு நடன சங்கீதம், ரிவால்வர் சுடும் சப்தம் முதலியவைகளை ஓசை செய்யுமாம்.

ஆந்தை 40-நாட்கள் வரை கூட நீர் பருகாமல் இருக்குமாம்; தனக்கு ஆபத்து நேர்வதாயிருந்தால், அது செத்து விட்டதுபோலப் பாசாங்கு செய்யுமாம்.

* * * *

எறும்புகள் எட்டு முதல் பத்து வயதுவரை ஜீவிக்குமாம்.

* * * *

மனிதனுக்குப் பல் 32-என்று கூறப்பட்டாலும், சிலருக்கு அதிகமாகவும் இருப்பதுண்டு. நாய்க்கு 42-பல்கள் இருக்கின்றனவாம்.

* * * *

நத்தைக்குக் கண் காது கிடையாதெனப் பலர் நினைக்கிறார்கள். அது தவறு. நத்தைக்கு முன்னால் மீசைபோல் நீட்டிக்கொண்டிருக்கும் இரு உறுப்புகளின் நுனியில் அதற்குக் கண்கள் இருக்கின்றன.

* * * *

நியூஸிலந்தில் சமீபத்தில் ஒரு பெட்டைக்கோழி முட்டை யிட்டதாம். அம் முட்டையினுள் விக்டோரியா ராணி காலத்திய ஷில்லிங் (1880-வருடம் செய்யப்பட்ட நாணயம்) இருந்ததாம்.

* * * *

தெற்கு கடலிலுள்ள ஒரு தீவில் வாழும் மக்கள், சமுத்திரத்தில் மூழ்கி, அதனடியில் இருக்கும் நல்ல தூய நீரை முகந்து வந்து குடிக்கிறார்களாம்.

* * * *

டேக்ஸாஸ் என்னுமிடத்தைச் சேர்ந்த அடால்ப் டாப்பர்வீன் என்பவர் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்வதன் வாயிலாகச் சித்திரங்களை எழுதுகிறாராம்.

* * * *

ஆண்டொன்றுக்கு இந்திய ஆலைகளில் 350 கோடி கஜம் துணி நெய்யப்படுகிறது.

* * * *

ஆண்டுதோறும் ஒவ்வொரு சத விகிதம் உலகில் ஜனத்தொகை அதிகமாகி வருகிறதாம்.

* * * *

இந்தியாவில் வருடத்துக்கு 10 லட்சம் மணங்கு சரிகை உற்பத்தி செய்யப்படுகிறதாம்.

* * * *

புதாபெஸ்டு என்னும் பிரதேசத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு நகரில் மக்கள் ஈயைக் கட்டாயம் கொல்லவேண்டுமென்று ஒரு சட்டமிருக்கிறதாம். எவரேனும் அவ்விதஞ் செய்யாவிடில், அவருக்கு அபராதம் விதிக்கப்படுமாம்.

ஆசிரியர் குறிப்புக்கள்

அஹிம்சா தர்மத்தின் வெற்றி

பலாத்கார உணர்ச்சியும், மிருக சக்தியுமே எங்கும் வியாபித்திருக்கும் இக் காலத்தில் உலகம் போற்றும் உத்தமராக இந்தியாவில் அவதரித்துள்ள மகாத்மா காந்தியடிகள் அன்பையும், அஹிம்சா தர்மத்தையும், உண்மையையும், எளிய வாழ்க்கையையும் உபதேசிக்கத் தொடங்கியதைக் கண்ட பலர் அவரைப் பரிகசித்ததுண்டு. எளிய வாழ்க்கை நாளடைவில் அமுலுக்கு வந்துகொண்டிருக்கிறது. இன்று ஆறு பெரிய மாகாணங்களில் பிரதம மந்திரிகளாக விளங்குபவர்கள் எளிய வாழ்க்கையை நடத்தி இதரர்களுக்கு வழி காட்டுகின்றனர். எளிய வாழ்க்கையினாலும் அன்பினாலும் மட்டுமே உலகில் சமாதானத்தையும், சந்துஷ்டியையும் ஏற்படுத்த முடியுமென்பதை உலக அறிஞர்கள் உணர்ந்து வருகின்றனர். நமது நாட்டில் அஹிம்சா தர்மம் நாளுக்குநாள் வெற்றிக்கொடியை நாட்டி வருகிறது. நமது தேச அரசியலில் மகாத்மா அஹிம்சா தர்மக் கொள்கையை புகுத்தியபோது சிலருக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. சில வாலிபர்கள் தங்கள் தீவிர தேசபக்தியின் காரணமாகப் பயங்கர இயக்கங்களில் ஈடுபட்டு அளவிலாக் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். மகாத்மாஜியும் மற்ற தலைவர்களும் அவர்களுடைய தேசபக்தியைப் பாராட்டிய போதிலும் அவர்களின் முறையை ஆதரிக்க முடியாமலும் அவர்களுக்காகப் பரிந்து பேசமுடியாமலும் கஷ்டப்படுகின்றனர். நமக்குச் சுயராஜ்யம் வேண்டியதுதான். அதற்காக எவ்வித தியாகமும் செய்யவும், அவசியமாயின் நமது இரத்தத்தைச் சிந்தவும் தயாராக இருக்கவேண்டியதுதான். ஆனால் பண்டைப் பெருமையும், உயரிய நாகரிகமும், நல்ல ஞானமும் படைத்த இந்தியர்களாகிய நாம் எவ்விதத்திலும் பிறரைத் துன்புறுத்துவதோ அல்லது பலாத்காரத்தில் ஈடுபடுவதோ கூடாது. இப்போது புரட்சி இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் இந்த உண்மையை அறிந்துவிட்டார்கள். காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் கூறியதேபோல் மகாத்மாஜியின் இயக்கங்களால் நாட்டில் புரட்சி இயக்கத்துக்கு வலிவு இல்லாமல் போய்விட்டது. இப்போது மகாத்மா அந்தமானிலுள்ள புரட்சி இயக்கக் கைதிகள் மூலமே இந்த உண்மையை மெய்ப்பித்துவிட்டார். அவர்களே புரட்சி இயக்கம் பிரயோசன மற்றதென்றும், தங்களுக்கெல்லாம் அஹிம்சையில் நம்பிக்கை ஏற்பட்டுவிட்டதாகவும் பகிரங்கமாக அதுவும் இந்தியா சர்க்கார் உள் நாட்டிலாகா மூலம் மகாத்மாவுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஆதலின் மகாத்மாவின் அஹிம்சா தர்மம் வெற்றி பெற்றுவிட்டது என்பதில் சந்தேகமில்லை. இனியும் அரசாங்கத்தார் சாக்குபோக்குகளைச் சொல்லிக்கொண்டு தீவிர அடக்குமுறைகளை அனுஷ்டியாமல் உடனே அந்தமான் கைதிகளை விடுதலை செய்து தேசத்தில் அமைதியை உண்டாக்குவதுடன் மகாத்மாவின் சாத்வீக இயக்கத்துக்கு ஆதரவளிப்பார்களென்றும் நம்புகிறோம்.

ராஜாஜியின் நீதி நிபுணத்துவம்

நமது தமிழ்நாட்டின் ஒப்பற்ற தலைவரான ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாசாரியார் ராஜ தந்திரத்திலும், அரசியல் சட்ட விவகாரங்களிலும், தேச பக்தியிலும் மிகச் சிறந்தவர் என்பது அனைவர்க்கும் தெரிந்த விஷயம். இத்

துறைகளில் இவ்வளவு சிறப்பு அவருக்கு இருந்தபோதிலும் நிதி சம்பந்தமாக அவருக்கு அதிக ஆற்றல் இருப்பதற்கு நியாயமில்லையென்றும், ஆதலின் நிதி மந்திரி பதவியையும் அவர் ஏற்றுக் கொண்டதால் அவ் விஷயத்தில் எவ்வாறு அவரது செயல்கள் இருக்குமோ என்றும் பலர் சந்தேகப்பட்டதுண்டு. ஆனால் அவர் சென்னை ஜனப்பிரதிநிதி சபை, சென்னை சட்டசபை ஆகிய இரு சபைகளிலும் செப்டம்பர் மாதம் முதல் தேதியன்று சமர்ப்பித்த 1937-38-ஆம் வருஷத்திய பட்ஜெட் அவரது நிதி நிபுணத்துவத்தையும் நன்றாக விளக்கிவிட்டது. சென்னை ஜனப்பிரதிநிதி சபையிலுள்ள ஸ்ரீமான்கள் முகம்மது ஷம்னாத், அப்பாதுரைப் பிள்ளை, வில்லியம் ரைட் முதலிய எதிர்கட்சிப் பிரமுகர்களே ராஜாஜியின் நிபுணத்துவத்தைப் பாராட்டியிருக்கிறார்களென்பது குறிப்பிடத்தக்கது. காங்கிரஸ் மந்திரி சபையாக இருப்பதாலேயே அதைப் பாராட்டிவிடவேண்டுமென்பது நமது கருத்தல்ல. தவறுகள் நிகழுமாயின் அதை எடுத்துக் காட்டித் திருத்துவது எப்படி நமது கடமையாக இருக்கிறதோ அதுபோலவே சமயத்தில் பாராட்டியும் உற்சாகத்தை உண்டாக்க வேண்டியதும் நமது கடமையாகும். ஸ்ரீ ராஜாஜி அவர்களே, இது பரிபூர்ணமான காங்கிரஸ் பட்ஜெட் அல்லவென்றும், இப்போது கிடைத்த அவகாசத்தில் இதற்குக் காங்கிரஸ் சாயல் மட்டுமே கொடுக்க முடிந்ததென்றும் தெளிவாக ஒப்புக் கொண்டிருப்பது அவரது பெருந் தன்மையையே காட்டுகின்றது. தீவிர காங்கிரஸ் வாதிகளுக்கு திருப்தி இல்லாமலிருக்கலாம். அவர்களும் அடுத்த வருஷப் பட்ஜெட்டைப் பார்த்த பிறகுதான் காங்கிரஸ்காரர்கள் பதவி ஏற்றதன் பலாபலனை அறிய முடியுமேயொழிய இந்த பட்ஜெட்டைக் கொண்டே ஒருவித முடிவுக்கு வருவது அவசரப்பட்ட செயலாகும். பட்ஜெட்டிலுள்ள குறைகளைத் தேடிக் கண்டுபிடித்து அதை வெளியாக்குவதே எதிர் கட்சியினரின் வேலையாக இருந்தும் அவர்களே அவ்வாறு செய்யாமல் பொதுவாகப் பாராட்டி விட்டதிலிருந்தே இந்த பட்ஜெட் திறமையானதென்பது தெளிவாகிறது. ஐரோப்பிய மெம்பர் ஸர். வில்லியம்ரைட், இவ்வளவு சீக்கிரத்தில் சிக்கலான நிதி விவகாரங்களைச் சமாளித்து திறமையான ஒரு பட்ஜெட்டைச் சமர்ப்பித்ததற்காகப் பிரதம மந்திரியைப் பாராட்டியது குறிப்பிடத் தக்கது. ஜனவரி மாதத்திலோ அல்லது ஏப்ரல் ஆரம்பத்திலோ இந்த பட்ஜெட்டைத் தயாரிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்குமானால் இது இன்னும் விசேஷ காங்கிரஸ் அம்சங்களை யுடையதாக இருக்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பட்ஜெட்டிலுள்ள விசேஷ அம்சங்கள்

காங்கிரஸ் மந்திரி சபையினர் தயாரித்த இந்த வரவு செலவு திட்டத்திலுள்ள விசேஷ அம்சங்களை மட்டும் கவனிப்போம். சென்ற வருஷத்தைவிட இவ்வருஷம் கல்வி, சுகாதாரம், தொழில், விவசாயம் முதலிய எல்லா செலவினங்களுக்கும் அதிகமான தொகை ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறது. விவசாயிகளின் கஷ்டங்களைக் குறைப்பதில் பெரிய மாறுதல்களை ஏற்படுத்த விருப்பங் கெண்டிருந்த போதிலும் இந்த பட்ஜெட்டிலேயே அவற்றைப் புகுத்த அவகாசமில்லாமல் போனதால் 75 லக்ஷம் ரூபாய் வரி வஜா அளிப்பதுடன் கடன் சுமையை நிவர்த்திப்பதற்காக விவசாயிகளுக்

குக் கடன் கொடுக்க 30 லட்சம் ரூபாயும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கொள்கையாகிய மதுவிலக்கை அமுலில் கொண்டுவரும் பொருட்டு முதற்படியாக சேலம் ஜில்லாவில் மதுபான வியாபாரத்தை ஒழித்து விட்டதால் 14 லக்ஷம் நஷ்டம் ஏற்படுவது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. சிறையிலுள்ள கைதிகளுக்குத் தினசரி காலை மோராவது கொடுக்க ஏற்பாடு செய்ததால் முக்கால் லக்ஷம் செலவாகிறது. இது மட்டுமன்றி கையால் நூற்கும் தொழில் அபிவிருத்தியடைந்து ஏழை விவசாயிகள் சௌக்ய மடைவதற்காக அத்தொழில் முன்னேற்றத்துக்கென இரண்டு லட்சம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. கைத்தறிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு கைத்தறி ஆடைகளல்லாத இதர ஜவுளி வர்த்தகர்களுக்கு உபாயமாக லைசென்ஸ் கட்டணம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கிராம ஜனங்களின் சௌகரியத்தைக் கவனிப்பது தான் காங்கிரசின் லக்ஷியமாதலால், வாழ்க்கைக்கு எல்லாவற்றையும்விட முக்கியமாகத் தேவையாக இருப்பது சுத்த ஜலமாதலாலும் ஜல சப்ளைக்காகவும், சாக்கடைத் திட்டம்போன்ற சுகாதார முறைகளுக்காகவும் பணம் ஒதுக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. மற்றும் மின்சார திட்டம்போன்ற வருமானத்தை யளிக்கக் கூடியதும், பலருக்கும் தொழிலை யளிக்கக்கூடியதுமான தொழில்களை ஆரம்பிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் விட முக்கியமாக நிர்வாகச் செலவைக் குறைக்கும் உத்தேசத்துடன் உத்தியோகஸ்தர்களுக்கும் அதிக கஷ்டத்தைத் தராத வகையில் படித்தரமான முறையில் சம்பள வெட்டுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் அடுத்த வருஷத்தில் இன்னும் அதிகமான சீர்திருத்தங்கள் செய்ய வழியாகிறது. இவ்வளவு விசேஷ அம்சங்களுடன் கூடியதாக இந்த பட்ஜெட் இருந்தபோதிலும் கனம் பிரதம மந்திரி அவர்களே ஒப்புக்கொள்வது போல இது பூர்ணமான காங்கிரஸ் பட்ஜட் ஆகாது என்பது மட்டும் உண்மையே. அடுத்த வருஷத்தில் கனம். ராஜாஜி பரிபூரணமான மாறுதலை உண்டாக்குவார் என்று நம்புகிறோம். அடுத்த ஆண்டும் சரியான மாறுதல்களை உண்டுபண்ண முடியவில்லையென்றால் காங்கிரஸ பதவி ஏற்றதால் பலனுண்டா என்று கவனிக்க வேண்டியதுதான். ஆகவே அதுவரையில் மகா ஜனங்களும், காங்கிரஸ் தீவிர வாதிகளும் பொறுமையுடன் இருக்க வேண்டுமென்பதே எமது அபிப்பிராயம்.

விவசாயிகள் கடனும் காங்கிரஸ் மந்திரிகளும்

இந்தியா விவசாய நாடு என்பது அனைவர்க்கும் தெரிந்த விஷயம். ஆகவே விவசாயிகளான கிராமவாசிகள் தான் இந்தியாவின் முதுகெலும்பு போல் இருக்கின்றனர். அவர்கள் சபீக்ஷமாகவும் சௌகரியமாகவும் உற்சாகமாகவும் இருந்தால் தான் பொதுவாகத் தேசம் சுபீக்ஷமடைய முடியும். இக் காலத்திலோ கிராமவாசிகளின் துயரம் எல்லையற்றது. அவர்களுடைய துயரங்களனைத்திற்கும் அடிப்படையாக இருப்பது தாங்க முடியாத கடன் சுமையே யாகும். 'கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்பது போலச் சமாளிக்க முடியாத கடன் தொல்லையால் அவதிப்படும் கிராமவாசிகள் வாழ்க்கையில் உற்சாகமற்றவர்களாய் இர

வில் தூக்கமுமின்றி அதே கவலையுடன் வாடி வதங்குகின்றனர். விவசாயிகளின் துயரத்தைப்பற்றி நமது காங்கிரஸ் மந்திரிகளில் ஒருவரான கனம் எஸ். ராமநாதன் அவர்கள் சென்னை பொருளாதார சாஸ்திரமாணவர்கள் கூட்டத்தில் உள்ளபடி கேட்போர் மனமும் கரையும்படி வர்ணித்திருக்கிறார். விவசாயிகள் நிலைமை நாயினும் கடையானது என்று கனம் மந்திரி கூறுவது உண்மையே யாகும். இத்தகைய அவதியிலுள்ள கிராமவாசிகளை வைத்துக்கொண்டு கிராம புனருத்தாரணமென்றும், விவசாயத்தில் நூதன முறைகளை அனுஷ்டித்தல் என்றும் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. மகாத்மாஜியின் கிராம புனருத்தாரண இயக்கத்தாலும், குடிசைத் தொழில்களுக்கு மதிப்பு ஏற்படுவதாலும் விவசாயிகளின் வருமானம் ஓரளவு உயருமென்பது வாஸ்தவமே யாயினும், கடன் பட்ட அவர்களுடைய நெஞ்சம் எப்போதும் குழப்பத்தில் தானே இருக்கும்; ஆதலின் கடன் தொல்லையை ஒழிப்பதற்கு முதலில் வ்ழி காணவேண்டும் என்று மந்திரி கூறுவது கவனிக்கத் தக்கதாகும். எந்த முறையை அனுஷ்டிப்பது என்பதில் அபிப்பிராயபேதம் ஏற்படலாம். கனம். ராமநாதன் தமது சமதர்ம மனப்பான்மைக்கேற்ப விவசாயிகளின் கடனை அடியோடு தள்ளிக் கொடுத்து விடுவது நலம் என்கிறார். ஆயினும் அதில் என்ன சிரம மிருக்குமோ என்பதை உணர்ந்தே சர்க்காரே விவசாயிகளின் கடனை ஏற்றுக்கொண்டு அவர்களை அத் தொல்லையினின்றும் விலக்கிப் பிறகு சர்க்கார் அவர்களிட மிருந்து சிறிது சிறிதாகப் பணம் வசூலித்துக் கொள்ளவேண்டும் என்கிறார். அவர் பிரசங்கம் செய்த கூட்டத்துக்குத் தலைமை வகித்த பொருளாதார அறிஞரான டாக்டர். தாமஸ், மேற்கூறிய இரு வழிகளிலும் சிரம மிருக்கிறதென்றும் நில அடமான பாங்கிகள், கடன் சமரச போர்டுகள் ஆகியவற்றை ஏற்படுத்துவது, விவசாயிகளுக்கு எளிய வட்டிக்குக் கடன் கொடுக்கக் கூட்டுறவு சங்கங்கள் நியமிப்பது முதலிய பல வேலைகளை ஒன்றாகச் செய்து கடன் நிவாரணத்துக்கு .வழி செய்யலாம் என்கிறார். எனினும் டாக்டர் தாமஸ் காங்கிரசைப் போன்ற செல்வாக்கும், ஏழைகளிடம் அனுதாபமும், தீவிரமான மனோபாவமும் உடைய மந்திரி சபையினரே இத்தகைய தீவிர காரியத்தில் இயங்க முடியுமென்றும் கூறினார். ஆதலின் சென்னை காங்கிரஸ் மந்திரி சபையினர் முறையை அனுஷ்டித்து விரைவில் விவசாயிகளைக் கடன் தொல்லையினின்றும் விடுவிக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

சர். விசுவேசுவரய்யாவின் யோசனை

இப்போது மாகாண சுய ஆட்சி அளிக்கப் பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டாலும் அது சரியான சுய ஆட்சிதானா என்பதிலேயே சந்தேக மிருக்கிறது. அதைப் பரீட்சிக்கவே இப்போது காங்கிரஸ்காரர்கள் அதிகாரம் வகித்திருக்கிறார்கள். எனினும் மந்திரிகளின் கையில் சில அதிகாரங்கள் இருக்கின்றன என்பது உண்மையே. ஆயினும் மத்ய சர்க்காரும் பொது ஜன ஆதிக்கத்திற் குட்படும் வரையில் தேசத்தின் தீவிரமான பொருளாதார மாறுதல்களை ஏற்படுத்த முடியாது என்பது வாஸ்தவம். இருந்தாலும் மாகாண சர்க்கார்கள் இப்போது முதலே பொருளாதார திட்டங்களை வகுத்துக்கொண்டு வேலை செய்ய வேண்டு மென்று சர். எம். விசுவேசுவரய்யா கூறுவதை எவரும் மறுக்க முடியாது. அவர் மைசூர் திவானாக இருந்தவ ரென்பதும், பொருளாதார சாஸ்திரத்தில் தக்க ஆராய்ச்சியும் அறிவும் உடையவர் எனபதும் அனைவருக்கும் தெரிந்த விஷயமே. அவர் சமீபத்தில் புனாவில் பம்பாய் சர்க்கார் பிரதம மந்திரி ஸ்ரீ. கெர் தலைமையில் கூடிய ஒரு கூட்டத்தில் தெரிவித்துள்ள யோசனைகளை ஒவ்வொரு மாகாண சர்க்காரும் கவனிக்க வேண்டியது அவசியமாகும். அந்த அறிஞர், மாகாணங்கள் 5 வருஷத்தில் நிறைவேற்றக் கூடிய பொருளாதார திட்டத்துடன் வேலை செய்ய வேண்டு மென்றும், பெரிய கைத்தொழில்களை ஆரம்பித்து தேச மெங்கும் கைத்தொழில் அபிவிருத்தி யுண்டாகும்படி செய்ய வேண்டு மென்றும், குடிசைத் தொழில்களையும் ஆதரிக்க வேண்டு மென்றும், பொது ஜனங்களுக்குக் கல்வி போதித்து எல்லோருக்கும் எழுதப் படிக்கத் தெரியுமாறு செய்ய வேண்டு மென்றும் தெரிவித்திருக்கிறார். இந்த யோசனைகளனைத்தும் முக்கியமாகக் காங்கிரஸ் மந்திரி சபையினரால் கவனிக்க வேண்டியவைகளே யாகும். நமது மாகாண பிரதம மந்திரி கனம். ராஜாஜி அவர்கள் அடுத்த வருஷ பட்ஜெட் தயாரிப்பதற்குள் சர். விசுவேசுவரய்யாவின் இந்த யோசனைகளையும் கவனித்து அவற்றை அடுத்த வருஷம் முதலேனும் அமுலுக்குக் கொண்டுவர முயற்சிப்பார் என்று நம்புகிறோம்.

இங்கிலாந்து மக்களின் கடமை

இங்கிலாந்து மக்களின் பிரதிநிதி சபையாக இருப்பது தான் பார்லிமெண்டு. அந்த சபைதான் இந்தியாவுக்குப் புதிய அரசியலை வழங்கியிருக்கிறது. அந்த அரசியல் நமக்குத் திருப்தியளிப்பதாக இல்லை யென்றாலும் பிரிட்டிஷ் சர்க்கார் நிர்வாகிகள் இந்த அரசியல் மூலம் இந்தியாவுக்கு மாகாண சுய ஆட்சி அளித்திருப்பதாகவும், மாகாணங்களில் மந்திரிகளே சட்டசபைக்கு ஜவாப்தாரிகளாக இருந்து மாகாணத்தின் நலனை நன்கு கவனிக்கலா மென்றும் கூறுகிறார்கள். இதில் காங்கிரஸ் தலைவர்களுக்கு நம்பிக்கை இல்லாமல் இருந்ததால் தான் தாங்கள் பதவி ஏற்பதற்குச் சில நிபந்தனைகளைக் கேட்டார்கள். அந்த நிபந்தனை நேர்முகமாகக் கொடுக்கப்படா விட்டாலும் மந்திரிகளின் தினசரி வேலைகளில் கவர்னர்கள் தலையிடுவது சாமான்யமாக இராது என்று காங்கிரஸ்காரர்களுக்கு நம்பிக்கை உண்டாகும்படி இந்தியா மந்திரியும் வைசிராயும் சர்க்கார் சார்பாக அறிக்கைகள் வெளியிட்டதால், காங்கிரஸ்காரர்கள் பதவி ஏற்றுப் பிரிட்டிஷ் சர்க்கார் மாகாண சுய ஆட்சியை அளித்ததாகக் கூறுவது உண்மைதானா என்பதைப் பரீட்சை செய்து வருகின்றனர். இந்த சமயத்தில் பிரிட்டிஷாரின் கடமை யொன்று மாகாண சர்க்கார்கள் சார்பாக இருக்கிறது. அதை அவர்கள் செய்ய வில்லை யென்றால் மற்றப் பேச்சுக ளெல்லாம் வீண் பேச்சு தான். அந்தக் கடமை என்ன என்பதையும் சென்னை சர்க்கார் பிரதம மந்திரி கனம் ராஜகோபாலாசாரியார் லண்டனில் வெளியாகும் 'டெய்லி ஹெரால்ட்' என்னும் பத்திரிகைக்கு 'அனுப்பியுள்ள செய்தியின் மூலம் ஞாபகப்படுத்தி யிருக்கிறார். அவர் மாகாண சுய ஆட்சி பெற்றதாகக் கூறப்படும் ஒரு மாகாண அரசியலின் தலைவராக இருப்பதால் மாகாண வாசிகளின் நன்மைகளை உத்தேசித்துச் சில காரியங்களைச் செய்ய விரும்பு

கிறார். அவ்வாறு செய்வதற்குப் பணம் தேவை. அதிக வரிகளையோ விதிக்க முடியாது. இப்போதுள்ள வரிச் சுமையையே தாங்க முடியாமல் விவசாயிகள் அவஸ்தைப் படுகிறார்கள். ஆதலால் அதிக வரிகளை விதிக்காமல் பணத்துக்கு வகை செய்யவேண்டியிருக்கின்றது. இதற்கு வழி நிர்வாகச் செலவைக் குறைக்க வேண்டியது அவசியம். கனம். ராஜாஜி இங்கிலாந்துக்கு அனுப்பியுள்ள செய்தியில், ராணுவச் செலவில் பெரும் பாகத்தைக் குறைத்து, மாகாண கவர்ன்மெண்டுகள் புதிய மாறுதலை உண்டு பண்ண அந்தப் பணத்தை மத்ய கவர்ன்மெண்டு அவற்றிற்கு அளிக்குமாறு இங்கிலாந்து செய்தாலல்லது மாகாண காங்கிரஸ் மந்திரிகளுக்கு இங்கிலாந்து நேர்மையான இடமளித்ததாகக் கூறுவதற்கில்லை என்று தெரிவித்துள்ளார். 'மான்செஸ்டர் கார்டியன்' பத்திரிகையும் முன்னரே ராணுவச் செலவைக் குறைக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியிருக்கிறது. இங்கிலாந்து வாசிகள் ராஜாஜியின் வேண்டுகோளின் உண்மையை உணர்ந்து தக்கபடி நடந்து கொள்வார்களென்று நம்புகிறோம்.

மேல் நாடும் கீழ் நாடும்

"மேல் நாடுகள் மேல் நாடுகள்தான்; கீழ்நாடுகள் கீழ்நாடுகள்தான்; இவை இரண்டும் ஒன்றாகச் சேரப்போவதில்லை" என்று சிலர் சாதாரணமாகச் சொல்வது வழக்கம். ஒரு காலத்தில் உலக நிலைமை அப்படித்தான் இருந்தது. மேல் நாடுகளும் கீழ் நாடுகளும் எந்தத் துறையிலும் சேர்வது கஷ்டம் என்று கருதவேண்டியிருந்தது. ஆனால், இன்று உலக நிலையே மாறி இருக்கிறது. உலகத்தில் புதிய மனோபாவம் தோன்றி வருகிறது. இவ்விரு நாடுகளும் ஒன்று சேர்ந்து வருகின்றன. இங்கிலாந்து ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலையில் கீழ்நாட்டுத் தத்துவ போதகாசிரியராகவுள்ள அறிஞர். ராதாகிருஷ்ணன் இந்த அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார். ஆசியா தேசத்து நாகரிகம் மானிட சமூக உணர்ச்சியில் ஊடுருவி வருகிறதாம். ஆசியாவின் முக்கிய தேசங்களாகிய இந்தியாவும் சீனாவும் பிராபல்யமாக இல்லாவிட்டாலும் மற்ற நாடுகள் இவற்றைப்பற்றி அறிய ஆசைபடும்படியான விசேஷ சக்தியையும், வாழ்க்கை ரகசியங்களையும் இவை பெற்றிருப்பதாக அந்த அறிஞர் கூறுகிறார். மேலும் மானிட சமூகத்தின் கதிமோக்ஷமே மேல் நாடுகள் இந்தியாவினிடமிருந்து அஹிம்சை, அன்பு, சகிப்புத்தன்மை, பொறுமை முதலியவற்றைக் கற்றுக் கொள்வதிலேயே இருக்கிறதேயொழிய இந்தியா மேனாடுகளிலிருந்து துவேஷம், பலாத்காரம் முதலியவற்றைக் கற்பதில் இல்லை என்றும் உலகமே அறிந்து வருகிறது. இப்போது கீழ்நாடுகளும் மேல்நாடுகளும் பழைய நிலைமையினின்றும் மாறி வருவதால் பரஸ்பரம் இரண்டு மானிட சமூகத்துக்குத் துணைபுரியும் ஆர்வத்தில் அவற்றினிடையே நெருங்கிய சம்பந்தம் ஏற்படுவதால் இவ்விரு நாடுகளும் விரைவில் ஒன்று சேரும் என்பது நிச்சயம். எனினும் உலகத்துக்கே புதிய மனோபாவத்தை அளிக்கக் கூடிய விசேஷ சக்தியைத் தன்னிடம் அடக்கிக் கொண்டுள்ள இந்தியா உண்மையில் உலகத்துக்கு இன்னும் சிறப்பான விதத்தில் சேவை செய்ய வேண்டுமானால், இந்தியா சுதந்தரம் பெற்ற நாடாக இருக்கவேண்டும். புதிய மனோபாவம் பெற்றுவரும் மேனாடுகள் இந்திய சுதந்தரத்துக்கும் துணையாக இருக்குமென்று நம்புகிறோம்.

தொடர் கதை.

மாயா விரோதி

(ஸி. எஸ். இராமன், எம். ஏ., எல். டி.)
(Rights Reserved)

(159-வது பக்கத் தொடர்ச்சி.)

மாயாவிரோதியை நேரில் காணவேண்டும்; அவனோடு பேச வேண்டும் எனும் எண்ணத்தை அவர்கள் உறுதியாகக் கொண்டிருந்தார்கள். அதை அறிந்த கனகன் கப்பல் அதிகாரிகளைத் தனது புதிய அறையில்—காப்டனுடைய அறையில்—பார்க்க விரும்புவதாகச் செய்தி சொல்லி அனுப்பித்தான்.

கப்பல் அதிகாரிகள் காலஹரணம் செய்யாமல் கப்பித்தானாக வேலை பார்க்கும் கனகனுடைய அறைக்குச் சென்றார்கள். அவர்களை கலக்க மற்ற முகத்தோடு கனகன் வரவேற்று, ஆசனங்களில் அமர்ந்து கொள்ளுமாறு செய்து, பல ஆபீஸ் கடிதங்களைக் கொஞ்ச நேரம் படித்தான். அதைக் கண்ட ஏனைய கப்பலதிகாரிகளுக்கு கொஞ்சம் நம்பிக்கை ஏற்பட்டது. மாயாவிரோதி சௌக்கியமாக இருப்பதனால் தான் கனகன் கவலையற்றவனாகக் காணப்படுவதாக அவர்கள் நினைத்துக் கொண்டவர்களாய், சிறிது தைரியம் அடைந்தனர். உண்மை வேறு விதம். கனகன் மிக்க கவலையும் களைப்பும் கொண்டிருந்தாலும் அவை அவர்களுக்குப் புலனாகக் கூடாதென்று கருதியே முகத்தில் நம்பிக்கை கொண்டவன் போல் தோன்றினான்.

சிறிது நேரமானதும் கனகன் அவர்களுடைய காரியங்களைப் பற்றியும், கைதிகளைப் பற்றியும் சகஜமாகப் பேசுவது போல் பேசியிருந்துவிட்டு, அவர்கள் முகங்களைக் கூர்ந்து கவனித்தான்.

மாயாவிரோதியைப் பற்றி ஒரு வார்த்தையும் பேசாததால் அவர்கள் ஆச்சரியமடைந்தனர். மேலும் அதைப் பற்றிக் கனகன் பேசுவான் என்று எண்ணியே அங்கு வந்தனர்.

"நீங்கள் எல்லோரும் போகலாம்," என்று "ஆக்டிங்" காப்டன் கனகன் கூறியதும், அவர்களுடைய ஆச்சரியம் சிகரத்தைத் தொடுவதாயிருந்தது.

ஆச்சரியமும் கவலையும் கொண்டவர்களாய் அவர்கள் தங்களுடைய ஆசனங்களை விட்டும் எழுந்திருக்கவில்லை.

"தற்காலிகத் தலைவரே, நாம் இன்னும் இரண்டொரு தினங்களுள் தூத்துக்குடியருகே செல்வோம் அன்றோ?" என்று ஸூபரின்டெண்ட் விநாயகமூர்த்தி மரியாதையுடனே கனகனைக் கேட்டான்.

"ஆம், அதைப்பற்றி என்ன?" என்று கனகன் வினவினான்.

"அதற்குள் முக்கியமான விஷயங்களைப் பற்றி நாம் தீர்மானங்களைச் செய்ய வேண்டும்."

"உம்............பிறகு ?"

"மாயாவிரோதி யில்லாமல் நாம் அவற்றைத் தீர்மானிக்க முடியாது. தலைவரே, நாங்கள் எல்லோரும் மாயாவிரோதியிடம் வைத்திருக்கும் அன்பும் விஸ்வாசமும் நீங்கள் அறியாததன்று. அவருக்கு உடம்பு என்ன? நாங்கள் மாயாவிரோதியைப் பார்க்க வேண்டும். உண்மை நிலைமை என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டும்," என்று விநாயகமூர்த்தி விநயத்தோடு உரைத்தான்.

"நாங்கள் மாயாவியைப் பார்க்க வேண்டும்! பார்க்க வேண்டும்!" என்று ஏனையோர் ஆவலோடும் உறுதியோடும் சொன்னார்கள்.

"அது முடியாத காரியம்," என்று கனகன் பதில் கொடுத்தான்.

"நீங்கள் சொல்வதை நாங்கள் ஒருவாறு ஏற்றுக்கொள்ளுகிறோம். எங்களுள் ஒருவர் மாயாவியை நேரில் கண்டு பேசிவர வேண்டும். நாங்கள் சௌடப்பனை மாயாவியிடம் போய், ஐந்து நிமிஷங்கள் வரையில் பேசி வர விரும்புகிறோம். நாங்கள் வேறு எதையும் கேட்பதில்லை. சௌடப்பன் பார்த்துவிட்டு வந்தால் அது எங்களது புண்பட்ட மனதிற்கு மிக்க ஆறுதலைக் கொடுக்கும்," என்று புத்தரைப் போல் காணப்பட்ட விஸ்வநாதன் அழுத்தந் திருத்தமாகப் பேசினான்.

"ஓ! இது முடியாது! நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்," என்று கப்பித்தான் பதவியைத் தாங்கிய கனகன் பிடிவாதமாக மறுமொழி தந்தான்.

"அப்படியானால் நாங்கள் சிறைச்சாலைக் கதவுக்கு அருகே நின்று பேசுவோம்," என்று அவர்கள் சொல்லினர்.

"மாயாவிரோதி இப்பொழுது யாரோடும் பேச மாட்டார்," என்றான் கனகன்.

"ஏன்?" என்று கேட்டான் விஸ்வநாதன்.

"ஏனா? அவரால் பேச முடியாது."

"அப்படியானால் மாயாவிரோதி ஏன் ஜெமீன்தாருடைய அறையில் இருக்கிறார் என்பதை எழுதட்டும். அதைப் படித்த பின் நாங்கள் சந்தோஷமடைவோம்," என்றான் விஸ்வநாதன்.

"மாயாவிரோதி எழுதவும் முடியாது," என்று கனகன் தயை தாட்சண்ய மின்றிக் கூறினான்.

அதைக் கேட்டதும் விஸ்வநாதனுக்கும் ஏனைய சகாக்களுக்கும் அளவிட முடியாத சினம் பொங்கி யெழுந்தது. விஸ்வநாதன் பயபக்தி மரியாதையை விடுத்து, முனிவு மிக்கு, கோபக் குறி பறக்க, கனகனை நோக்கி, "கனகா! என்ன உளறுகிறாய்? நீ எங்களுக்கு சமாதானம் சொன்னாலொழிய இவ்விடத்தை விட்டுச் செல்ல முடியாது. மாயாவிரோதியை நீ என்ன செய்தாய்? சொல்," என்றான்.

"நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். நான் ஒன்றும் சொல்லமாட்டேன்," என்று பிடிவாதம் பிடித்த கனகன் பயமின்றிக் கூறினான்.

"நாங்கள் சிறைச்சாலை அறையினுள் பலாத்காரமாகப் பிரவேசிப்போம்," என்று மற்ற கைதியதிகாரிகள் ஆக்ரோஷத்தோடு கூவினார்கள்.

"உங்களுடைய பிரியம். பின்பு ஜெமீந்தாருடைய பணத்திற்கு நீங்கள் உரியவர்கள் ஆக முடியாது. இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்," என்று பணத்தைப் பற்றி நினைவூட்டினான் கனகன்.

"ஓ! லட்ச ரூபாய்கள்! அதை நினைத்தா மாயாவிரோதி இராஜமன்னாரிடம் இருக்கிறார்!" என்று சாந்த மடைந்தார்கள் ஏனைய மனிதர்கள்.

"வேறு என்னவென்று நினைத்துக் கொண்டீர்கள்? ஜெமீந்தார் பணம் கொடுப்பதைப் பற்றித் தான் மாயாவிரோதி அங்கு இருக்கிறார். காரியம் முடிந்த பின் நீங்கள் அவரைக் கண்டு தாராளமாகப் பேசிக் கொள்ளலாம். கனவான்களே, நீங்கள் உங்களுடைய காரியங்களைக் கவனிக்கப் போய் வாருங்கள்," என்றான் கனகன்.

அவர்கள் சிறிது ஆச்சரியமும் சந்தேகமும் கலந்த மனதோடு கப்பித்தானுடைய அறையை விட்டு வெளியே சென்றார்கள். சௌடப்பன் ஒன்றும் பேசவில்லை. அவர்கள் உண்மை எப்படி இருக்கும் என்று கேட்டதற்கு அவன் தீர்க்க ஆலோசனை செய்ததன் பயனாக ஒரு கருத்தைக் கொண்டிருப்பதாகச் சொன்னான்.

மாயாவிரோதிக்கு பேசவும் எழுதவும் முடியாது என்று கனகன் கூறியதை அவர்கள் சிந்தித்துப் பார்த்தார்கள். கனகன் ஏதாவது சூழ்ச்சி செய்கிறானோ என்று ஐயப்பட்டார்கள்.

மறுநாள் கனகனும் காந்திமதிச் சீமாட்டியும் ஜெமீந்தாருடைய அறையினுள் இருந்த பொழுது சாகுந் தருவாயிலிருக்கும் ஒரு நாய் எப்படி ஊளையிடுமோ அப்படியே கோரமான, சகிக்க முடியாத ஊளை அந்த அறையிலிருந்தும் எழுந்து, சௌடப்பன் முதலானவர்களை அஞ்சுமாறு செய்தது. கப்பலதிகாரிகளுள் சிலரும் மற்றும் சில சாதாரணக் கைதிகளும் அந்த அறையைச் சூழ்ந்து நின்றார்கள். கொடிய ஊளைச் சப்தம் மறுபடியும் கோரமாக எழுந்து அவர்கள் யாவருக்கும் சொல்லொணாத வகையில் திகிலையும் பயத்தையும் கொடுத்து விட்டது. பன்முறை ஊளைகள் வந்த பொழுது துன்பத்தில் சகிக்க முடியாத வேதனையை யநுபவித்த மனிதனைப் போல் ஜெமீந்தார் இராஜமன்னாருடைய பேச்சுக்குரல் அவர்களுக்கு கேட்டது. ஆனால் அப்பிரபு என்ன பேசுகிறார் என்பது மட்டும் கேட்கவில்லை.

ஊளைகள் பலப்பட்டு பின்பு கூவுதல்கள் ஆயின; பின் கோபமுற்ற ஊளைகள்; கடைசியில் அழுகை. திடீரென்று அவை நின்று விட்டன. அவற்றையெல்லாம் நெஞ்சுபதற, துடிக்க, வெடிக்க கேட்டுக்கொண்டிருந்த கைதிகள் கண்கள் பயத்தைக் காண்பிக்க, கால்மணி நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தனர். பின்பு ஒரு சப்தமும் கேளாமல் போனதால் கைதிகள் கூட்டம் கரைந்து போயிற்று. சௌடப்பனுக்கு மட்டும் துக்கம் சொல்லி முடியாது. தனது எஜமான் நண்பன் ஆன மாயாவிரோ

திக்கு என்ன நேரிட்டது என்பதை அறிய வழிவகையின்றி மனம் பதறி, ஆவி சோர்ந்து, அங்கேயே உட்கார்ந்து விட்டான்.

மறுநாள் தூத்துக்குடி துறைமுகத்தை "ஜலதூதன்" அணுகிக்கொண்டிருந்தது. கப்பல் துறைமுகத்தினுள் வெளியிலேயே, சௌடப்பன் பொருட்டு நிறுத்தப் படுவதாக சௌடப்பனுக்கு அறிவிக்கப் பட்டது. அப்பொழுது கனகன் அவனை அணுகினான்.

"சௌடி, கப்பல் இன்னும் சில மணிகளுள் துறைமுகத்திற்கு வெளியே உன் பொருட்டு நிற்கப் போகிறது. நீ இங்கே இனிமேல் இப்படி உட்காரலாகாது. ஜெமீந்தாருடைய கடிதங்களை யெடுத்துக் கொண்டு நமது படகிற்குப் போய் ஏறிக் கொள். நீ செய்ய வேண்டிய காரியங்களை மாயாவிரோதியே தமது கையினால் எழுதியிருக்கிறார்," என்றான்.

மாயாவிரோதியைப் பார்த்தாலொழிய தான் போவதில்லை யென்று சௌடப்பன் கனகனிடம் சொல்லி விட்டான். சிறிது நேரமானதும் கனகன் அங்கே வந்து "நீ மாயாவிரோதியைக் காணலாம்," என்றான்.

அச் செய்தியைக் கேட்டதும் சௌடப்பனும் ஏனைய மனிதர்களும் மிக்க சந்தோஷ மடைந்தார்கள்.

சந்தோஷ சாகரத்தில் மூழ்கிய சௌடப்பன் மாயாவிரோதியைப் பார்க்கச் சென்ற பொழுது விளக்கு வைக்கும் நேரம்; ஜெமீந்தாருடைய சிறையறையினுள் சென்றதும் அங்கு விளக்கு மிகவும் மங்கலாக எரிந்து கொண்டிருப்பதைக் கண்டான். அறை முழுவதும் இருளாகவே யிருந்தது என்றே அவன் நினைத்துக் கொண்டான். விளக்கு ஏன் பிரகாசமான நிலைமையில் வைக்கப் படவில்லை என்று தனக்குள் எண்ணினான். அவனுக்கு அறைக்குள் ஏதும் இருப்பதாக அவன் கண்ணுக்குத் தெரியவில்லை. நான் கைந்து விநாடிகட்குப் பின் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிய வாரம்பித்தது. சீமாட்டி ஒரு புறம் உட்கார்ந்து கொண்டிருந்தாள். சிறிது தூரத்தில் இரண்டு கட்டில்களின் மீது இரண்டு மனிதர்கள் படுத்துக் கொண்டிருப்பதை அவன் கண்டான். அவ் விருவருக்கும் சக்தி என்பதே இல்லாமல் சோர்ந்து கிடப்பதாக சௌடப்பன் நினைத்தான். யார் மாயாவிரோதி, யார் ஜெமீந்தார் என்பதே அவனுக்கு கண்டு பிடிக்கக் கூடவில்லை.

அப்பொழுது மாயாவிரோதியின் குரல் கேட்டது. அதை யறிந்து கொண்டதும் அவனுடைய சந்தேகம் ஓடிப்போய் விட்டது.

"இங்கே உட்கார், சௌடி." சௌடப்பன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். மாயாவிரோதி மெதுவாகப் பேசினான்.

"மாயாவிரோதரே!" என்று காதோடு காது வைத்து ஈனஸ்வரத்தில் சௌடப்பன் கூப்பிட்டான். விசனம் அவனுடைய தொண்டையை யடைத்துக் கொண்டது.

"நீ போகுமுன் என்னைப் பார்க்க வேண்டும் என்று ஆசை கொண்டாயா?" என்று முத்தய்ய செட்டி கேட்டான்.

"ஆம்............நீங்கள் சௌக்கியமா?............இப்படியும் கஷ்டப் படுவீரா?" என்று சௌடப்பன் வருத்தத்தோடு கேட்டான். மேலும் அவனைப் பார்த்து, "உமது கையைப் பார்க்கட்டுமா?" என்று கேட்டான்.

"கூடாது. மாயாவிரோதியின் கரத்தை நீ தொடக் கூடாது. நீ உட்கார்ந்திருக்கும் இடத்திலேயே இரு. நகராதே," என்று கனகன் உத்தரவிட்டான்.

"ஆம். கனகன் சொல்வது சரி. நீ என்னைத் தொடலாகாது. நான் கொடிய தொத்து வியாதியொன்றால் பீடிக்கப்பட்டு வருந்துகிறேன் என்பதை நீ அறிந்திருக்கலாகும்," என்று முத்தய்ய செட்டி ஈனக்குரலில் பேசினான்.

"நான் உம்மைச் சரியாகப் பார்க்கக் கூடவில்லை. மிக்க இருட்டாக இருககிறது. பிரகாசமான மின்சார-தீபம் போட்டால் என்ன? நான் உமது முகத்தைப் பார்க்க வேண்டும். நீங்கள் எப்படி இந்த வியாதியை வைத்துக் கொண்டு சமாளிக்கிறீர்கள் என்பதைப் பற்றி நான் தெரிந்து கொள்ள ஆவல் கொண்டிருக்கிறேன்."

"உனக்காக இப்பொழுது வெளிச்சம் பிரகாசமாகப் போடமுடியாது. நான் ஒப்பமாட்டேன். மேலும் நமது நண்பர் முத்தய்ய செட்டியாருடைய கண்ணுக்கு வெளிச்சமே கூடாது," என்று கனகன் கடுகடுத்த முகத்துடன் மொழிந்தான்.

"ஐயோ, கடவுளே! உங்களுக்குச் சுயாதீனம் இல்லையா?" என்று பரிதபித்துப் பகன்றான் சௌடப்பன். 'சௌடி, நான் எல்லா விஷயங்களையும் பின்பு சொல்லுகிறேன். இப்போது நடக்கவேண்டிய காரியத்தை நீ நிறைவேற்றி வைக்க வேண்டும். கனகன் சொல்லுகிறபடி நீ நட. ஐந்து நிமிஷங்கட்கு மேல் நீ இங்கே இருக்கமுடியாது" என்றான் மாயாவிரோதி,

"ஐயோ! உமது குரல் எத்தனை பலஹீனமாக ஆகிவிட்டது! உமது குரல் என்று அறிவதுகூட கஷ்டமாக இருக்கிறது" என்று வருத்தத்தோடு சௌடப்பன் சொன்னான்.

"இவருக்கு மிக்க பலஹீனம் இருப்பதால் நீ இவருக்கு பிரயாசை உண்டாக்க கூடாது. சீக்கிரம் பேசிவிடு" என கனகன் கட்டளை யிட்டான்.

"சௌடி, நமது நண்பர்களிடம் சென்று கனகன் என்னை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டிருப்பதாகச் சொல்லவேண்டும். என் உயிரைக் காப்பாற்றிவிட்டதாகச் சொல்லவும். மேலும் நான் கனகனைக் கப்பித்தானாக இப்பொழுது நியமித்திருப்பதால் எல்லோரும் இவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்பதையும் சொல்லு. கனகன் என்னைக் காப்பாற்றிவிட்டதால் என் பங்கு இவரை யடையவேண்டும்" என்று மிகவும் துர்பலமான குரலில் மாயா விரோதி மெதுவாகப் பேசினான்.

அதைக்கேட்டு சௌடப்பன் மிக்க பரிதாபங் கொண்டான்.

"மேலும் ஜெமீந்தார் ஒரு லட்சத்தை இரண்டு லட்சங்களாக எழுதி வைத்துவிட்டார். எல்லாம் கடிதங்களில் எழுதிவைத்திருக்கிறோம். அதில் எழுபத்தைந்தாயிரம் ரூபாய்களை நீ கனகனுக்குச் சேர்ப்பித்து விட வேண்டும். நீ திரும்பி வருவதற்கு இரண்டு வாரங்கள் ஆகும். அதற்குள் நான் பூரண தேகசுகம் பெற்றுவிடுவேன் என்று நினைக்கிறேன்.........ஒருகால்.........நான்.........இற......ந்து போய்விட்டிருந்தால்........." என்று மாயாவிரோதி கூறுகையில் சௌடப்பன் அவனை இடைமறித்துப் பேசினான்.

(தொடரும்.)

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

ஈசுவர௵ புரட்டாசி௴—கலியுகாதி 5039, சாலிவாகனம் 1860,
பசலி 1347, கொல்லமாண்டு 1113, ஹிஜரி 1356,
இங்கிலீஷ் 1937௵ செப்டம்பர்௴—அக்டோபர்௴

புரட்டாசி	செப்டம்பர்	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்	யோகம்.	விசேஷங்கள்.
1	17	வெள்	து36-13	திரு26-35	சித்60	பரிவர்த்தனை துவாதசி
2	18	சனி	திர36-30	அவி27-8	சித்27-8அ	பிரதோஷம், யாத்திரை
3	19	ஞா	சது31-45	சத26-3	சித்60	அனந்த விரதம், 8-க்குள்
4	20	திங்	○27-33	பூர23-35	ம23-35சி	பௌர்ணமி [மழை
5	21	செவ்	பிர22-0	உத்20-8	அ20-8சித்	மாளயபட்ச ஆரம்பம்
6	22	புதன்	துதி15-55	ரே15-55	மர60	
7	23	வியா	திரி9-30	அஸ்11-28	அ11-28சி	
8	24	வெள்	சது3-3 பஞ்56-45	பர✻6-55	சித்60	
9	25	சனி	சஷ்50-50	கிரு2-33 ரோ58-33	அமி60	
10	26	ஞா	சப்45-33	மிரு55-10	சித்60	
11	27	திங்	அ40-40	திரு52-18	சி52-18அ	
12	28	செவ்	நவ36-33	புன50-8	சித்60	
13	29	புதன்	தச33-5	பூச48-38	சித்60	
14	30	வியா	ஏகா30-20	ஆயி47-45	சி47-45அ	சர்வ, மத்வ ஏகாதசி
15	1937௵ அக்டோபர்௴ 1	வெள்	து28-25	மக47-55	ம47-55சி	கரிநாள், ஜய துவாதசி
16	2	சனி	திர27-25	பூர48-48	சி48-48ம	கேதார விரதம், மாச சிவ
17	3	ஞா	சது27-30	உத்50-53	அமி60	வாகனமேற [ராத்திரி
18	4	திங்	●28-35	அஸ்54-8	சி54-8பிர	சர்வ, பிதுரு மாளய அமாவர்சை, அரசபிரதக்ஷணம்
19	5	செவ்	பிர31-18	சித்58-35	சித்60	நவராத்திரி ஆரம்பம்
20	6	புதன்	துதி34-58	சுவா60	சித்60	சந்திர தெரிசனம்
21	7	வியா	திரி40-3	சுவா4-20	அ4-20சி	வியாதியஸ்தர் குளிக்க
22	8	வெள்	சது46-3	வி11-15	சித்60	மாச சதுர்த்தி விரதம்
23	9	சனி	பஞ்52-40	அ18-48	சித்60	உபாங்கலலிதா கௌரி வி
24	10	ஞா	சஷ்59-20	கே26-40	ம26-40அ	சஷ்டி,குளமவெட்ட[ரதம்
25	21	திங்	சப்60	மூல34-18	சி34-18ம	சரஸ்வதி ஆவாஹனம்
26	12	செவ்	சப்5-20	பூரா41-5	சித41-5அ	கணிதாரம்பம்
27	13	புதன்	அ10-13	உத்46-20	அ46-20சி	துர்க்கை நவமி, சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை
28	14	வியா	நவ13-18	திரு49-55	சித்60	விஜயதசமி (விசேஷம்)
29	15	வெள்	தச14-27	அவி51-30	சித்60	துவிதலா விரதாரம்பம்
30	16	சனி	ஏகா13-40	சத50-55	அ50-55ம	சர்வ, மத்வ ஏகாதசி, துலா ரவி நா-38-18

சனி		கே	
	4-தனு-செ 4-சிம்ம-சுக் 18-கன்-புத 28-கன்-சுக்		சுக்
			புத
குரு	செ ராகு		சூரி

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMY MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.